பாவாணர்

குறைமதியர் தேக்கிவைத்த கறையிருளை

நீக்கவந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார்!

தன்மதிப்பின் கொடுமுடியாய், தன்னுரிமை முகில் இடியாய்,

ஆர்த்திலங்கும் சீர்த்தியினார்!

நன்றி கொன்ற தமிழினத்தின் பன்றித் தனத்தால்

புகழ் மறைக்கப்பட்டும், புறந்தள்ளப்பட்டும் குமைந்த ஈகளி!

அமைந்தொளிரும் குடவிளக்கு!

மடமைத் தமிழரின் அடிமைத் தனத்தால்

மிடிமை வாய்ப்பட்ட கடமைக் காவலர்!

– முனைவர் மு.தமிழ்க்குடிமகன்

'பெரியார் குடில்'
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை - 17.

பாவாணர் தமிழ்க்களஞ்சியம்

31

# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம்–31



## வண்ணனை மொழிநூலின் வழுவியல்

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
## தமிழ்க் களஞ்சியம்

**31**

## வண்ணனை மொழிநூலின் வழுவியல்

*ஆசிரியர்*

மொழிஞாயிறு **ஞா. தேவநேயப்பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**

*சென்னை - 600 017*

*நூற் குறிப்பு*

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 31** |
| ஆசிரியர் | : | மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 1968 |
| மறுபதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16 + 128 = 144 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **135/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**

**“பெரியார் குடில்”**

பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* ***தமிழ்மண் பதிப்பகம்*** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* ***இரா. இளங்குமரனார்*** *அவர்களும், மருத்துவர்* ***கு.பூங்காவனம்*** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர்.இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* ***மறைமலையடிகளும்,*** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* ***பாவேந்தரும்,*** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* ***பேரறிஞர் அண்ணா*** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர்* ***இராசமாணிக்கனாரும்,*** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* ***பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,*** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர்* ***தமிழ்குடிமகன்*** *அவர்களும்,*

தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர் **இளவரசு** அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி" பாவாணர் என்று முதுமுனைவர் **இளங்குமரனார்** அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்டவல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக்கருவூலங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை

*இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.*

**கோ. இளவழகன்,**
***பதிப்பாளர்.***

## வான்மழை வளச்சுரப்பு

*ஆழத்துள் ஆழமாய் அகழ்ந்து* ***தங்கம்*** *ஏன் எடுக்கப்படுகிறது? ஆழ்கடலுள் சென்று, உயிரைப் பணயம் வைத்து* ***முத்துக்*** *குளிக்கப் படுவது ஏன்?* ***பவழப்*** *பாளங்களை எடுப்பது ஏன்?* ***வயிரம்*** *முதலாம் மணிக்குலங்களை இடையறாமல் தேடித் தேடி எடுப்பது ஏன்?*

*அணிகலப் பொருள்கள் என்பதற்கு மட்டுமா? வீட்டிற்கு மட்டுமன்றி நாட்டுக்கும் ஈட்டுதற்கு அரிய* ***வைப்பு வளமாக*** *இருந்து, நாட்டின் பொருளியல் மேம்பாட்டுக்கு* ***அடிமணை யாகவும்*** *இவை இருப்பதால் தானே!*

*இவற்றினும் மேலாம் வைப்பு வளமும் உண்டோ? உண்டு! உண்டு! அவை* ***சான்றோர் நூல்கள்!***

*காலம் காலமாக அள்ளிக் கொண்டாலும் வற்றா வளமாய்த் திகழும்* ***அறிவுக் கருவூலமாம் நூல்கள்!***

*ஒன்றைக் கற்றால் ஒரு நூறாய் ஓராயிரமாய்ப் பல்கிப் பெருகத் தக்க பெறற்கரிய* ***தாய் நூல்களாம்*** *பேறமைந்த நூல்கள்!* ***சேய்நூல்களை ஈனவல்ல செழு நூல்கள்!***

*நுண் மாண் நுழைபுலத்* ***தாய் நூல்களாய் இருப்பினும்!*** *அவற்றைத் தாங்கிய* ***தாள்கள்,*** *எத்தகைய பேணுதல் உடையவை எனினும் கால வெள்ளத்தில் அழியக் கூடியவை தாமே!*

***கல்லெழுத்தே,*** *கதிர் வெப்பாலும் கடலுப்பாலும் காத்துப் பேணும் கடப்பாடில்லார் கைப்படலாலும் அழிந்து பட்டமை கண்கூடு தானே!*

***ஏட்டு வரைவுகள்,*** *நீரே நெருப்பே நீடித்த காலமே புற்றே போற்றா மடமையே என்பவற்றால் அழிந்து பட்டமைக்கு அளவு தானும் உண்டோ? மக்களுக்கு மாணப் பெரிய பயனாம் நூல்கள், கற்கும் மக்கள் பெருக்கத்திற்கும், பிறந்து பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கும் தக்க வகையில் அவர்களுக்குப் பாட்டன்*

*பாட்டியர் வைத்த* **பழந்தேட்டென்ன** *அந்நூல்கள், மீளமீளத் தட்டில்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டுவது* **நூற்பதிப்பர்** *தவிராக் கடமையல்லவோ!*

*அக்கடமையை அவர்கள் காலந்தோறும் கடப்பாடாகக் கொண்டு செய்ய, ஆளும் அரசும் வாழும் அறிவரும் அருந்நுணையாதல் தானே கட்டாயத் தேவை! இவ்வாறு பதிப்பரும் அறிவரும் ஆள்நரும் தத்தம் மூச்சுக் கடனாக,* **நூற்கொடை புரிதலுக்கு மேற்கொடை இல்லையாம்!**

**மொழிஞாயிறு பாவாணர் நூல்கள்** *ஒன்றா இரண்டா? நமக்கு எட்டாதவை போக எட்டிய நூல்கள்* **32.** *கட்டுரை பொழிவு முதலாம் வகையால் கிட்டிய திரட்டு நூல்கள்* **12.** *இன்னும்* **எட்டாத தொகுப்பும்** *அங்கொன்றும் இங்கொன்றும் வர வாய்ப்புண்டு!*

**கடித வரைவு பா வரைவு** *என மேலும் பெருகவும் வாய்ப்புண்டு!*

*இவற்றை எல்லாம் ஆயிரம் அச்சிட்டு அவ்வளவில் நின்று விட்டால், தேடுவார்க்குத் தேடும் பொழுதில் வாய்க்கும் திருவாகத் திகழக் கூடுமோ?*

*ஆதலால்,* **சேய் நூல்களுக்கு மூலமாம் தாய்நூல்கள், காலம் தோறும் வான்மழை வளச் சுரப்பாக வெளிப்பட வேண்டும் கட்டாயம் உணர்ந்து கடமை புரியும் வீறுடையார் வேண்டும்! மிக வேண்டும்!**

*இத்தகைய விழுமிய வீறுடையர் - இனமானச் செம்மல் - தமிழ்ப் போராளி - திருத்தகு* **கோ. இளவழகனார்,** *தாம் முந்து முழுதுறக் கொணர்ந்த பாவாணர் படைப்புகளை மீளமீளத் தமிழுலாக் கொள்ள வைக்கும் முன் முயற்சியாய், இம்* **மீள்பதிப்பை வழங்குகிறார்!** *தமிழுலகம் பயன் கொள்வதாக! பயன் செய்வதாக!*

*வாழிய நலனே! வாழிய நிலனே!*

**இன்ப அன்புடன்**

**இரா. இளங்குமரன்.**

# சான்றிதழ்

பண்டித ஞா. தேவநேயனார், பி.ஓ.எல். பொதுவாக மொழிநூல் ஆய்வு முறைகளைப் பின்பற்றித் தமிழ்ச்சொல் ஆராய்ச்சிபற்றி எழுதிய நூல்கள் தமிழ்மொழியின் நீண்டகாலத் தேவையினை நிறைவு செய்தன. தம்முடைய இளந்தைக் காலத்திலே தலைமைக் கண்காணியார் தவத்திரு திரஞ்சு (Trench) எழுதிய 'சொல்லாராய்ச்சி', பேராசிரியர் மாக்கசு முல்லர் எழுதிய 'மொழியறிவியல்', பேராசிரியர் சாய்சு எழுதிய 'ஒப்பியல் மொழிநூல்' முதலிய ஆங்கிய நூல்களை யாமே பெருவிருப்புடன் படித்துக்கொண்டிருக்கும்போது அந்த முறையில் தமிழ்ச் சொற்களை ஆராய வேண்டுமென்று விரும்பினேம். தமிழ்ப் பேரறிஞர்கட்குப் புலப்படாமல் மறைந்து கிடந்த விரிவாகவும் வியப்பாகவுமுள்ள தமிழ்மொழியறிவுப் பரப்பு, பண்டாரகர் கால்டுவெல் எழுதிய 'திராவிடமொழி களின் ஒப்பியல் ஆய்வு' நூலால் புலப்படலாயிற்று. எனினும் பண்டாரகர் கால்டுவெல், அறியப்படாத வட்டாரத்தில் செய்ததொரு முயற்சியாதலால் தமிழ்ச்சொற்களை யெல்லாம் விடாமல் நிறைவாக எடுத்தாராய்ந்துள்ளனர் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. இதுவே மொழியியலை ஆராய வேண்டு மென்று எம்மைத் தூண்டியது. எனவே 'ஞானசாகரம்' (அறிவுக்கடல்) என்னும் எம்முடைய இதழின் முதல் தொகுதியில் அத் துறையில் ஒன்றிரண்டு கட்டுரைகளை எழுதி வெளியிட்டேம். ஆனால் அப்போது சமயம், மெய்ப்பொருளியல், இலக்கிய வரலாறு ஆகிய துறைகளில் எம்முடைய மொழியாராய்ச்சித் துறையில் தொடர்ந்து ஈடுபடக் கூடவில்லை. ஆயினும் தகுதியுடைய அறிஞர் யாராவது இத் துறையில் ஆராய்வதற்கு முன்வரக்கூடுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேம். அப்போது யாழ்ப்பாணம் திருத்தந்தை ஞானப்பிரகாசர்தாம் எகிபதிய மொழியியல் ஆராய்ச்சி நூலை எமக்கு அனுப்பிவைத்தார். அது ஓரளவு எமக்கு மனநிறைவு அளித்தது. எனினும் மொழியியல் ஆராய்ச்சித் துறை மிகவும் விரிவும் ஆழமு முடையதாதலால் பழந்தமிழ்

இலக்கியங்களைக் கற்று அவற்றைக் கொண்டு நன்கு புரிந்து கொள்ளும் வகையில் மேலும் மொழியியல் ஆராய்ச்சி நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்று கருதினேம். அந்த நேரத்தில் திரு. தேவநேயனார் யாம் எதிர்பார்த்ததை ஏறத்தாழ முற்றும் நிறைவேற்றியது கண்டு பெருமகிழ்வுற்றேம். அத் துறையில் அவர் மிகவும் உழைப்பெடுத்து ஆராய்ந்து எழுதியிருப்பவற்றைத் தமிழ் அறிஞர்கள் நன்றாக நம்பலாம்.

சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயனார் ஒப்பற்ற தனித் திறமையுடையவர் என்றும், அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றேம்.

மேலும் திரு. தேவநேயனார் பதியச் சொல்லும் ஆசிரியரும் இன்புறுத்தும் சொற்பொழிவாளருமாவர். பல தமிழ்க் கழக ஆண்டு விழாக்களில் எமது தலைமையின்கீழ் அவர் சொற் பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவை கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் அமைந்து அவையோரைக் கிளர்ச்சியுறச் செய்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின. அவர் வருந்தியுழைத்து ஆராய்ச்சி செய்துவரும் அறிஞர் ஆதலால் அவரைப் பணியில் அமர்த்தும் எந்த நிலையத்துக்கும் அவரால் பேரும் புகழும் கிடைக்கப் பெறும் என்று யாம் முழு நம்பிக்கையோடு கூறுகின்றேம்.*

- **மறைமலையடிகள்**

* மறைமலையடிகளார் ஆங்கிலத்தில் எழுதிய சான்றிதழின் தமிழாக்கம்.

# முகவுரை

வெள்ளைக்காரர் சொல்வதெல்லாம் விழுமிய அறிவியல் என்னும் குருட்டுத்தனமான கருத்து, இந்தியாவில் இன்னும் கற்றாரிடத்தும் இருந்து வருகின்றது. வெள்ளை என்னும் சொல், வெண்ணிறக் கருத்தடிப்படையில், தூய்மையை மட்டுமன்றி வெறுமையையுங் குறிக்கும்.

நீராவியையும் மின்னாற்றலையும் அடிப்படையாகக் கொண்டமைந்த இக்காலப் பொறிவினை சூழ்ச்சியவினை அறிவியல்களெல்லாம், மேலையர் கண்டனவே. ஆயின், மொழிநூலோ உலகின் முதன்முதல் இலக்கணம் இயற்றப் பெற்ற தமிழில் தோன்றியமையால், தமிழர் கண்டதாகும். அது இக்காலத்திற்போல் விரிவடையாததேனும், மொழிகள் பல்காத முந்திய காலத்தில் தோன்றியமையால், அக்கால முறைமைப்படி முழுநிறைவானதே.

எல்லாக் கலைகட்கும் அறிவியல்கட்கும் வரலாறு அடிமணையும் முதுகந்தண்டுமாதலால், வரலாற்றை நீக்கி வரையப்பட்ட எந்நூலும், எவர் இயற்றியதேனும் அறிவியன் முறைப் பட்டதாகாது.

வணிகத்துறையிற்போன்றே மொழித்துறையிலும், ஒரு மொழி விளம்பரத்தினால் உயர்வதும் இன்னொரு மொழி அஃதின்மையால் தாழ்வதும் நேர்கின்றன. தம் பொருளை விளம்பரஞ் செய்வார் பிறர்பொருள் விளம்பரத்தைப் பல தீயவழிகளால் தடுப்பதும், எல்லாத் துறையிலும் வழக்கமா யிருந்து வருகின்றது.

விளம்பரத்தாலும் வேறுவகையாலும் பிறரை ஏமாற்று வதையே ஒருவர் மேற்கொள்ளினும், எல்லாரையும் எக்காலத்தும்

ஏமாற்றமுடியாது. ஒருசாராரை ஒரு வரைப்பட்ட காலத்திற்குத் தான் ஏமாற்றமுடியும்; ஒரு சாராரை எக்காலத்தும் ஏமாற்றலாம்; ஒரு சாராரையோ ஒருகாலத்தும் ஏமாற்ற முடியாது.

ஒரு பொருளின் உண்மையை ஒப்புக்கொள்ளுதற்கு நடுநிலைமையும் வேண்டும். அல்லாக்கால், ஏதேனுமொரு தொடர்புடையவர் பொருள் பிறர் பொருளினுந் தாழ்ந்த தாயிருப்பினும், உளச்சான்றிற்கு மாறாக அதை உயர்ந்ததென்றே கொள்ள நேரும்.

ஆயினும், பொதுவாக, இறுதியில் “மெய்வெல்லும்; பொய் தோற்கும்”என்றே நம்பப்படுதலால், ஆரிய விளம்பரத்தின் விளைவாக மறைந்து கிடக்கும் தமிழைப்பற்றிய உண்மைகளை அறிதற்குத் தடையாகவுள்ள வண்ணனை மொழிநூலின் வழுவியலை, மொழிநூல் கல்லாரும் கண்டறிந்து கொள்ளுமாறு, இச் சிறுநூலை எழுதத் துணிந்தேன்.

சமற்கிருதத்தைப் பரப்புவதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட பூனாத் தெக்காணக் கல்லூரியின் சார்பாக, ஆண்டுதோறும் நடத்தப்பெறும் வேனிற்பள்ளியில் அறுகிழமையும் இலையுதிர்காலப் பள்ளியில் முக்கிழமையும் பயிற்சிபெற்ற அளவிலேயே வண்ணனை மொழிநூலறிஞராகக் கிளம்பும் ஆங்கில பட்டந்தாங்கியரான மாணவர், தமிழிலக்கியப் பரப்பையும், பொருளிலக்கணச் சிறப்பையும் குமரிநாட்டுத் தமிழ்ப்பிறப்பையும் எங்ஙனம் அறியவல்லார்? என்பதை அறிஞர் கண்டுகொள்க.

இந் நூலின் கட்டடமும், உய்ப்பும்பற்றித் திருநெல்வேலித் தென்னிந்திய சை.சி.நூ.ப.க. ஆட்சித் தலைவர் திரு வ. சுப்பையாப் பிள்ளை அவர்கள் செய்த உதவிகள் பாராட்டத்தக்கன.

“ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”

பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி
மிகுத்ததனா லுண்டோ பயன்.

முன்னூல்போ லிந்நூலும் முத்தா மெழுத்தடுக்கி
நன்னூலா யச்சிட்டு நல்கினன்காண் - இந்நாளும்
பேரான பாரி பெயர்தாங்கும் அச்சகத்தான்
நாரா யணன்செட்டி நன்கு.

*காட்டுப்பாடி விரிவு,*
*மடங்கல், 28.8.1968*

**ஞா.தேவநேயன்**

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | ... | iii |
| வான்மழை வளச்சுரப்பு | ... | v |
| சான்றிதழ் | ... | vii |
| முகவுரை | ... | ix |


# நூலடக்கம்


**I. மொழிநூல்**

| | | |
|---|---|---|
| 1. மொழிநூல் இயல்வரையறை | ... | 1 |
| 2. மொழிநூல் தோற்றம் | ... | 2 |
| 3. மொழிநூல் முதன்மை | ... | 7 |
| 4. தமிழின் தொன்மை | ... | 10 |
| 5. தமிழ் மறைப்பு | ... | 28 |
| 6. மறைமலையடிகள் மாண்பு | ... | 72 |
| 7. வடவர் மொழிநூல் | ... | 73 |
| 8. மேலை மொழிநூல் வரலாறு | ... | 73 |
| 9. உலக மொழிக் குடும்பங்கள் | ... | 82 |
| 10. மொழித் தோற்றக் கொள்கைகள் | ... | 89 |

**II. வண்ணனை மொழிநூல்**

| | | |
|---|---|---|
| 1. மொழிநூற் குலைவு | ... | 93 |
| 2. வண்ணனை மொழிநூலின் வழுக்கள் | ... | 94 |
| 3. வண்ணனை மொழிநூலின் விளைவு | ... | 108 |

**III. உலகத் தமிழ்ப் பேரவைகள்**

| | | |
|---|---|---|
| 1. அனைத்துலகத் தமிழ்ப் பேரவை | ... | 113 |
| 2. உலகத் தமிழ்ப் பேரவை | ... | 113 |
| (1) முதல் மாநாடு | ... | 114 |
| (2) இரண்டாம் மாநாடு | ... | 114 |
| 3. முடிபு | ... | 125 |

# வண்ணனை மொழிநூலின் வழுவியல்

# 1

# மொழிநூல்

## மொழிநூல் இயல்வரையறை

மொழிநூல் என்பது, ஒரு மொழியின் அல்லது மொழிக்குடும்பத்தின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, சிறப்பியல், இனமொழி அல்லது இனமொழிக் குடும்பம் முதலிய வரலாற்றுக் கூறுகளையெல்லாம் விளக்கிக் கூறும் அறிவியல். ஆகவே வரலாறு, வண்ணனை, ஒப்புநோக்கு ஆகிய மும்முறைகளையும் அது ஒருங்கே தழுவியதாகும்.

மொழி என்பது, ஒரு நாட்டினத்தார் அல்லது குக்குலத்தார் தம் கருத்துகளையெல்லாம் வெளிப்படுத்தற்குப் பொதுவாகக் கையாளும் சொற் றொகுதி அல்லது ஒலித்தொகுதி.

( நாட்டினம் - Nation. குக்குலம் - Tribe ).

ஒரு தனிப்பட்ட மொழிபற்றிய மொழிநூலும் ஒப்பியலைத் தழுவுமேனும், பல்வேறு மொழிக் குடும்பங்கள்பற்றிய மொழிநூலிலேயே அவ்வொப்பியல் விளங்கித் தோன்றுவதால், ஒரே மொழிபற்றியதை அம் மொழியின் பெயராலும், ஒரே மொழிக்குடும்பம்பற்றியதை அக் குடும்பத் தின் பெயராலும், பல்வேறு மொழிக்குடும்பம்பற்றியதை ஒப்பியலின் பேராலும் குறிப்பது வழக்கமாகும்.

எ-டு: தமிழ் மொழிநூல், தமிழிய மொழிநூல், ஒப்பியன் மொழி நூல் (Comparative Philology)

தமிழும் திரவிடமும் சேர்ந்தது தமிழியம். தமிழல்லாத தமிழின மொழிகளே திரவிடம். தமிழ் ஆரியத் துணை வேண்டாத இயன்மொழி யென்றும், திரவிடம் அதை வேண்டும் திரிமொழியென்றும் வேறுபாடறிக.

இலக்கணம், சொற்பிறப்பியல் (Etymology), அகரமுதலிக் கலை (Lexicography) என்பன மொழிநூற்கு உறுப்பியல்களும்; வரலாறு, மாந்தனூல் (Anthropology), உடல்நூல் (Physiology), உளநூல், (Psychology) என்பன அதற்குத் துணை நூல்களும் ஆகும்.

## 2. மொழிநூல் தோற்றம்

ஆரியர் வருமுன்பே, தமிழிலக்கண நூலார் தமிழைச் செந்தமிழ் கொடுந்தமிழ் என இரண்டாக வகுத்து பாண்டிநாட்டைத் தன்னுட் கொண்ட செந்தமிழ் நிலத்தில் வழங்கிய சொற்களைச் செந்தமிழ்ச்சொல் என்றும், செந்தமிழ் நிலத்தின் வடக்கும் வடகிழக்கும் வடமேற்குமாகப் பல்வேறு திசைகளிலுள்ள எல்லைப்புற நாடுகளாகிய கொடுந்தமிழ் நிலங்களில் வழங்கிய சொற்களைத் திசைச்சொல் என்றும் வழங்கினர். பல திசைகளில் வழங்கிய சொற்களாதலால் பொதுவாகத் திசைச்சொல் (Provincial words) எனப்பட்டன.

திசைச்சொல் என்பன, செந்தமிழ் நிலத்து வழங்காது கொடுந்தமிழ் நிலங்களில் மட்டும் வழங்கிய திருந்திய சொற்களும் சொல் வழக்குகளுமே என்பதை,

“தென்பாண்டி நாட்டார் ஆ எருமை என்பவற்றைப் பெற்றம் என்றும், குட்டநாட்டார் தாயைத் தள்ளையென்றும்........... அருவா நாட்டார் சிறு குளத்தைக் கேணி என்றும், அருவா வடதலையார் குறுணியைக் குட்டை யென்றும் வழங்குப” என்று நச்சினார்க்கினியரும், அவரை யொட்டியே பிறரும், தம் காலத்திற்கேற்பத் திசைச்சொற்கு எடுத்துக் காட்டியதை நோக்கிக் கண்டு கொள்க.

இத் திசைச்சொற்கள், பெற்றோர் பிள்ளைகளினின்று கடன் கொள் வது போன்ற அகக்கடன் (Internal loan) என்று அறிக.

திசைச்சொல்லை வேற்றுமொழிச் சொல்லென்பார் மொழியாரா-ச்சியும் சொல்லாரா-ச்சியும் இல்லாதாரே. அவர் அங்ஙன் மயங்கற்கேது நன் னூலார் கொடுந்தமிழ் நிலங்களைப் பதினெட்டாகக் கூறியதே.

கொடுந்தமிழ் நிலங்கள், தலைக்கழகக் காலத்திலிருந்தனவும் இடைக் கழகக் காலத்திலிருந்தனவும் கடைக்கழகக் காலத்திருந்தனவும் வெவ் வேறாம்.

இடைக்கழகக் காலத்திற்கும் கடைக்கழகக் காலத்திற்கும் இடைப் பட்டிருந்த தொல்காப்பியர் கூறிய பன்னிரு கொடுந்தமிழ் நிலங்களையும், நச்சினார்க்கினியர் போன்ற பிற்கால வுரையாசிரியர் அகக்கொடுந்தமிழ் நிலமும் புறக் கொடுந்தமிழ் நிலமும் என இருமடியாக்கி,

> "இனிப் பன்னிரண்டையுஞ் சூழ்ந்த பன்னிரண்டாவன: சிங்களமும் பழந்தீவுங் கொல்லமுங் கூபமுங் கொங்கணமுந் துளுவுங் குடகமுங் கரு நடமுங் கூடமும் வடுகுந் தெலுங்குங் கலிங்கமுமாம்."

> "சிங்களம் அந்தோ வென்பது; கருநடங் கரைய சிக்க குளிர என் பன; வடுகு செப்பென்பது; தெலுங்கு எருத்தைப் பாண்டிலென்பது; துளு மாமரத் தைக் கொக்கென்பது; ஒழிந்தவற்றிற்கும் வந்துழிக் காண்க."

என்று உரைப்பாராயினர். மொழிகள் திரிந்துகொண்டே யிருப்பதால், முற்காலக் கொடுந்தமிழ்களே பிற்காலத் திராவிட மொழிகள் என்றறிதல் வேண்டும். முதலிரு கழகக் காலத்தும் இருந்த கொடுந்தமிழ் நிலங்கள் இற்றைத் திரவிடமொழி நிலங்களே. திரவிட மொழிகள் ஆங்கிலமும் வடமொழியும் போன்ற அயன்மொழிகளல்ல. ஆகவே, திசைச்சொல் என்பது அயன் மொழிச் சொல்லன்று.

அந்தோ என்பது தமிழினின்று சிங்களஞ் சென்று வழங்குஞ் சொல்லே யன்றி, சிங்களத்தினின்று தமிழுக்கு வந்ததன்று. வடமொழியிலும் இது வழங்கும்.

அத்தன் - அத்தோ - அந்தோ - ஹந்த(சிங்., வ.)
அச்சன் - அச்சோ
அக்கை - அக்கோ - அகோ
அம்மை - அம்மோ
அன்னை - அன்னோ
ஐயன் - ஐயோ, ஐயவோ, ஐயகோ

பெற்றோரைக் குறிக்குஞ் சொற்கள் விளிவேற்றுமை வடிவில் இரக்கமும் வியப்பும் உணர்த்தும் இடைச்சொல்லாவதை, என் 'செ. ப. க. க. அ. சீர் கேடு' என்னும் சுவடியைக் கண்டு தெளிக.

செந்தமிழ்ச் சொல்லை இயற்சொல் திரிசொல் என இருவகைப் படுத்தி, வேரும் (root), அடியும் (stem), முதனிலையும் (theme) ஆன இயல்பான

சொல்லை இயற்சொல் (Primitive) என்றும், அதனின்றும் திரிந்த சொல் லைத் திரிசொல் (Derivative) என்றும், குறித்தனர்.

| எ - டு: | **இயற்சொல்** | **திரிசொல்** |
|---|---|---|
| | நல் | நலம், நன்கு, நன்றி, நல்கு |
| | வெள் | வெள்ளம், வெள்ளி, வெளிறு, வெள்ளை |
| | செல் | செலவு, செல்வம், சென்று, சென்றான் |

முன்னொட்டும் ஈறும் பெறாது அகவுறுப்பு மட்டும் திரிந்த சொல்லை முதனிலைத் திரிசொல் (primary derivative) என்றும், முன்னொட் டேனும் ஈறேனும் இரண்டுமேனும் பெற்றுத் திரிந்த சொல்லை வழிநிலைத் திரிசொல் (secondary derivative) என்றும் கூறுவர் ஆங்கில இலக்கண வாசிரியர்.

| எ-டு: | **இயற்சொல்** | **முதனிலைத் திரிசொல்** | **வழிநிலைத் திரிசொல்** |
|---|---|---|---|
| | வெல் | வென் (வெற்றி) | ............... |
| | உண் | ஊண் | ................ |
| | செல் | ............... | மீச்செல், செலவு, மீச்செலவு |

உரையாசிரியன்மார் பிற்காலத்தவ ராதலால், இயற்சொல் திரிசொல் என்பவற்றின் உண்மையான இயல்பைத் தெளிவா- உணராவிடினும், ஒரு மருங்கு அறிந்தே, "திரிதலாவது உறுப்புத் திரிதலும். முழுவதுந் திரிதலுமென இருவகைத்து. கிள்ளை மஞ்ஞை என்பன உறுப்புத் திரிந்தன. விலங் கல் விண்டு என்பன முழுவதும் திரிந்தன" என்று கூறிப்போயினர். கிளி என்பது கிள்ளை யென்றும், மயில் என்பது மஞ்ஞையென்றும் திரிந்தது உறுப்புத் திரிதல் என்றும், மலை என்பது விலங்கல் என்றும் விண்டு என் றும் திரிந்தது முழுவதுந் திரிதல் என்றும் அவர் கொண்டனர். இவற்றுள் முன்னது சொற்றொடர்பு கொள்வதால் ஒருமருங்கே வழுவாம்: பின்னது பொருட்டொடர்பே கொள்வதால் முற்றும் வழுவாம்.

இனி, தமிழர் திரிசொற்களை முதனிலை, ஈறு, இடைநிலை, சாரியை, புணர்ச்சி, திரிபு என ஆறுறுப்புகளாகப் பகுத்து, சொல்லமைப்பு முற்றுங் கண்டுவிட்டனர். வேற்றுமையுருபும் ஈற்றுள் அடங்கும்.

திரிபு மூவகைப் புணர்ச்சித் திரிபும் அறுவகைச் செ-யுள் திரிபுமாக இருபாற்பட்டதென்று ஆ-ந்தறிந்தனர். செ-யுட்டிரிபுகள் செ-யுளாற் பெயர்

பெற்றிருப்பினும், உரைநடைச் சொல்லாக்கத்திற்கும் ஒத்த தோன் றல் திரிதல் கெடுதல் வகைகளே.

இனி, சொற்கள் மட்டுமன்றிச் சொல்லுறுப்புகளும் வெளிப்படை யாகவும் குறிப்பாகவும் பொருளும் பொருட்கரணியமுங் கொண்டனவே யென்று தம் நுண்மாண் நுழைபுலத்தால் ஆ-ந்து கண்டனர். சில சொற் கட்கு, நோக்கியமட்டில் வேர்ப்பொருட் கரணியம் தோன்றாவிடினும், ஆழ்ந்து கூர்ந்து ஆரா-ந்தால் அதைக் கண்டுகொள்ளலாமென்றும் ஆரா-ச்சி யா ளரை ஊக்கினர். பொருட்பாடுபற்றிச் சொற்களை ஒருபொருட் பலசொல் (synonyms), பலபொரு ளொருசொல் (homonym) என்றும் பகுத்தனர்.

ஆரியர் வந்து தமிழ்நாட்டில் தங்கியபின், தமிழைக் கெடுத்தற் கென்றே மெல்லமெல்ல ஒவ்வொரு சொல்லாகச் சில வடசொற்களைத் தமிழிற் புகுத்தி, சில சார்பிலக்கண நூலும் இயற்றி, அவற்றில் வடசொல் லும் தமிழ்ச் செ-யு ளுறுப்பாகு மென்று கூறிவிட்டனர். அக்காலத்து அவர் நிலத்தேவர் என்றும் அவர் மொழி தேவமொழியென்றும் நம்பியதால், தமி ழர் வடசொற் கலப்பைத் தடுக்கும் ஆற்றல் இலராயினர்.

தொல்காப்பியத்திலேயே முதன்முதல் வடசொல் தமிழ்ச் செ-யு ளுறுப்பாகச் சொல்லப்பட்டதாகத் தெரிகின்றது. அக்காலத்துத்தமிழிற் கலந்த அயன் மொழிச்சொல் வடசொல் ஒன்றே. அதனால் அதை அம் மொழி யின் பெயராலேயே குறித்தனர்.

சொற்களையெல்லாம் மொழிநூன் முறையில் இயற்சொல் திரிசொல் திசைச்சொல் என மூன்றாக வகுத்தது போன்றே, இலக்கணமுறையில் பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் என மூன்றாக முன்னரே வகுத்திருந்தனர். சொற்களின் வழக்காற்றை அறிதற்கும், இடம்நோக்கிச் சொற்பொரு ளுணர்தற்கும், சொல்லுறுப்புகளைப் பகுத்தற்கும் இலக் கணவறிவு இன்றியமையாததாதலின், மெ-ப்பொருளியற்கு ஏரணம்போல் மொழிநூற்கு இலக்கண மும் துணையான முன்னறி கருவிநூலாம்.

இற்றைத் தமிழிலக்கண நூல்களுள் முதலதான தொல்காப்பியத் தி லுள்ள மொழிநூல் நூற்பாக்கள் வருமாறு:

**“இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்**
**றனைத்தே செ–யுள் ஈட்டச் சொல்லே.” (880)**

"அவற்றுள்
இயற்சொற் றாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே." (881)

"ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி." (882)

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி." (883)

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே." (884)

"அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வழிய என்மனார் புலவர்." (886)

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே." (640)

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா." (877)

"தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே." (642)

"சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே." (643)

"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப." (644)

சொல்லுறுப்புகள் புணரியல், வேற்றுமையியல், பெயரியல், வினையியல் ஆகிய இயல்களிற் கூறப்பட்டுள்ளன.

உரிச்சொல் என்பது இலக்கணவகைச் சொல்லன்று, ஆரியர் வந்த பின், செ-யுளிலுள்ள அருஞ்சொற் பொருளுணர்த்தும் சொற்களஞ்சியம் போல் அது தொடங்கியதாகத் தோன்றுகின்றது.

ஒருபொருட் பலசொல், பலபொரு ளொருசொல் என்னும் பாகுபாடு பொதுவாதலால், இயற்சொற்கும் ஏற்கும்.

எ-டு: கொள் = வாங்கு, சுற்று(வினை), காணம்(பெயர்)-பல பொரு ளொருசொல்.

உரை, சொல், மொழி - ஒருபொருட் பலசொல்.

தொல்காப்பியம் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் ஆக்கப்பட்ட பாணி னீயத் திற்கு முந்தி 7ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற நூலாதலாலும், அது அகத்தியமும் அதற்கு முன்னூலுமான “முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி” இயன்றதாதலாலும், மேற்காட்டிய தொல்காப்பிய நூற்பாக்களே மொழிநூல்பற்றி உலகில் முதன்முதல் எழுந்தவை யென்பது தெள்ளத் தெளிவாம்.

இனி, வேதப் பிராதிசாக்கியங்களைத் தொல்காப்பியத்திற்கு முந்தின வாகக் காட்ட முயலினும், தொல்காப்பியம் கி.மு. பல்லாயிரம் ஆண்டு கட்கு முந்திய முதலிரு கழக இலக்கண நூல்களின் வழிவந்த சார்பிற் சார்பு நூலேயாதலின், அம் முயற்சி வீணே யென்பது தெரிதரு தேற்றமாம்.

இக்காலத்தும் வடமொழித் துணையின்றித் தனித்து வழங்கவல்ல தமிழுக்குத் தொல்காப்பியர் காலத்தில் வடசொற்றுணை தேவையின் றேனும், அதை அவர்தம் நூலிற் குறித்தது அவரது வரையிறந்த வடமொழிப் பற்றையே காட்டும்.

### 3. மொழிநூல் முதன்மை

ஒரு மொழியின் வரலாற்றையும் ஒரு சொல் எம்மொழிக்குரியதுஎன் பதையும் மட்டுமன்றி, ஒரு நூற்பாவின் உண்மையான பாடத்தையும் அல் லது வழுவையும் அறிய மொழிநூல் உதவுகின்றது.

**“சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே**
**அவைஔ என்னும் ஒன்றலங் கடையே” (62)**

என்பதே தொல்காப்பிய நூற்பாவின் சரியான பாடமாயின், அந் நூற்பாவின் ஈற்றடியை,

"அஐ ஔஎனும் மூன்றலங் கடையே" என மாற்றி, பல சகரமுதல் தென்சொற்களை வடசொல்லென்று காட்டற்கும் தமிழ் சொல்வளமற்ற மொழியென்று பழித்தற்கும், பன்னூற்றாண்டாகப் பயன்படுத்தி வந்திருக் கின்றனர் தமிழ்ப்பகைவர் என அறியலாம். அது உண்மையான பாடமன் றாயின், தொல் காப்பியர் வழுப்படக் கூறியுள்ளார் என்றே துணியலாம். இதை யறியாத உண்மைத் தமிழ்ப்பற்றாளர் சிலரும் அச்சிட்ட முதற்பதிப்பு களில் உள்ள பாடமே உண்மையான பாடமென்று கொண்டு, சகரமுதற் சொற்களெல்லாம் வடசொற் களென்றோ, தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்டவை யென்றோ, மயங்கிக் கூறுவாராயினர்.

நன்னூற்கு முதன்முதல் உரைகண்ட மயிலைநாத ருரையில் மேற் கோளாகக் காட்டப்பெற்றுள்ள,

**"சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி**
**சளிசகடு சட்டை சவளி – சவிசரடு**
**சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்**
**வந்தனவாற் சம்முதலும் வை"**

என்னும் பழைய நூற்பா, சகரமும் தமிழில் மொழிமுதலெழுத்தாம் என்பதை ஐயந்திரிபற நாட்டுகின்றது.

தமிழுக்கு இன்றியமையாதனவான 150-ற்கு மேற்பட்ட சகரமுதற் சொற்கள் தொன்றுதொட்டு இருவகை வழக்கிலும் வழங்கிவருவதால், அவற்றை வடசொல்லென்றோ பிற்காலத்தனவென்றோ கொள்வது மொழி நூற்கும் உண்மைக்கும் முற்றும் முரணாம்.

சக்கட்டை, சக்கந்து, சக்கந்தம், சக்கு, சக்கை, சகசக, சகடம், சகதி, சகோடம், சங்கங்குப்பி, சங்கு, சச்சரவு, சட்ட, சட்டகம், சட்டம், சட்டன், சட்டி, சட்டு, சட்டுவம், சட்டை, சடங்கம், சடங்கு, சடலம், சதரம், சடார், சடா-, சடை, சடைவு, சடைச்சி, சண்டு, சண்டை, சண்ணக்கடா, சண்ணம், சண்ணி, சண்ணு, சண்பு, சணம், சணா-, சணாவு, சத்தவி, சதக்கு, சதுப்பு, சதும்பை, சதை, சந்தனம், சந்தி, சந்து, சந்தை, சப்பட்டை, சப்பணம், சப் பரம், சப்பளி, சப்பன், சப்பாணி, சப்பாத்து, சப்பு, சப்பை, சம்பல், சம்பளம், சம்பளி, சம்பா, சம்பு, சம்பை, சம்மட்டி, சமட்டு, சமம், சமர், சமழ், சமன், சமயம், சமை (சமைதல், சமையல், சமையம்), சர், சரக்கு, சரசர, சரட்டு, சரடு, சரப்பளி, சரம்,

சரவட்டை, சரவடி, சாவை, சரள், சரி, சருகு, சரப்பளி, சரம், சரவட்டை, சரவடி, சரவை, சரள், சரி, சருகு, சருச்சரை, சரம், சர வட்டை, சரவடி, சரவை, சரள், சரி, சருகு, சருச்சரை, சருவம், சருவல், சருவு, சரேல், சல்லடம், சல்லடை, சல்லரி, சல்ல வட்டம், சல்லாரி, சல்லி, சல்சல்,சல்லு, சலக்கு, சலக்கம், சலகன், சலகு, சலகை, சலங்கு, சலங்கை, சலசல, சலம்பு, சலாகை, சலாம்பு, சலி, சலிகை, சலுக்கு, சவ்வு, சவக்கு, சவங்கு, சவட்டு, சவடி, சவடு, சவணி, சவம், சவர், சவர்க்களி, சவரி, சவலை, சவன், சவளம், சவளி, சவளை, சவளக்காரர், சவறு, சலி, சவுத்தல், சவுக்களி, சவை, சழக்கு, சழங்கு, சழி, சள், சள்ளிடு, சள்ளு, சள்ளுக்கா-, சள்ளுவாயன், சள்ளை, சளக்கு, சளசள, சளப்பு, சளம்பம், சளார், சளி, சற்று, சறாம்பு, சறுக்கு, சறை, சன்னம்

முதலிய சொற்களெல்லாம் ஆரியச் சொல்லென்றோ பிற்காலத்தவை யென்றோ கொள்வது அறிவுடைமைக்கு இழுக்காம்.

உலகில் முதன்முதல் நாகரிகமாகச் சமைத்துண்டவன் தமிழனாத லின் அவன் சட்டிவனையவும் சமையல் செ-யவும் தெரியாதவன் என்று கருத வொண்ணுமோ?

சில சகரமுதற் சொற்கள் எத்தனையோ கூட்டுச் சொற்களைப் பிறப் பிக்கின்றன.

எ-டு : சட்டக் கட்டில், சட்டக்கதவு, சட்டக்கல்வி, சட்டக்கால், சட்ட கப்பை, சட்டங்கட்டுதல், சட்டங்கொழித்தல், சட்ட திட்டம், சட்டந்தட்டுதல், சட்டந் தைத்தல், சட்டப்பரம்பு, சட்டப் பலகை, சட்டநம்பி, சட்டம் வாருதல், சட்டமழித்தல், சட்ட மிடுதல், சட்டவட்டம், சட்டவிளக்கு.

பல சகரமுதற் சொற்களின் இனச்சொற்கள் திரவிட மொழிகளிலும் உள்ளன.

எ-டு: **ம.** சம்பா, **க.** சம்பெ, **தெ.** சம்பாவுலு**.**

ஆரியர் வந்தபின் தமிழரின் அகக்கரணவாற்றல் குன்றித் தமிழ் வளர்ச்சி தடையுண்டதினால் ஆங்கிலராட்சி தோன்றும்வரை புதுச்சொற் கள் பெரும் பாலும் தமிழில் தோன்றவில்லை.

மொழிநூல் நோக்கும் சொல்லாரா-ச்சியுமின்றித் தொல்காப்பியரைப் பெருமைப்படுத்த வேண்டுமென்றே கருதுபவர், தமிழுக்கு நேரும் இழிவையும் இழுக்கையும் எள்ளளவும் எண்ணிப் பார்ப்பதில்லை.

சிலர் 62ஆம் தொல்காப்பிய நூற்பாவின் பாடவேறுபாட்டிலுள்ள 'அவை' என்னும் சொல்லைச் 'சகரக்கிளவி' என்பதனொடு தொடர்புபடுத்தி எண்ணிசைவில்லை யென்றும் மயங்குகின்றனர். 'அவை' என்பது முந்தின அடியிலுள்ள 'அவற்று' என்பதையே சுட்டுகின்றது.

'சகரக்கிளவியும் க த ந ப ம எனும் அவற்றோ ரற்றே, அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே' என்று இசைத்து, எளிதாகவும் இயற்கை யாகவும் தொடர் முடிபுகொள்வதைக் காண்க.

இனி, 'அஐ ஔ எனும்' என்னும் பாடத்தினும், 'அவைஔ என்னும்' என்னும் பாடம் எதுகைக்கும் ஒழுகிசைக்கும் ஏற்றதாயிருத்தலையும் நோக்குக.

ஆகவே, சகரமுதற் சொல்லும் தொன்றுதொட்ட தமிழ் வழக்கே யென்றும், அதுவும் இன்றியமையாத பெருவழக்கென்றும், அறிந்து கொள்க.

## *4. தமிழின் தொன்மை*

***நிலநூலியல் ஊழிகள் (Geological Eras)***

1. தொடக்க நிலையுயிர் ஊழி (Archezoic Era)
2. முந்துநிலையுயிர் ஊழி (Proteroxoic Era)
3. பண்டைநிலையுயிர் ஊழி (Paleozoic Era - Primary Period)
4. இடைநிலையுயிர் ஊழி (Mezozoic Era - Secondary Period)
5. அண்மை நிலையுயிர் ஊழி (Cainozoic Era)

***அண்மை நிலையுயிர் ஊழிப் பிரிவுகள்***

**1. மூன்றாம் மண்டலம் (Tertiary Period)**

(1) **விடியண்மை** (Eocene)

(2) **சில்லண்மை** (Miocene)

(3) **பல்லண்மை** (Pliocene)

**2. நான்காம் மண்டலம் (Quarternary Peroid)**

(1) **கழிபல்லண்மை** (Pleistocene)

(2) **அண்ணணிமை** (Recent)

## *நான்காம் மண்டலப் பிரிவுங் காலமும்*

### *கழிபல்லண்மை*

1. முதல் பனிக்கட்டிப் படல முற்படர்ச்சி (Ist Glacial Advance) - கி.மு. 475,000 - 450,000

2. முதற் பனிக்கட்டிப் படல இடைக்காலம் (Ist Inter Glacial Epoch) - கி.மு. 450,000 - 400,000

3. இரண்டாம் பனிக்கட்டிப் படல முற்படர்ச்சி (IInd Glacial Advance) - கி.மு. 400,000 - 375,000

4. இரண்டாம் பனிக்கட்டிப் படல இடைக்காலம் (IInd Inter Glacial Epoch) - கி.மு. 275,000 - 175,000

5. மூன்றாம் பனிக்கட்டிப் படல முற்படர்ச்சி (IIIrd Inter Glacial Epoch) - கி.மு. 175,000 - 150,000

6. மூன்றாம் பனிக்கட்டிப் படல முற்படர்ச்சி (IVth Glacial Advance) - கி.மு. 50,000 - 20,000

7. நாலாம் பனிக்கட்டிப் படல முற்படர்ச்சி (IVth Glacial Advance) - கி.மு. 50,000 - 25,000

2. அண்ணணிமை - பனிக்கட்டிப் படலப் பின்னைக் காலம் (Post Glacial Advance) தோரா. 25,000 ஆண்டுகள்.

### *மாந்தக் குரங்கின் வளர்ச்சிக் காலம்*

1. நெற்றுடைப்பான் குரக்கு மாந்தன் (Nut-cracker man or Sinjan thorpos Boist) காலம் - தோரா. கி.மு. 600,000

2. நிமிர்ந்த குரக்கு மாந்தன் (Pithecanthropos erectus) காலம் - தோரா. கி.மு. 500,000

### மாந்தன் தோற்ற வளர்ச்சிக் காலம்

1. மாந்தன் தோற்றம் - தோரா. கி.மு.100,000
2. தமிழன் (நாகரிக மாந்தன்) தோற்றம் - தோரா, கி.மு. 50,000
3. முழு நாகரிகத் தமிழன் தோற்றம் - தோரா. கி.மு. 10,000

மேலை நாடுகளுள் முதன்முதலாக நாகரிகமடைந்தது எகிபது. அதன் நாகரிகத் தோற்றம் கி.மு. 6000 என்று சொல்லப்படுகின்றது. அங்ஙன மாயின், எகிபதிய நாகரிகத்திற்கு முந்திய கும ரிநாட்டுத் தமிழ் நாகரிகத் தோற்றம் கி.மு.10,000என்று கூறுவதில், ஒருசிறிதும் உயர்வுநவிற்சியில்லை. பஃறுளி யாற்றங்கரைத் தென்மதுரைத் தலைக்கழகத் தோற்றக் காலமும் அதுவே.

### மாந்தனூற் பிரிவுகள்

1. உடலியல் மாந்தனூல் (Physical Anthropology)
2. குமுகவியல் மாந்தனூல் (Social Anthropology)
3. பண்பாட்டியல் மாந்தனூல் (Cultural Anthropology)

### மாந்தன் தோன்றிய வகை

உயிரினங்கள், அடிமட்டத்திலிருந்து உச்சிநிலை வரை, படிமுறை யா-த் தாழ்ந்த இனத்திலிருந்து உயர்ந்த இனமாக ஒன்றினொன்று தோன்றி வளர்ந்தன வென்று, நிலநூலார் (Geologists), உயிர்நூலார் (Biologists), மாந்த னூலார் (Anthropologists) முதலிய அறிவியல் நூலாரால் நம்பப்படினும், கடவுள் நம்பிக்கையில் உறைத்துநிற்கும் பெரும்பான் மக்களால் ஒப்புக்கொள்ளப் பெறவில்லை.

இங்ஙனம், மாந்தன் தோற்றம்பற்றித் திரிபாக்கம் (Evolution), கடவுட் படைப்பு (Divine Creation) என இருவேறு கொள்கைகள் உள.

திரிபாக்கக் கொள்கையரும் திரிபாக்கம் இறைவனால் நிகழ்த்தப் பெற்றதென்று கொள்ளும் நம்புமதத்தாரும் (Theists), அது இயற்கையா - நிகழ்ந்ததென்று கொள்ளும் நம்பாமதத்தாரும் (Athesits) என இரு சாரார்.

குரங்கு வகைகளுள் காட்டு மாந்தன் (orang - outang), குரக்கு மாந்தன் (pithecanthropos) முதலிய மாந்தற் போலிகள் (anthropoids) தோற்றத்தில் மாந்தனை ஓரளவு ஒத்திருப்பினும் தோல் மென்மை, மூளை வளர்ச்சி, பேச்சுத் திறன், நகையழுகை மெ-ப்பாடுகள் முதலிய மாந்தன் சிறப்பியல்புகளின்றி விலங்கு நிலையிலேயே இருத்தலால், குரக்கினம் உடலமைப்பில் மாந்தனுக்

கடுத்த நிலையிலுள்ள விலங்கினம் என்று கொள்வதல்லது, குரங்கினின்று மாந்தன் தோன்றினான் என்று கொள்வது பொருந்தாது. இங்ஙனமே ஏனை யினங்கட்கும் வடிவொப்புமையன்றிப் பிறப்புத்தொடர்பு கொள்வதற்கிட மில்லை. காலந்தோறும் உயிரினங்கள் வேறுபட்டும் உள்ளன. பல்வேறு நிலப் படைகளிற் காணப்பெறும் எலும்புக் கூடுகளும் கல்லுடம்புகளும் (fossils) தாழ்ந்த இனங்களைக் கீழும் உயர்ந்த இனங்களை மேலுமாகக் காட்டுகின்றன வெனின், அது இறைவன் உயி ரினங்களை ஏறுவரிசையிற் படைத்தானென்று கொள்வதற்கன்றித் திரிபாக்கக் கொள்கைக்குச் சான்றாகாது.

மாந்தன் துமுக்கி (gun) போன்ற பொறியியல் படைக்கலங்களை ஆக்கிக்கொள்ளு முன்பும், அவன் தோன்று முன்பும், இருந்த கைம்மலை களும், பனையும் தென்னையும் போன்ற பாம்பு பல்லிகளும் எருமையளவான பெரு வாவல்களும், வலிமை மிக்கிருந்தும் வளர்ச்சியின்றியும் எஞ் சாதும் இறந்துபட்டன.

ஆகவே, ஏனை யினங்களைப் போன்றே மாந்தனையும் இறைவன் படைத்தானென்று கொள்வதே சாலப் பொருத்தமாம்.

மாந்தன் தோற்றம்பற்றியும், ஒருவயிற் பிறப்பு (monogeny), பல வயிற் பிறப்பு, (polygeny) என இருவேறு கொள்கை யுள.

வரலாற்றிற் பின்னுக்குச் செல்லச் மாந்தர் தொகை சிறுத்துப் போவ தாலும், இன்று மக்கட்டொகை மிக்குள்ள பல தீவுகளும் நிலப்பகுதிகளும் ஒரு காலத்தில் மாந்தன் குடியிருப்பின்றி யிருந்தமையாலும், தட்பவெப்ப நிலையினாலேயே மக்கள் நிறம் வேறுபட்டுத் தோன்றுவதனாலும், எந்நாட்டு ஆடவனும் எந்நாட்டுப் பெண்டோடும் கூடி வாழ்வதனாலும், எவரும் எந்நாட்டு மொழியையுங் கற்கவும் எந்நாட்டு நாகரிகத்தையும் மேற் கொள்ளவும் இயல்வதனாலும், பல நாட்டுப் பழக்கவழக்கங்கள் ஒத்திருப் பதாலும், பல மொழிகள் ஒன்றோடொன்று தொடர்புடைமையாலும், மொழி கள் திரிபாலுங் கலப்பாலுமே ஒன்று பலவா-ப் பெருகி வந்திருப்பதனாலும், மக்களுறவினின்று பிரிக்கப்பட்ட பிள்ளைகள் ஒரு மொழியும் பேசாமையாலும், பலநாட்டு அறிஞர் கருத்து ஒன்றுபடுவதாலும், மன்பதை முழுவதும் அநாகரிக நிலையிலிருந்தே நாகரிகத்தை யடைந்திருப்பதனாலும், ஒரே பெற்

றோரிணையினின்றே மக்களெல்லாம் தோன்றியிருத்தல் வேண் டும். இது வரலாறு தழுவிய முடிபேயன்றிச் சமயக் கொள்கையன்று.

### *மாந்தன் நிலைகள்*

1. தேவ மாந்தன் (Homo Divinus)
2. இயற்கை மாந்தன் (Homo Naturalis)
3. அறிவுடை மாந்தன் (Homa Sapiens)

தேவ மாந்தன் என்னும் நிலையைக் கிறித்தவ இசலாம் மதங்களே கொள் கின்றன. சிவனிய (சைவ) மாலிய (வைணவ) சமண புத்த மதங்கள் கொள்வன ஏனை யிரண்டுமே. அவ் விரண்டையும் அவை தளையுயிர் என ஒன்றாகவே கொள்கின்றன.

தேவமாந்தன் உலகில் வாழ்ந்ததாகச் சொல்லப்படினும், நடையுடை மொழி முதலியவற்றில் உலகியல் மாந்தனின்றும் வேறுபட்டவனாதலால், அவன் செ-தி ஈண்டாரா-ச்சிக் குரியதன்று.

உலக முழுதும் பரவிய இயற்கை மாந்தர் முதற்கண் விலங்காண்டி (savage) நிலையிலேயே இருந்தனர். பின்னர் அவருட் பலர் அரை நாகரிக நிலையடைந்தனர். அதன் பின்னர் அறிவுடை மாந்தர் என்னும் நாகரிகமாந்தர் தோன்றினர். ஆதலால், உலக மாந்தர் இன்று இம் மூவகை நிலையிற் காணப் படுகின்றனர். ஆயினும், நாகரிக மாந்தர் தொடர்பினால் விலங்காண்டியர் மிகச் சிறுபான்மையராகி யுள்ளனர். விலங்காண்டிநிலைக் கும் அரை நாகரிகத்திற்கும் இடைப்பட்ட நிலையை அநாகரிகம் (Barbarism) எனலாம்.

முதன்முதல் தோன்றிய அறிவுடை மாந்தன் தமிழனே. பண்பாட் டியல் மாந்தனூலும் அவன் தோற்றத்தோடேயே தொடங்குகின்றது.

## *குமரிநாடே நாகரிக மாந்தன் பிறந்தகம்*

## *சான்றுகள்*

### *1. நிலத் தொன்மை*

ஞாலத்தில் மிகமிகப் பழைமையான நிலப்பகுதியும், பறவை தோன்று முன்பே நீண்ட காலம் நிலைத்திருந்ததும், குமரிக்கண்டமே, எகிபதிய நாகரிகத்திற்கு முந்தியது குமரிநாகரிகம்.

## 2. ஞால நடுமை

ஞாலநடுவிடம் நண்ணிலக்கோட்டை (equator) யடுத்த குமரிக்கண் டமேயன்றி, சமதட்பவெப்ப மண்டலத்தைச் சார்ந்ததும் நண்ணிலக்கடல் என்று தவறாகப் பெயர் பெற்றுள்ளதுமான இடத்தைச் சேர்ந்ததன்று.

ஆடையின்றி நீண்ட காலமாகக் குறிஞ்சிநிலத்தில் வாழ்ந்திருந்த இயற்கை மாந்தனின் உடல் முழுதும் போர்த்திருந்த மயிர் கழிவதற்கு, வெப்பநாடே ஏற்றது.

## 3. இயற்கை வளம்

இயற்கை விளையுளையே பெரும்பாலும் உண்டு வந்த முதற்கால மாந்த னுக்கேற்ற காயுங்கனியும் கிழங்கும் வித்தும் விலங்கும், பறவையும், மீனும், ஏராளமா-க் கிடைத்திருக்கக் கூடியது குமரிக்கண்டமே. ஆடும் மாடும், ஊனும் பாலுந் தோலும் ஒருங்கே உதவின.

## 4. உயிர்வாழ்விற்கு ஏற்பு

நான்காம் மண்டலக்காலத்தில் ஐரோப்பாவிற் படர்ந்த பனிக்கட்டிப் படலம் போன்ற இயற்கைப் பேரிடர்ப்பாடு, குமரிக்கண்டத்தில் நிகழ்ந்த தில்லை.

## 5. தமிழர் பழக்கவழக்கப் பழைமை

பண்பட்ட தென்னாட்டுப் பழங்குடி மக்களான தமிழரிடையிருந்து அருகிவரும் காது வளர்ப்பு, பச்சை குத்தல் முதலியன. முந்தியல் மாந்தர் பழக்கவழக்கங்களாகும்.

## 6. முந்தியல் மாந்தர் வாழ்நில அண்மை

விலங்காண்டியரும் அநாகரிகருமான முந்தியல் மாந்தர் வழியினர் வாழ் நிலங்களான ஆப்பிரிக்காவும் ஆத்திரேலியாவும், குமரிக்கண்ட மிருந்த இடத்தைச் சூழ்ந்தே யிருக்கின்றன. அநாகரிக நிலைக்கு அடுத்ததே நாகரிகநிலை.

## 7. உலக முதல் உயர்தனிச் செம்மொழி வழங்கிய இடம்

உலக முதற்றா- மொழியாகிய தமிழ் வழங்கிய இடம் பழம் பாண்டி நாடான குமரிநாடே.

## மாந்தன் நாகரிக வளர்ச்சிக் கேற்றது குமரிநாடே

### சான்றுகள்

#### 1. புள்மாப் பெருக்கம்

உழவுத்தொழிற்குரிய காளையெருமை முதலியனவும், காவற் றொழிற்குரிய நா- பூனை முதலியனவும், செ-தி விடுத்தற்குரிய கிளி புறா முதலி யனவும், குமரிநாட்டில் ஏராளமா யிருந்தன.

#### 2. கருவிப் பொருள்வளம்

வீடு கட்டுவதற்குரிய மரமுங் கல்லும் சுண்ணாம்பும், கருவியும் கல மும்அணிகலமும் படைக்கலமும் செ-தற்குரிய பொன்னும் வெள்ளியும் செம்பும் இரும்பும் மரமும், ஆடை நெ-தற்குரிய பட்டையும் நாரும் பஞ் சும் மயிரும், கூரை வே-தற்குரிய தட்டையுந் தாளும் புல்லுங் கோரை யும் தழையும் ஓலையும், கூடையும் பெட்டியும் சுளகும் முறமும் முடைதற் கேற்ற மூங்கிலும் பனைநாரும், பாயுங் கட்டிலும் பின்னற்குரிய கோரை யும் நாரும், திருமுகமும் சுவடியும் வரைதற்கேற்ற மடலும் ஓலையும், இசைக்கருவிகள் செ-தற்குரிய மரமுந் தோலும் நரம்பும், தீக்கடை கோலுங் கட்டையும், இன்னோரன்ன பிறவும், குமரிநாட்டிற்போல் வேறெங் குங் கிடைத்திருக்க முடியாது.

#### 3. நானில அண்மை

குறிஞ்சி நாகரிகத்தினின்று முல்லை நாகரிகத்திற்கும் முல்லை நாக ரிகத்தினின்று மருத நாகரிகத்திற்கும் கலஞ்செலுத்தி ஆறு கடத்தனின்று கடல் கடத்தற்கும், அடுத்தடுத்துச் செல்லுமாறு நானிலமும் அணித்தணித் தாகத் தொடர்ந்தமைந்திருந்தது, குமரிநாட்டிலேயே. இந்நிலைமை இற் றைத் தமிழ்நாட்டிலு முண்டு.

பஃறுளியாறும் குமரிமலைத்தொடரும் கங்கையும் பனிமலையும் போன்றி ருந்தனவே.

## தமிழ் தோன்றிய இடம் குமரிநாடே

### சான்றுகள்

1. தமிழும் அதனொடு தொடர்புள்ள திரவிட மொழிகளும் நாவலந் தேயத்திற்குள்ளேயே வழங்குதலும், தென்மொழி வடக்கே செல்லச் செல்ல ஆரியப் பாங்கில் வலுத்தும் உருத்தெரியாது திரிந்தும்

ஒடுங்கியும் இலக்கிய மற்றும் இடையீடுபட்டும், தெற்கே வரவரத் திருந்தியும் விரிந்தும் இலக்கியமுற்றும் செறிந்தும் இருத்தலும்.

2. நாவலந் தேயத்திற்கு வெளியே திரவிட மொழியின்மையும், மேலை மொழிகளிலுள்ள தென்சொற்கட் கெல்லாம் தமிழிலேயே வேரிருத்தலும்.

3. தென்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நாற்பெருந் தென்னிந்திய மொழிகளுள் முழுத் து-மையுள்ள தமிழ், தென்னாட்டின் தென்கோடியில் வழங்குதல்.

4. தமிழ்நாட்டுள்ளும் தெற்கே செல்லச் செல்லத் தமிழ் திருந்தியும் சிறந்தும் இருத்தலும், நெல்லைவட்டாரப் பேச்சு சொல்வள மிக்குத் தொல்லை முறையில் ஒலித்தலும், " திருத்தக் கல்லிற்குத் தெற்கிட்டுப் பிறந்தவன்" என்னும் வழக்கும், பாண்டிநாடும் பாண்டியனும் முறையே தமிழ்நாடு தமிழ்நாடன் என்று பெயர் பெற்றிருத்தலும்.

5. தமிழ், வடநாட்டு மொழிகளிலும் தெலுங்கு முதலிய திரவிட மொழி களிலுமுள்ள வல்லொலிகளின்றி, பெரும்பாலும் எளிய முப்பான் ஒலிகளே கொண்டிருத்தலும்; எட்டும் பத்தும் பன்னிரண்டுமாக மெ-யொலிகள்கொண்டமொழிகள் ஆத்திரேலியாவிலும் அதனை யடுத்த தீவுகளிலும் வழங்குதலும்.

6. தமிழிலக்கியம் முழு வளர்ச்சியடைந்து முத்தமிழானபின் ஏற்பட் ட தலைக்கழகம், 49 நாடுகளைக்கொண்டு ஈராயிரங்கல் தொலைவு தெற்கே நீண்டிருந்த குமரிக்கண்டத்தின் தென்கோடிப் பஃறுளியாற் றங்கரையில் மதுரை இருந்தமையும்; குமரிக்கண்டத்தின் உண்மை யைப்பற்றி இறையனாரகப்பொருளுரை மட்டுமன்றிப் புறநானூற்றுச் செ-யுளும் கலித்தொகைப் பாட்டும் சிலப்பதிகாரமும் அதன் அடியார்க்குநல்லாருரையும் குறித்துங் கூறியுமிருத்தலும்.

7. தென்னைமரம் ஆத்திரேலியத் தீவுகளினின்றே பிற தென் கிழக்குத் தீவுகட்குக்கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்படுவதும், குமரிக் கண்டத்தில் ஏழ்தெங்க நாடிருந்தமையும், தென் என்னுஞ் சொல் தென்னை மரத்தையும் தெற்குத்திசையையுங் குறித்தலும்.

8. பண்டைத் தமிழ்ச் செ-யுள்களிற் கூறப்பட்டுள்ள நீர்நாயும் உரையாசி ரியராற் குறிக்கப்பட்டுள்ள காரோதிமமும் (black swan) ஆத்திரேலி யாவிற்குத் தெற்கிலுள்ள தாசுமேனியாத்தீவில் இன்றுமிருத்தல்.

9. வணிகத்தால் வந்த இரண்டோர் அயல்நாட்டு விலங்குகளும் நிலைத்திணை (தாவர) வகைகளுந்தவிர, மற்றெல்லாக் கருப்பொருள்களும் காலவகைகளும் நிலவகைகளும் தென்னாட் டிற்குச் சிறப்பாகவுரியவையே பண்டைத் தமிழிலக்கியத்திற் கூறப்பட்டிருத்தல்.

10. நாகரிகத்தொடக்க நிலைக்குரிய குறிஞ்சி மகளிர் தழையுடையும் தனியூராட்சியும், தமிழர் முழுநாகரிக மடைந்த பின்பும் அகப் பொருட் செ-யுள்களிற் புலனெறி வழக்கமாகக் கூறப்பட்டு வருதல்.

11. நண்ணிலக் கோட்டையடுத்த வெப்பநாட்டு மக்கட்குரிய நிறத்தராகவே பண்டைத்தமிழர் குறிக்கப்பட்டிருத்தலும், பனிக்கட்டியைப் பற்றி ஒரு குறிப்புமின்மையும்.

12. தமிழ்மக்கள் பழங்கற்காலத்திலிருந்து தென்னாட்டிலேயே தொடர்ந்து வாழ்ந்து வந்திருத்தலும், அவர்க்கு வந்தேறிக் கருத்தின்மையும்,

13. தமிழர் பிறநாட்டினின்று வந்தவரென்று பண்டைத் தமிழிலக்கியத்தில் ஒரு வரலாற்றுக் குறிப்புமின்மை.

14. தென்னாடு, தென்னர் (தென்னாட்டார்), தென்மொழி, தென்னவன் (பாண்டியன்), தென்கலை என்னும் பெயர்கள் தொன்றுதொட்டு வழங்கிவந் துள்ளமை.

15. பண்டைத் தமிழர் தம் இறந்த முன்னோரைத் தென்புலத்தார் என்றும், அவர் இருந்ததாகக் கருதிய இடத்தைத் தென்புலம் அல்லது தென்னுலகு என்றும், கூற்றுவனைத் தென்புலக்கோன், தென்றிசைக் கிழவன் தென்றிசை முதல்வன் என்றும், குறித்து வந்தமை.

16. தெற்கு வடக்குத் தெரியாதவன், தெற்கும் வடக்குமா-த் திரிகின்ற வன், தென்வடல், தென்பல்லி வடபல்லி (அணிகள்) முதலிய வழக்குகளில், தென்றிசையே முற்குறிக்கப்பெறுதல்.

17. எண்டிசைத் தலைவருள் வடபால் மூவர் தவிர ஏனையவரெல்லாரும் குமரிநாட்டிற்கே பொருத்தமாயிருத்தல்.

18. தென்மொழிச் சொற்களுட் பெரும்பாலன கொத்துக்கொத்தாகவும் குலங்குலமாகவுந் தொடர்புகொண்டு தமிழிலேயே வழங்கி வருதல்.

19. தென்மொழி வளர்ச்சியின் ஐந்நிலைகளையும் தமிழே காட்டி நிற்றல்.

20. குமரிநாடே பழம் பாண்டிநாடாகக் கூறப்பட்டிருத்தலும், முதலிரு கழகங்களும் குமரிநாட்டிலேயே இருந்தமையும்.

## தமிழ் தானாகத் தோன்றிய இயற்கை மொழி

**சான்றுகள்**

1. தமிழ் முதுபழந் தொன்மையான குமரிநாட்டில் தோன்றியமை.
2. தமிழ் மூச்சொலியும் தனித்த முழங்கொலியும் இன்றிப் பெரும் பாலும் எளிய பதினெண் மெ-களைக் கொண்டிருத்தல்.
3. மொழி வளர்ச்சியின் ஐந்நிலைகளையும் தமிழ் காட்டி நிற்றல்.
4. எல்லாத் தமிழ்ச்சொற்களும் பொருள் குறித்தலும் இடுகுறிச் சொல் தமிழில் இன்மையும்.
5. தமிழ்ச்சொற்களின் ஈறுகளும் உருபுகளும் முதனிலைகளினின்றும் பெயர்களினின்றும் எளிதா-ப் பிரிக்கப் பெறுதல்.
6. தமிழில் முதல்வேற்றுமை யுருபின்மை
7. தமிழில் இலக்கணப்பால் (grammatical gender) இன்மை.
8. தமிழில் இருமையெண் இன்மை.
9. தமிழ்ச்சொற்றொடர்களின் இயற்கை முறை.

| எ - டு: | **தமிழ்** | **வடமொழி** | **ஆங்கிலம்** |
|---|---|---|---|
| | பன்னிரண்டு | துவாதசம் | twelve |

10. தமிழ் தோன்றி வளர்ந்தவகை இன்றும் அறியப்பெறுதல்.

## தமிழே உலகமுதல் தா-மொழி

**சான்றுகள்**

1. தமிழ் குமரிநாட்டில் தோன்றியமை.
2. பழந்தமிழ் திரவிடமொழிகட்குத் தாயாயிருத்தல்.
3. ஆரிய மொழிகளாகக் கருதப்படும் வடநாட்டு மொழிகளின் அடிப் படை தமிழாயிருத்தல்.
4. மேலையாரிய மொழிகளிலும் அடிப்படைச் சொற்கள் பல தமிழா யிருத்தல்.

5. இருமுது குரவரைக் குறிக்கும் அம்மை அப்பன் என்னும் தமிழ்ச் சொற்கள் திரிந்தும் திரியாதும் பெரும்பாற் பெருமொழிகளில் வழங்குதல்.
6. எல்லா மொழிக் குடும்பங்களிலும் ஒன்றிரண்டேனும் தமிழ்ச்சொல் லிருத்தல்.
7. ஆரியமொழிகளிலுள்ள சுட்டுச்சொற்களெல்லாம் தமிழ்ச்சுட் டெழுத்துகளினின்றே தோன்றியிருத்தல்.
8. தமிழிலக்கண அமைதிகள் பல மொழிகளிற் காணப்பெறுதல்.
9. பல மொழிகட்கு அல்லது மொழிக்குடும்பங்கட்குச் சிறப்பாகச் சொல்லப் பெறும் இலக்கண அமைதிகளின் மூலநிலை, தமிழில் இருத்தல்.

## *தமிழ் உயர்தனி இலக்கியச் செம்மொழி*

***சான்றுகள்***

1. பழந்தமிழ் திரவிடத்திற்குத் தாயாகவும் ஆரியத்திற்கு மூலமாக வும் இருத்தல்.
2. தமிழுக்கும் பிறமொழிகட்கும் பொதுவான தென்சொற்கள் தமிழி லேயே திருந்திய அல்லது தூய வடிவிலிருத்தல்.
3. தமிழின் சொல்வளம்.
4. தமிழிலக்கணம், பொருள்களை அவற்றின் பகுத்தறிவுண் மையும் இன்மையும்பற்றி, உயர்திணை அஃறிணை என இரு வகுப்பாக வகுத்தல்.
5. பண்டைத் தமிழிலக்கியமெல்லாம், உரையும் அகரமுதலியும் உட்படச் செ-யுள் வடிவிலிருந்தமை.
6. வெண்பா, கலிப்பா என்னும் செ-யுள் வகைகட்கொத்த யாப்பு வேறெம் மொழியிலு மின்மை.
7. இலக்கணப் புலவனின் மதிநுட்ப முதிர்ச்சியைக் காட்டும் பொரு ளிலக்கணம் என்றும் தமிழுக்கே தனிச்சிறப்பா யிருத்தல்.
8. முதன் முதலாகத் தனியொலியன்களை (phonemes) யெல்லாம் வகுத்ததும், உயிரையும் மெ-யையும் பிரித்ததும், உயிர்மெ-க்குத் தனிவரிவடிவமைத்தும், உயிர்களைக் குறில் நெடிலாகவும் மெ-

களை வலிமெலியிடையாகவும் முறைப் படுத்தியதுமான தமிழ் நெடுங்கணக்கு, குமரிநாட்டிலேயே கி.மு. 10ஆம் நூற்றாண்டிற்கு முன் தோன்றியமையும், தமிழெழுத்துகட் கெல்லாம் அறிவியல் முறைப்படி பிறப்பியல் கூறப்பட்டமையும்.

9. தமிழிலக்கணப் பாகுபாடுகளும் குறியீடுகளும் சிறந்த ஏரண முறையிலும் மெ-ப்பொருளியற் போங்கிலும் அமைந்திருத்தல்.

10. தமிழ் இலக்கண வகையீடும் நூற்பிரிவுகளின் முறைவைப்பும் வண்ணனையியல்பும் பெரும்பாலும் இயற்கையையும் உண்மை யையும் ஒட்டியிருத்தல்.

11. தமிழ் அறநூல்களெல்லாம் வகுப்பு வேற்றுமையின்றி நடுநிலைமை யாகவும் அன்பாகவும் அறவொழுக்கங்களையும் தண்டனை களையும் வகுத்திருத்தல்.

12. தமிழொடு இசை நாடகக் கலைகளையுஞ் சேர்த்து இயல் இசை நாடகம் எனத் தமிழை முத்தமிழாக வழங்கியமை.

13. மக்கள் வாழ்க்கைக் குறிக்கோளை அறம்பொரு ளின்பம் வீடென நான்காக வகுத்து, இம்மையிலும் மறுமையிலும் வீடுபேறடைதற் கேற்ற முழு முதற் கடவுளின் உருவமில்லா வழிபாட்டை முதன் முதற் கற்பித்தமை.

14. தமிழைச் செந்தமிழ் கொடுந்தமிழ் என்றும், செந்தமிழ்ச் சொற்களை இயற்சொல் திரிசொல்லென்றும், பகுத்து மொழிநூற் கூற்றையும் சொல்லிலக்கணத்தொடு சேர்த்தமை.

15. தமிழ் என்றுங் கெடாதிருக்குமாறு செந்தமிழையே நிலையான அளவையாக வரம்பிட்டமை.

16. செந்தமிழைக் காக்குமாறும் புது நூல்களிற் செந்தமிழையே கடைப் பிடிக்குமாறும் பாண்டியரால் முக்கழகங்கள் நிறுவப் பெற்றமை.

## *எபிரேயம் (Hebrew) உலக முதன்மொழி யன்மை*

### *சான்றுகள்*

1. எபிரேய மொழித்தோற்றம் கி.மு. 17ஆம் நூற்றாண்டது. எபிரேயம் என்பது இசரவேலர் அல்லது யூதர் எனப்படும் இனத்தார் மொழி.

இசரவேல் என்னும் யாக்கோபின் காலம் கி.மு. (1837-1689). அவன் மக்களுள் ஒருவன் யூதா. இசரவேல் வழியினர் இசரவேலர். யூதா வழியினர் யூதர்.

இசரவேலும் அவன் மக்களும் எகிபதிற்குச் சென்ற ஆண்டு கி.மு. 1700. அவர்கள் அங்குக் குடியமர்ந்த பின்னரே எபிரேயம் உருப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. எபிரேயம் ஒரு வல்லொலி மொழி.

3. எபிரேயம் தமிழ்போல் ஒரு தா-மொழி யன்று.

4. எபிரேயச் சொற்கள் பிற மொழிகளில் தமிழ்போற் கலக்க வில்லை.

5. நோவாகாலத்திற்குமுன் மேலையாசியா முழுதும் சேமிய மூல மொழியே வழங்கிற்று.

   நோவா காலம் கி.மு. 25ஆம் நூற்றாண்டு. "உலக முழுதும் ஒரே மொழியும் ஒரே பேச்சுமா யிருந்தது". (திருமறை (Bible), முதற் பொத்தகம் 11 : 1)

6. எபிரேயம் வழங்கிய நாடு குமரிக்கண்டம்போல் முது பழந்தொன் னாடன்று.

7. இசரவேலர் நீண்டகாலமாக நாடோடிகளாகவே யிருந்தனர்.

8. இசரவேலர் இறுதியாக வந்து குடியூன்றிய கானான் நாடும் குமரிநாடு போல் பெருவள முற்றதன்று.

9. கானான் நாட்டு நிலப்பரப்பு முதற்காலத்தில் கடலாயிருந்தாகத் தெரிகின்றது.

10. இசரவேலரின் முன்னோனான ஆபிரகாம் காலத்திற்கு முன்பே பல நாடுகளும் பல இனங்களும் பல மொழிகளும் தோன்றி விட்டன. அவன் பெயரின் முதற் சொல்லான ஆப் என்பது அப்பன் என்னும் தென்சொற் சிதைவே.

    ஆபிரகாமின் காலம் கி.மு. 20ஆம் நூற்றாண்டு. அவன் காலத்து நாடுகள், பாபிலோனியம், அசீரியம், கானான், பிலித்தியம், பாரசீகம், எகிபது முதலியன.

# ஆரியம் உலக முதன்மொழி யன்மை

**சான்றுகள்**

1. ஆரியம் தமிழின் அல்லது திரவிடத்தின் திரிபேயன்றி ஒரு தனி மொழியன்று.

ஆரியம் என்னும் இனப்பெயர் மொழித் திரிபினாலன்றி இனவேறு பாட்டால் ஏற்பட்டதன்று.

2. ஆரியத்தின் அடிப்படை தமிழே.

ஆரியச் சொற்களின்றித் தமிழை வழங்கமுடியும், ஆயின், தமிழ்ச் சொற்களின்றி ஆரியத்தை வழங்கமுடியாது.

3. ஆரியர்க்கென்று ஒரு தனியிட மில்லை.

இந்தியச் சிந்துவெளியினின்று ஐரோப்பியக் காண்டினே வியம் வெவ்வேறிடங்கள் ஆரியரின் பிறந்தகமாக அல்லது முதலிருப்பாகக் காட்டப்பெறுகின்றன. அவற்றுள் ஒன்றேனும் உண்மையான தன்று; அல்லது எல்லாம் சரியே.

திரவிடம் ஆரியமாக முதன்முதலில் திரிந்த இடம் வட மேலை ஐரோப்பா. அங்கிருந்து தென்கிழக்காகப் படிமுறையா-த் திரிந்து வந்து இந்தியாவிற்குட் புகுந்துள்ளது.

சமற்கிருதம் என்னும் அரைச் செயற்கையான இலக்கிய நடைமொழி உருவானது இந்தியாவிலேயே. அதில் ஐந்திலிரு பகுதி தமிழே.

ஆரியம் என்னும் பெயரும் முதன்முதல் இந்தியாவிலேயே தோன்றிற்று. அது பின்னர் மாக்கசு முல்லரால் மேலையின மொழி கட்கும் விரிவுறுத் தப்பெற்றது.

4. ஆரியம் மெல்லொலி மொழியன்று.

உலக மொழிகட்குள் வல்லொலி முதிர்ச்சிபெற்றது ஆரியமே. அதன் வல்லொலித் தன்மை தியூத்தானியத்தில் தொடங்கி இந்திய ஆரியத்தில் முதிர்கின்றது.

5. ஆரிய மொழியிலக்கண வமைதி செயற்கை வளர்ச்சி பெற்றது.

இருமையெண், இலக்கணப்பால், ஈறுபிரியாமை எழுவாயுருபு முதலியன இதற்கு எடுத்துக்காட்டாம்.

இருமையெண் தியூத்தானியத்திலும் இலத்தீனிலும் இல்லை.

6. ஆரியத்தின் முந்துவடிவமென்று தவறாகக் கருதப்படும் சமற் கிருதத்தின் நெடுங்கணக்கும் புணர்ச்சியும் எண் வேற்றுமையும் தமிழைப் பின்பற்றியனவே.

கால்டுவெலார் காலத்தில் பண்டைத் தமிழிலக்கியம் மறைப்புண்டு கிடந்தமையாலும், தமிழரிடை விழிப்பின்மையாலும், அவர் சமற்கிருதம் தமிழுக்குப்பட்டுள்ள கடனைத் தலைகீழாக மாற்றிக் கூறிவிட்டார்.

7. ஆரியமொழிகளிலுள்ள தென்சொற்கட்கெல்லாம் திருந்திய வடிவும் வேர்ப்பொருளும் தமிழிலேயே உள்ளன.

8. தொல்காப்பியம் ஆரிய வேதங்கட்குக் காலத்தாற் பிற்பட்ட தேனும் பொருளால் முற்பட்டதே.

தலைக்கழக நூல்களிற் சொல்லப்பட்ட இலக்கணத்தையே சார்பிற் சார்பான தொல்காப்பியம் எடுத்துக் கூறுகின்றது.

ஆயிரக்கணக்கான முதலிரு கழக நூல்களும் ஆரியரால் அழிக்கப்பட்டுவிட்டமையால், இன்று பண்டைத் தமிழிலக்கியம் சமற்கிருத இலக்கியத்திற்குப் பிற்பட்டதாகத் தோன்றுகின்றது.

9. நான்காம் மண்டலக் காலத்தில் (கி.மு. 475,000 - 25,000) ஐரோப்பா விற் பனிக்கட்டிப்படலப் படர்ச்சியிருந்தமையால், கி.மு. 50,000 ஆண்டுகட்கு முன் குமரிநாட்டில் தோன்றிய தமிழே உலகமுதன் மொழியா யிருத்தல் வேண்டும்.

**"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்"**

என்பதே அறிவுடைத் தமிழர் கொள்கை.

10. ஆரியமொழி தமிழ்போல் மொழிவளர்ச்சியின் முந்து நிலைகளைக் காட்டவில்லை.

11. ஆரியமொழி வரலாறு தமிழ்போற் குறிஞ்சி முல்லை மருதம் ஆகிய முந்தியல் மாந்தர் நாகரிக வளர்ச்சி நிலையங்களைக் காட்டவில்லை.

12. ஆரியர் வெள்ளையர்; தமிழரும் திரவிடரும், கரியரும் செ-யரும் பொன்னருமாவர்.

முந்தியல் மாந்தர் வெள்ளையரல்லர். ஆதலால் வெள்ளையர் மொழி உலக முதன்மொழியா யிருத்தல் முடியாது.

## மாந்தன் பிரிபு நடுவம்
## (Centre of Diffusion of Man)

மாந்தவினம் குமரிக்கண்டத்தினின்றே ஞாலத்தின் பல்வேறிடங்கட் கும் பிரிந்துபோயிருத்தல் வேண்டும்.

**சான்றுகள்**

1. இற்றையுலகில் முந்தியல் மாந்தராயுள்ள ஆத்திரேலியரும் தென் னாப்பிரிக்கரும் குமரிக்கண்டத்தைச் சேர்ந்தவரே. தென்னமெரிக் கரும் குமரிக் கண்டத்தினின்றே சென்றிருத்தல் வேண்டும்.

2. குமரிக்கண்டம் நண்ணிலக்கோட்டைச் சார்ந்த ஞாலநடுவிடம்.

3. தமிழ் சொல்வளர்ச்சியின் ஐவேறு நிலைகளைக் காட்டி நிற்றலால், அசைநிலைக் காலத்தில் சீனரும் மங்கோலியரும், கொளுவு நிலைக் காலத்தில் ஊரல். ஆல்தேக்க மொழியினரும், பகுசொன் னிலைக் காலத்தில் மேலையாரியரும் பிரித்து போயிருக்கலா மென்று கொள்ளப் போதிய இடமுண்டு. ஆத்திரேலியரும் ஆப்பிரிக்கரும் மொழித் தொடக்கநிலையில் தாம் இருந்த இடத்திலேயே தங்கிவிட்டனர். திரவிடர் நேர்வடக்கே தொடர்ந்து சென்று செந்தமிழைக் கொடுந் தமிழாகவும் கொச்சைத் தமிழாகவும் சிதைத்துக் கொண்டவர்.

4. பண்டை யெகிபதிய வரலாற்றை ஆரா-ந்த வில்லியர் தூவர்ட்டு (Villiers Stuart) என்பவர், ஐரோப்பியரின் முன்னோருட் பெரும் பாலார் ஆசியாவினின்று பாபெல் மந்தெபு (Babel Mandeb) என் னும் நீரிணைப்பு (straits) வழியாக ஆப்பிரிக்கக் கரையேறி எத்தி யோப்பியாவில் சில காலந் தங்கியபின், எகிபது நாட்டு நீலாற்றுவெளி நிலத்திற்குப் பரவின ரென்றும், பின்பு அங்கிருந்து நண்ணிலக் கடல்கடந்து ஐரோப்பாவிற் குடியேறி ஆரியராக மாறினரென்றும் எகிபதியக் குறுநிலமன்னரல்லாரையும் முதன்முதலாக ஒன்றாக இணைத்து ஓரரசாட்சி நிறுவிய மெனெசு (Menes) வேந்தனும்

தெற்கத்தியானேயென்றும், எகிபதிய மொழி ஐரோப்பிய மொழிகட் கெல்லாம் மூலமான அசைநிலை மொழியென்றும், அது சமற் கிருதத் திற்கு மூவாயிரம் ஆண்டு முற்பட்ட தென்றும், தம் 'ஓர் எகிபதிய அரசி யின் பள்ளிபடைப்படமாடம் (The Funeral Tent of An Egyptian Queen) என்னும் வரலாற்றாரா-ச்சி நூலின் இறுதியிற் கூறி யுள்ளார்.

முற்காலத்தில் அரபிக்கடற்பரப்பு நிலமாயிருந்ததினால் குமரிக் கண்டத்தினர் நிலவழியாக வட ஆப்பிரிக்காவிற்குச் சென்றிருத்தல் கூடும்.

5. நோவாகாலத்துப் பெருவெள்ளத்தின் பின் மக்கள் கிழக்கினின்று வந்தார்களென்று திருமறை கூறுகின்றது.

"மக்கள் கிழக்கேயிருந்து வழிச்செல்கையில் சினெயார் நாட்டிலே சமநிலத்தைக் கண்டு அங்கே குடியிருந்தார்கள். (முதற் பொத்தகம், 11:2)

6. நோவா காலத்திற்கு முன்பே ஐரோப்பாவிற் குடியேறிய மக்கள் வெள்ளையராகிவிட்டனர்.

தேவ புதல்வர் மாந்தர் மகளிரை மிகுந்த அழகியராகக் கண்டு, அவர்களிடமிருந்து தங்கட்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார் கள். (திரு மறை, மு.பொ. 6:2)

அக்காலத்து மக்கள் வெள்ளையரைத் தேவரென்று கருதினர்.

**"அந்நாள்களிற் பாரில் அரக்கர் இருந்தனர்."**

(திருமறை, மு.பொ. 6:4)

அரக்கர் எனப்பட்டவர் ஆப்பிரிக்கரா யிருந்திருத்தல் வேண்டும்.

7. ஐவேறு அல்லது அறுவேறு மொழிநிலைகளில், மாந்தரினத்தார் வெவ்வேறு திசைநோக்கிப் பிரிந்து சென்று வெவ்வேறு மொழி யினராகவும் நிறத்தினராகவும் இனத்தினராகவும் மாறுதற்கு ஏற்ற வாறு, மிகப் பழமையான தா-நிலப்பகுதி குமரிக்கண்டம் ஒன்றே.

8. தமிழ்ச்சொற்கள் மட்டுமன்றித் தமிழர் பழக்கவழக்கங்களும் பண்டை யுலகமெங்கும் பரவியிருந்திருக்கின்றன.

9. நாடு முழுவதும் முழுகுமாறு நிகழ்ந்த ஒரு பெருவெள்ளக்கதை, ஒவ் வொரு நாட்டிலும் வெவ்வேறு வகையிற் சொல்லப் பெறுகின்றது.

ஒருகால், இக் கதை, பழம் பாண்டிநாட்டைத் தன்னுட் கொண்ட குமரிக்கண்டக் கடல்கோள்களுள் ஒன்றைக் குறித்ததாக இருக்கலாம்.

தமிழ்நாட்டுக் கடல்கோள்களுள் ஒன்றைக் கூறும் சதாபத பிராமணம் என்னும் வேதக்கால வடநூல், ஒரு கடல்கோளுக்குத் தப்பிய அரசனைத் திராவிடபதி என்றும் அவன் பேழை தங்கிய இடத்தை வடமலை (குட மலை) என்றும் குறிக்கின்றது.

நாட்டிலுள்ள விலங்கு பறவைகளெல்லாம் ஒவ்வோரிணை உள்ளடங்கு மாறு, மாபெரு மரக்கலத்தை 4500 ஆண்டுகட்கு முன் செ-யக்கூடிய வன், தமிழன் ஒருவனே,

10. தமிழரின் எழுநாட்கிழமை தொன்றுதொட்டு நாகரிக நாடுகளி லெல்லாம் வழங்கிவருகின்றது.

## தமிழின் பொற்காலம்

எல்லாவகையிலும் தமிழ் தலைசிறந்திருந்த காலம் தலைக்கழகக் காலமே. அதன் சிறப்பு நிலைமைகளாவன:

1. அயன்மொழிச்சொல் ஒன்றுங் கலவாது தமிழ் முழுத் தூ-மையா- வழங்கியமை.
2. பொதுமக்களும் தமிழைத் திருத்தமா-ப் பேசியமை.
3. இலக்கணநூல்கள் இடைக்கழகத்திற் போன்றே முத்தமிழா- இயன்றமை.
4. புலவர் பெருந்தொகையினரா யிருந்தமை.
5. புலவரெல்லாரும் தமிழரா யிருந்தமை.
6. நூல்களெல்லாம் அழியாதிருந்தமை.
7. செந்தமிழ்ப் பாண்டிநாடு தெற்கே ஈராயிரங்கல் தொலைவு நீண்டும் பரந்தும் இருந்தமை.

## முக்கழகத் தலையிடை கடைமை

| | தலை | இடை | கடை |
|---|---|---|---|
| உறுப்பினர் தொகை | 549 | 59 | 49 |
| பாடினார் தொகை | 4449 | 3700 | 449 |

| | தலை | இடை | கடை |
|---|---|---|---|
| கழகமிருந்த ஆண்டுத்தொகை | 4440 | 3700 | 1850 |
| கழகம் புரந்த பாண்டியர் தொகை | 89 | 59 | 49 |
| பாவரங்கேறிய பாண்டியர் தொகை | 7 | 5 | 3 |

## 5. தமிழ் மறைப்பு

ஆரியப் பிராமணர் இந்தியப் பழங்குடிமக்களை என்றும் தம் அடிப் படுத்தித் தாமே உயர்வாக வாழத் தீர்மானித்ததால், தமிழரின் உயர்வைக் காட்டும் தமிழ்மொழியையும் இலக்கியத்தையும் இயன்றவரை மறைக்கத் திட்டமிட்டு, அதற்கு அடிமையரும் தந்நலக்காரருமான தமிழரைப் பல்வேறு வகையில் துணைக்கொண்டனர்.

ஆகவே, தமிழை மறைத்தவர் புறப்பகைவரும் அகப்பகைவரும் என இரு சாரார். புறப்பகைவர் செயல்களை என் 'தமிழ் வரலாறு' என்னும் நூலில் 'சிதைநிலைப் படலம்', 'மறைநிலைப் படலம்' என்னும் இரு பகுதிகளிற் காண்க.

## தமிழைக் கெடுத்த தமிழர்

### 1. முத்தமிழ் வேந்தர்

ஆரியர் வருகைக்குப் பிற்பட்ட முத்தமிழ் வேந்தருள் பெரும் பாலோர் ஆரியத்தைத் தலைமையாகக் கொண்டு தமிழைக் கெடுத்தனர். அவருள், பாண்டியன் பல்வேள்விச்சாலை முதுகுடுமிப் பெருவழுதியும் சோழன் அரச வேள்வி (இராசசூயம்) வேட்ட பெருநற்கிள்ளியும் சேரன் பல் யானைச் செல்கெழு குட்டுவனும் முதன்மையானவர் ஆவர்.

### 2. குயக்கொண்டான்

நக்கீரர் காலத்தில் கொண்டான் என்னும் குயவன் அவர் முன்பு 'ஆரி யம் நன்று; தமிழ் தீது.' எனவுரைத்து, அவராற் சாவிக்கப்பட்டுப் பின்னர்ப் பிறர் வேண்டுகோளால் உயிர்ப்பிக்கப்பெற்றான்.

### 3. புத்தமித்திரன்

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரன் என்னும் சிற்றரசன் வடமொழி யிலக்கணமும் தமிழிலக்கணமும் ஒன்றேயென்று பொருந்தாவகையிற் பொருத்தியும் வடமொழியை யுயர்த்தியும், வீரசோழன் பெயரால் வீர சோழியம் என்னும் ஐயதிகாரப் பிண்டு வழுநூலை இயற்றினான்.

## 4. சுவாமிநாத தேசிகர்

18ஆம் நூற்றாண்டில், திருவாவடுதுறைச் சிவமட வளாகத்தைச் சேர்ந்த சுவாமிநாத தேசிகர் என்னும் துறவியார், வீரசோழியக் கொள்கையை விரு விருப்புடன் த ழுவி. சொல்லிலக்கணம்பற்றிய சில நூற்பாக்களை இயற்றி 'இலக்கணக் கொத்து' என்று பெயரிட்டுத் தமிழுக்கு இரண்டகம் செ-தவர். தம் நூலின் பாயிரத்தில்,

"..............................................................
தொல்காப் பியந்திரு வள்ளுவ ராதிநூல்
வடமொழி நியாயம் வந்தன சிலவே
..............................................................
வடநூல் வழிகல வாதே தமிழைத்
தனியே நீர்தராத் தன்மை யென்னெனின்
இலக்கணம் இலக்கியம் ஏது நிமித்தம்
சாத்திரம் சூத்திரம் தந்திர வுத்தி
பகுதி விகுதி பதமே பதார்த்தம்
ஆதி அந்தம் அகாரம் மகாரம்
உதாரணம் மாத்திரை உவமை உருவகம்
விகற்பம் சந்தி விதியலங் காரம்
காலம் இலேசம் காரகம் ஞாபகம்
விசேடணம் விசேடியம் விகாரம்அதி காரம்
குணம்குணி யாதியாஞ் சொற்கோ ளன்றியும்
பிறிதினியை பின்மை நீக்குதல் பிறிதி
னியைபு நீக்குதல் என்னும் இலக்கணம்
முதலாப் பலவா மொழிபெயர்த் தனவும்
கொண்டனர் பண்டையர் உண்டோ இன்றோ
அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்றுள்
ஒன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ
அன்றியும் ஐந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவே நாணுவர் அறிவுடை யோரே
ஆகையால் யானும் அதுவே அறிக
வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே யென்றே யெண்ணுக
..............................................................

பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும் ஆண்டினும் இலையேல்
வடமொழி வெளிபெற வழங்கும் என்க" (இ.கொ.7)

என்று தலைகால் தெரியாமல் தாண்டவமாடித் தாறுமாறாக உளறிக் குவித்திருப்பது, மொழியாரா-ச்சியும் தனித்தமிழ் வளர்ச்சியும் மிக்க இக்காலத்திற்கு இம்மியும் ஏலா.

## இந் நூற்பாக் கூற்றுக்கட்கு மறுப்பு

தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் வடமொழி முறைமை வரவில்லை. இது தேசிகரின் திரிபுணர்ச்சியே.

இலக்கணம், இலக்கியம், ஏது, உத்தி, அகரம், மகரம், மாத்திரை, உவமை, உருவகம், காலம், அதிகாரம், குணம், குணி என்பன தமிழ்ச் சொற்களே. கரம் காரம் என்பன தமிழ் எழுத்துச் சாரியைகள். குறிற்குக் கரம், நெடிற்குக் காரம். அவற்றை வடமொழியாளர் கடன்கொண்டனர். அகாரம் மகாரம் என்பன செ-யுளில் இசைநிறைக்க வருமாயின் செ-யுள் திரிபாம்; அன்றேல் வழுவாம். வடமொழியில் இந் நெறியைத் தழுவுவதில்லை. வியாகரணம் சாகித்தியம் என்பனவே வடமொழியில் இலக்கண விலக்கியத்தைக் குறிக்குஞ் சொற்கள்.

| வடசொல் | தென்சொல் | வடசொல் | தென்சொல் |
|---|---|---|---|
| நியாயம் | முறை, முறைமை | விகற்பம் | வேறுபாடு |
| நிமித்தம் | பொருட்டு | சந்தி | புணர்ச்சி |
| சாத்திரம் | நூல், அறிவியல் | விதி | நெறி,நெறியீடு |
| சூத்திரம் | நூற்பா | அலங்காரம் | அணி |
| தந்திரம் | புலம், நூல் | இலேசம் | மறைப்பு, துக்குணி |
| பகுதி | முதனிலை | காரகம் | வினைமுடிபு |
| விகுதி | இறுதிநிலை, ஈறு | ஞாபகம் | நினைவு, நினைப்பு |
| பதம் | கிளவி, சொல் | விசேடணம் | அடை, அடைமொழி |
| பதார்த்தம் | சொற்பொருள் | விசேடியம் | அடைகொளி |
| ஆதி | தொடக்கம், முதல் | விகாரம் | திரிபு |
| அந்தம் | முடிவு,இறுதி,ஈறு | அநுவாதம் | வழிமொழிவு |
| உதாரணம் | காட்டு, எடுத்துக்காட்டு | | |

பிறிதினியைபின்மை நீக்குதல், பிறிதினியைபு நீக்குதல் என்பன, முறையே, இனஞ்சுட்டாப் பண்பு, இனஞ்சுட்டும் பண்பு என்றே முதன்முதல் தமிழிற் சொல்லப்பெற்றன.

> **"இனஞ்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை**
> **வழக்கா றல்ல செ–யு ளாறே"** **(501)**

என்று தொல்காப்பியம் கூறுதல் காண்க. தமிழைப் பின்பற்றியே வடவர் அயோக வ்யவச் சேதம், அந்யயோக வ்யவிச் சேதம் என்னும் குறியீடுகளை ஆக்கிக்கொண்டனர்.

பழந்தமி ழிலக்கண நூல்கள் வடமொழி யிலக்கண நூல்கட்கு முந்தின வும் மூலமுமாதலால், முதற்காலத் தமிழிலக்கணக் குறியீடுகள் மூலமே யன்றி மொழிபெயர்ப்பல்ல.

தமிழிலக்கண முதனூல்கள் உலகில் முதன்முதல் தோன்றியதினால், பல இலக்கணங்கள் குறியீடின்றியே உணர்த்தப்பெற்றன. பிற்கால நூலாராகிய வட மொழியாளர் அவற்றுட் சிலவற்றிற்குக் குறியீடுகளை ஆக்கிக் கொண்டனர்.

| எ-டு: | **தமிழ்நூல்** | **வடநூல்** |
|---|---|---|
| | வினைமுடிபு | காரகம் |

சில குறியீடுகள் வடமொழியிலேயே முதன்முதல் தோன்றின வேனும், அவை வடமொழிச் சென்ற தென்சொற்களால் ஆகியுள்ளன.

எ-டு: உருவகம், ஞாபகம்

உருத்தல் = தோன்றுதல். உரு-உருவு-உருவம்-ரூப(வ.) உருவம்-உருவகம்-ரூபக(வ.).

காண் - ஆங். கான் - க்னா - க்னோ - இலத். க்னோ(g) - கிரேக். க்னோ(g)-சமற். ஜ்ஞா-ஜ்ஞாப - ஜ்ஞாபக.

வடமொழி யணிநூல்கள் பிற்காலத்தனவாதலால், பல அணிப்பெயர்கள் வடநூல்களிற் புதிதா–த் தோன்றியுள்ளன. ஆயின், அவ்வணிகள் பழையனவே.

முதலிரு கழக நூல்களும் அழிக்கப்பட்டுவிட்டமையால், தேசிகர் காலத்தில் தனித்தமிழ் நூலில்லை. இன்று அவர் இருந்திருந்தால், மறை

மலையடிகள் நூல்களையும் என் நூல்களையுங் கண்டு தம் கருத்தைத் திருத்தியிருப்பார்; தம் கூற்றையும் மாற்றியிருப்பார்.

தமிழ் ஐந்தெழுத்தால் ஆனதன்று; 31 எழுத்தால் ஆனது. மேலும், மொழி என்பது சொற்றொகுதியேயன்றி எழுத்துத்தொகுதியன்று. வடமொழி 46 அல்லது 48 எழுத்துகளையுடையதேனும், தனிமொழி யன்று; தன் சொற்களுள் ஐந்திலிரு பகுதிக்குமேல் தமிழினின்று கடன் கொண்டதே. இதைத் தேசிகர் அறிந்திலர்.

வடமொழி யிலக்கணத்தில் எழுத்தும் சொல்லும் ஓரளவு தமிழைத் தழுவியன; யாப்பு முற்றிலும் வேறுபட்டது; அணி பெரும்பாலும் இரண் டிற்கும் பொதுவாம்; ஆயினும் சில தமிழ்ச்சொல்லணிகள் வடமொழியில் வரா; பொருள் வடமொழியில் இல்லவேயில்லை. இதுவே தமிழில் முதன் மையானது. ஆகவே, இரு மொழியிலும் இலக்கணம் ஒன்றேயென்பது அறியாமையின் பாற்பட்டதாம்.

வடமொழியிலக்கணம் தமிழிற்குத் தேவையில்லை.

## 5. அனவரத விநாயகம் பிள்ளையார்

இவர் இந் நூற்றாண்டுத் தொடக்கத்திற் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராயிருந்து, பல அடிப்படைத் தமிழ்ச்சொற்களைப் பிராகிருதத்தினின்றும் வடசொற்களினின்றும் திரிந்தனவாகக் காட்டி, பர். சு. கு. சட்டர்சியைப் பெரிதும் கெடுத்தவர்; ஆரா-ச்சியில்லா ஆசிரியர்க் கும் மாணவர்க்கும் தவறான வழிகாட்டியவர்.

## 6. வையாபுரிப் பிள்ளையார்

இவர் இந் நூற்றாண்டின் முற்பகுதியிற் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலிப் பதிப்பாசிரியராக இருந்து, அதை இந்தியப் பொது அகரமுதலி என்னும் அளவு கெடுத்தும், பின்னர் அப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராகிப் பல்வேறு ஆரா-ச்சி நூல்கள் எழுதித் தம்மால் இயன்ற அளவு தமிழைக் காட்டிக் கொடுத்தும், தம் பெயர் என்றும் நிலவுமாறு செ-தவராவர்.

## 7. மா. சாம்பசிவப் பிள்ளையார்

இந் நூற்றாண்டில் தோன்றிய தலைசிறந்த தமிழறிஞருள் ஒருவரும், தமிழ் ஆங்கிலம் வடமொழி சட்டம் ஆகிய நாற்றுறையிலும் கலைத் தலை மைப்

பட்டம் பெற்றவரும், சென்னைச் சட்டக்கல்லூரியிலும் அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராயிருந்தவரும், பல்லறிவியல் கற்றோரும், பன்னூலாசிரியரும், அரிய ஆரா-ச்சியாளரும், மாண்புமிக்க மதிவிளக்கம் பெற்றவரும், இறைவனருளால் ஆரிய அடிமைத்தனத்தி னின்று நீங்கித் தமிழ் மீட்புத் தொண்டை ஏற்றவரும் ஆகிய தாகூர் சட்ட விரிவுரையாளர் கா. சுப்பிரமணியப் பிள்ளையார் அவர்கள், தமிழர் விடு தலையும் முன்னேற்றமுங் கருதிச் 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளியிட்ட 'திருநான் மறை விளக்கம்' என்னும் சிறந்த கட்டுரையை, தம் தமிழறியாமை யாலும் ஆரியப்பற்றினாலும் சற்றும் தகாத முறையில் உண்மைக்கு மாறா கப் போலித்தனமாகக் கண்டித்து, ஆரா-ச்சியில்லாத் தமிழரை ஆரியப் படுகுழியினின்று எழவொண்ணாமற் செ-தவர் திரிசிரபுரம் திரு. மா. சாம்ப சிவப் பிள்ளையாராவர்.

## 8. சேதுப்பிள்ளையார்

தமிழ்ப்பகைவரான பிராமணத் தமிழ்ப் பண்டிதர் திரு. வையாபுரிப் பிள்ளையைத் துணைக்கொண்டு, தமிழ் ஆரியக் கிளைமொழியென்னும் முடிபுறத் தொகுத்த, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியின் ஐம்பாற்பட்ட நான்கு வகைக் குற்றங் குறைகளை எடுத்துக்காட்டுடன் ஆங் கிலத்தில் விளக்கியெழுதி, 'A Critical Survey of the Madras University Tamil Lexicon' என்னும் பெயராற் சுவடி வடிவில் வெளியிட்டு, 17-6-1955 அன்று சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு அனுப் பியதைப் பொருட்படுத்தாதபடி செ-தவரும்; வங்கப் பிராமணரும், தமிழை நேரடியாக கல்லாத பிராமணத் தமிழ்ப் புலவரும், தமிழ் வரலாற்றை அறியாத அனவரத விநாயகம் பிள்ளையும் ஆங்கிலத்தில் எழுதியவற்றின் வாயிலாகக் கற்றவரும், சமற்கிருத வெறியரும், ஆகிய பர். சு. கு. சட்டர்சியாரைத் தலைவராகவும் மொழி நூற் புலமையில்லாப் பலரை உறுப்பினராகவுங் கொண்ட ஒரு குழுவை, என் பணியை மேற் பார்க்கவும் வழிகாட்டி நடத்தவும் ஏற்படுத்தி, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நான் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி (An Etymological Dictionary of the Tamil Language) தொகுக்காதவாறு தடுத்துத் தமிழைக் கெடுத்தவரும்; சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவரும் அண்ணாமலை பல்கலைக்கழக அமர்த்தக் குழு வுறுப்பினரு மாயிருந்த பேரா. ரா.பி. சேதுப்பிள்ளையாராவர்.

பர்.சு.கு. சட்டர்சியாரின் முகவரியைத் தமிழறிஞர் யாருங் கேட்பின், அதில் அவர் பெயரை 'நன்னெறி முருகன்' என்று தமிழில் எழுதித் தருவது

வழக்கம். சுநீதி என்பது தமிழில் நன்னயம் (நன்னயன்) என்றே அமையும். நன்னெறி என்பது சன்மார்க்கம் என்பதன் மொழி பெயர்ப்பாகும். குமரன் என்பது தமிழ்ச்சொல்லே. குமார என்னும் அதன் திரிந்த வடிவமே வடசொல் ஆதலால், நன்னயக் குமரன் என்றே எழுதலாம்.

'நன்னெறி முருகன்' என்று பர். சு. கு. சட்டர்சி எழுதித் தருவதை வைத்துக் கொண்டே, அவரை மாபெருந் தமிழ்ப் பற்றாளராகக் காட்டி வானளாவப் புகழ்ந்து பேசிவிட்டார் பேரா. ரா.பி. சேதுப்பிள்ளையார்.

பர். சு. கு. சட்டர்சியின் உண்மையான நிலையைப் பின்வரும் கூற்று களால் உணர்ந்துகொள்க.

## *பர். சு. கு. சட்டர்சியாரின் தமிழறிவுங் கொள்கையும்*

### *1. நந்த மௌரியர் காலம் (1952)*

திரவிடமொழிக் குடும்பம் இன்று இந்தியாவிற்குள் அடங்கியுள்ளது; ஆயின் முற்காலத் திரவிடமொழியார் நண்ணிலக் கடற்கரைவாணரா யிருந் தாரெனின், திரவிடம், இந்தைரோப்பிய எல்லெனியர் கிரேக்க நாட்டிற்கு வருமுன், அந் நாட்டிலும் அதையடுத்த தீவுகளிலும் சின்ன ஆசியா விலும் வாழ்ந்திருந்த பண்டை ஈசியக் (Aegean) கடற்கரை மாந்தரும் சின்ன ஆசியா மக்களுமானவரின் மொழியொடு, பொதுவாயிருந்த மொழிக் குடும்பத்திற்குத் தள்ளப்பெற வேண்டும். இம் மக்களின் ஒரு குக்குல வகுப்பார் பெயர் த்ர் (அ)மில் (Dra(a)m̄il) அல்லது த்ர்(அ)மிழ் (Dr(a)miz̄) என்றிருந்ததென்று ஒரு கருத்தமைத்திருக்கின்றேன். இப் பெயர் கிரேத்தாத் தீவில் அவ் வகுப்பின் ஒரு கிளையில் எல்லெனிய எழுத்துக் கூட்டில் தெர்மிலை (Termilai) என்றும், தென் சின்ன ஆசியாவிலுள்ள (இ)லிசியாவில் அதன் இன்னொரு கிளையில் த்ர்ம்மிலி (Trmmili) என்றும் காணப்படுகின்றது. நண்ணிலக் கடற்கரையினின்று இந்தியாவிற்குக் குடிவந்த இம் மக்கள், வெவ்வேறு பெயர்கொண்ட வெவ்வேறு குக்குலங் களாயிருந்து இயற்கையாகக் கூடிய கூட்டமாவர். அக் குக்குலங்களுள் ஒன்று சான்றின்படி த்ரமிழ் (Dramiz) என்பதாகும். இப் பெயர் த்ரமிட (Dramia) அல்லது த்ரமிள (Dramia) என்றும், பின்பு உண்மையில் கிறித்தவ்வழக்கு முன்பே த்ரவட (Dravida) என்றும், ஆரியப்படுத்தப்பட்டது. கிறித்துவின் காலத்தையொட்டி, இப் பெயர் இதனைத் தாங்கும் மக்களின் வாயில் தமிஸ் (Damiz) என்றானது. இக்காலத்தில் அவர்கள் இந்தியாவின் தென்கோடியில் முற்றும் குடியமர்ந்து தங்கள்

பண்பாட்டை வளர்த்துத் தங்கள் நாடுகளையும் அமைத்துக்கொண்டார் கள். குச்சரத்தினின்றும் சிந்துவினின்றும் இலங்கைக்குக் குடியேறிய பண்டைச் சிங்களவரான ஆரிய மொழியார் இப் பெயரைக் கேட்டு, அதைப் பாளியிலும் சிங்களத்திலும் தமிள (Damia) என்று எழுதினார்கள். கிரேக்க எகிபதிய வணிகரும் இங் ஙனமே அப் பெயரைத் தமிர் (Damir) என்று செவியுற்று, தெளிவிளக்கமாகத் தமிழகம் என்று தன்னாட்டு வழக்கில் வழங்கிய நாட்டுப் பெயரைத் தமிரிக்கே (Damirike) என்று கிரேக்கத்திற் குறித்தனர். அதன்பின் சில பெரும் பரவலான ஒலித் திரிபுகள் த்ரமிழ்-தமிழ் (Dramiz-Damiz) மக்களின் மொழியை (கருதக்கூடியபடி கன்னடிகரின் மொழியைக்கூட) ஊடுற்றுச் சென்றன. அவற்றுள் ஒன்று முழங்கொலி மெ-கள் (g j d d b), முழங்கா வொலி மெ-களாகத் (k c t t p) திரிந்ததாகும். கிறித்துவிற்குப்பின் சில நூற்றாண்டுகளுள், அம் மொழி கழக (சங்க) நூல்கள் என்னும் இன்றுள்ள முதுபழ நூல்களிற் காணும் நிலையை அடைந்தது. அதன் பெயரும் தமிழ் (Tamilz or Tamil) என்றானது. அவ் வடிவே இன்றுந் தமிழ்மொழியில் வழங்கிவருகின்றது. பக். 321-2

## இதன் மறுப்பு

தனிப்பட்ட இரு சொற்களின் ஒலியொப்புமையைச் சான்றாகக் கொண்டு ஈரினத்தார்க்கு உறவு காட்டுவது, அறிவியல் முறைப்பட்ட ஆரா-ச்சியாகாது. அது தமிழ்ப் பேகனுக்கும் ஆங்கிலப் பேக்கனுக்கும் உறவு காட்டுவது போன்றதே.

மேலும், தமிழர் அல்லது திரவிடர் வடமேற்காகச் சென்று மேலை யாசியா வழியாக ஐரோப்பாவிற் குடியேறியதாகத் தெரிவதால், த்ர்மில் அல்லது த்ர்ம்மிலி என்று பெயர் பெற்றுக் கிரேத்தாத்தீவிலும் சின்ன ஆசி யாவிலும் குடியிருந்த மக்கள் வகுப்பார் அங்குக் குடிபோன தமிழர் அல்லது அவர் வழியினராகவே யிருந்திருக்கலாம். பேரா. இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய 'தமிழர் தோற்றமும் பரவலும்' என்னும் ஆங்கில நூலைக் காண்க.

சிறுபிள்ளைகள் பேச்சில் மெல்லொலிகளும் பெரியோர் பேச்சில் அவற் றோடு வல்லொலிகளும் தோன்றுவதுபோல், முந்தியல் மாந்தரான தமிழர் மொழியில் முழங்காவொலிகளும், அவருக்குப் பிந்தின திரவிடர் மொழிகளிலும் ஆரியர் மொழிகளிலும் அவற்றொடு முழங்கொலிகளும், தோன்றியிருப்பது இயற்கையே. ஆயின், முழங்காவொலி முழங் கொலியாக மாறுமேயன்றி முழங்கொலி முழங்காவொலியாக மாறாது.

ஆதலால், தமிழர் கிரேக்க நாட்டினின்று அல்லது நண்ணிலக் கடற்கரை யினின்று இங்கு வந்திருக்க முடியாது.

தென்மொழி இந்தியாவிற்குள்ளேயே முடங்கிக் கிடத்தலையும் தெற் கில் வரவரச் சிறத்தலையும், தமிழ் மெல்லொலி மொழியாகவும் பெருவள மொழியாகவு மிருத்தலையும், மேலை மொழிகளிலுள்ள தென்சொற்கட் கெல்லாம் வேரும் வேர்ப்பொருளும் தமிழே தாங்கி நிற்றலையும், நடு நிலையாக நோக்குவார் தமிழர் வெளிநாட்டினின்று வந்தேறிகள் என்னும் கொள்கையைக் கனவிலுங் கொள்ளார். இக் கொள்கையரெல்லாரும் தமிழின் சொல்வளத்தையும், கொத்துக்கொத்தாகவும் குடும்பங் குடும்ப மாகவும் குலங்குலமாகவும் தொடர்புகொண்டுள்ள சொல்லொழுங்கையும் ஒருசிறிதும் ஆ-ந்தறியாதவரே யாவர். மேலும், பிற்கால வொலிகளாகிய முழங்கொலிகளை முற்கால வொலிகளாகிய முழங்காவொலிகட்கு மூல மாகக் காட்டுவது, கறந்த பாலைக் காம்பிற் கேற்றுவதும் வெடித்த பஞ்சை விரிந்த தோட்டிற்குட் புகுத்துவதுமே.

தமிழர் கிரேக்க நாட்டினின்று வந்தவராயின், தமிழ் அங்கேயே தூ-மையாகவும் இங்குத் திரிந்தும் வழங்குதல் வேண்டும். கிரேக்க மொழியிலுள்ள தொடர்பற்ற சில தென்சொற்களையே சான்றாகக் காட்டுவார், ஒரு மரத்தினின்று பறியுண்டு வேறிடத்திற் கிடக்கும் இலைகளினின்றே அம் மரம் வந்ததாகக் கூறுவாரை யொப்பர்.

## 2. அண்ணாமலை பல்கலைக்கழகத் திரவிட மொழிநூல் துறைத் தொடக்க விழாத் தலைமையுரை (1957)

"உண்மையில், நான் சங்க இலக்கியம் என்னும் தொன்முது பழந்தமி ழிலக்கியத்தின் போலிகைகளை (ஆங்கில மொழிபெயர்ப்பு வாயிலாகப்) படித்தபோது, சமற்கிருதத்திற்கும் வெளிப்படையாக அதனைச் சார்ந்த பிற இலக்கியத்திற்குமில்லாத, அதன் புதுமையைக் கண்டு மிக வியப் படைந்தேன். தொன்முது பழங்காலத் தமிழ்க் குமுகாயச் சூழ்வெளியே, இராமாயணம் மகாபாரதம் முதலியவற்றிலும் புராணங்களிலும் செந்திறச் சமற்கிருத இலக்கியத்திலும், தென்னிந்தியத் திரவிட மொழிகளிலும் வட இந்திய ஆரியமொழிகளிலுமுள்ள இடைக்கால இலக்கியங்களிலும், காட்டப் பெறும் சூழ்வெளியோடு சிலவகையில் வேறுபட்டதாகத் தோன்றிற்று. தமிழிலக்கியத்திற் சொல்லப்பெறும் வாழ்க்கைத் தொடக்கமுறையும் அதன் மறவியற் சூழ்வெளியும் இந்திய இலக்கிய மண்டலத்துள் ஒரு தனிச்

சிறப்பாகத் தோன்றின. காதலைக் களவு, கற்பு என்று இரு பரந்த வகையாக அல்லது கைகோளாக வகுத்த பழந்தமிழ் வகை யீடு, ஆரியம் என்று சொல்லப்படும் சமற்கிருத இலக்கியத்தின் கண்டிப்பான மரபுக் கொள்கைக்கு மாறாகப் போனதாக எனக்குத் தோன்றிற்று. (களவு என்பது பருவமடைந்த இள மக்களிடைப்பட்ட தாராளக் காதல். இது முன்னேற்ற மடைந்த குமு காயத்திற்போல் வளரிளந்தையர் (adolescents) அல்லது இளந்தலை யரான இருபாலாரிடைப்பட்ட உறவு உயர்ந்த மரபுநிலைப்படாத முந்தியல் குமுகாயத்தில், மாபேரியற்கையாகக் காணப்படுவதாகும். கற்பு என்பது சட்ட முறைப்பட்ட திருமணத்தின்பின் ஏற்படும் ஒழுங்கான நெறிப்பட்ட காதல். இது இருபாலிடைப்பட்ட உறவுகளுட் சிறந்ததாகக் கொள்ளப்பெறும்.) இனி, தொல்காப்பிய அகப்பொருட்டுறைகட்கு அடிப்படையான முந்துகாலத் தமிழ்ப் புலவரின் விரிவான காதல் வரைவு, முற்றும் புதிதான தொன்றாகவும் அனைத்திந்தியச் சமற்கிருத இலக்கிய மரபைத் தழுவாததாகவும் எனக்குத் தோன்றிற்று. இங்ஙனம் குறிஞ்சி, முல்லை, நெ-தல், மருதம், பாலை என்னும் ஐந்திணை நிலைகளிடைப்பட்ட விரிவான உறவும், அவற் றொடு கூடிய வேறுபட்ட வாழ்க்கைக் கூறுகளும், பொருளியலும் பண்பாடும் பற்றிய பிற்படை நிலைமையும், காதலுணர் வொழுக்கங்களும், உண்மையில் உள்ளபடியே, பழந்தமிழிலக்கியத்தின் தனிப் புதுமையாக எனக்குத் தோன்றின. இவை யெல்லாவற்றின் கலைத் திறனும் புதுமையும் எனக்கு மிகுந்த ஆர்வவூக்கத்தை யுண்டுபண்ணின, இவ்வகையில் 2000 அல்லது 1500 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தை ஏனை யிந்திய நாடுகளினின்றும் சிறப்பித்துக் காட்டுகின்ற நிலைமை யுள்ளதென்னும் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்னும் ஆசை எனக்குட் பிறந்தது. பழந்தமிழ் மீது ஆர்வங்கொண்டு சிலராலும், அதிலுள்ள சமற்கிருதச்சொற்கள் மிக மிகக் குறைவென்றும், அங்ஙனமே சமற்கிருதக் கருத்துகளென்று சொல்லப்படுவனவும் அதில் மிகச் சிலவேயென்றும், திட்டவட்டமாகக் கூறப்பட்டன. இவ் வீருண்மைகளும் (சங்க நூல்களிற்போல்) தமிழிலக்கிய வழக்கு முற்றுஞ் சமற்கிருதச் சார்பற்ற தென்று நாட்டுவனபோற் காணப் பட்டன. இது மெ-யாகவே தமிழிலக்கியக் கலை நாகரிகங்களின் மூலவியன் மையும் ஒப்புநோக்கியல் தொன்மையும்பற்றிய நெறியுரிமையான பெருமை யுணர்ச்சியை யூட்டுதற்கு, எளிதாயுணரக்கூடியபடி, ஒரு திட்டமான மூல மாயிற்று. அதனால், தனி வேற்றுணர்ச்சிக்குப் பெரிதும் தூண்டுகோலாயிற்று. இவ் வுணர்ச்சி இன்று குமுகவியலும் அரசியலும் மதவியலும்பற்றிய வேறு சில தூண்டல்களாலும் வளர்க்கப்பட்டுள்ளது. இங்ஙனமே ஓர் அயலான் கருத்திற்குப் படுகின்றது.

“பழந்தமிழ்ச் சிறப்பு மேற்கூறியவா றிருப்பினும், ஏறத்தாழ உடனேயே, சங்க நூல்களை முன்னினும் ஆழ்ந்து கற்றபோது, நான் சற்றும் அயற் சூழலிலில்லையென்று கண்டேன். (ஆனால் நான் கற்றது ஆங்கிலவாயி லாகத்தான்) இன்புறுத்துவனவும் திட்டமானவுமான சில முதலியன்மைக் கூறுகளிருப் பினும், தமிழிலக்கியத்தின் தொன்முது பண்டைச் சூழ்வெளி, உயிர்நாடியான அல்லது அடிப்படையான செ-திகளில், மகாபாரதம் இரா மாயணம் புராணங்கள் ஆகியவற்றின் சூழ்வெளியாகவே பெரும்பாலும் இருந்தது. மாபெரும்பாலான இந்திய மொழிகளில், தூய தற்சமமான அல்லது திரிபடையாத சமற்கிருதச் சொற்கள் ஏராளமா-க் காணப்படுவதை நோக்கும்போது, தமிழ்நடை (மூலத்தை எங்கெங்கு நோக்கினும்), மெ-யாகவே வேறுபட்டுத் தோன்றிற்று. ஆனால் (நெடுநாளைக்குப் பின்னர்த் தான்), சமற்கிருதச் சொற்களும் பிற ஆரியச் சொற்களும் தமிழிற் புகும் போது அடையும் மாற்றத்தைப்பற்றி அனவரத விநாயகம்பிள்ளை திறம் பட எழுதியுள்ள நூலைப் பார்த்தபின்பு, அயல்போலும் விளங்காமலு மிருந்த சொற்களுட் பல தெளிவானவும் தெரிந்தனவுமாக மாறின. சொல்லப் போனால், பழைய முகங்கள் புதியவற்றிற்குப்பின் நின்று காட்சியளிக்கத் தொடங்கின. சபா என்னும் சமற்கிருதச்சொல் பழந்தமிழில் அவை என்று திரிந்துள்ளதைக் கண்டுகொண்டது, எனக்கு ஒரு சிலிப்புணர்ச்சியை யுண்டுபண்ணிற்று. இங்ஙனமே, ஸந்தி, ஸஹஸ்ர, அஜ, பூர்வாஷாட, ச்ரா வண, காவ்ய, தர்ம, கோபால, கன்யகா, ஸ்தூணா, ஸ்த்ரீ, துலஸீ, லோக, ப்ராஹ்மண, த்ரோணி, ஸ்நேக, தேச முதலிய நூற்றுக்கணக்கான சமற் கிருதச் சொற்களும், பெயர்களும் அதையொக்க உருமாறி, அவ்வுருமாற்றத்தில் அந்தி, ஆயிரம், அயன், பூராடம், ஆவணி, காப்பியம், தருமம், கோவலன், கண்ணகி, தூணம், தி, துழா-, உலகு, பார்ப்பான், தோணி, நேயம், தேயம் முதலியவையாகக் கரந்துள்ளன. “யோ-தேவ-நாமாந் யகிலாநி தத்தே.” கடவுளின் எல்லா வெவ்வேறு பெயர்களாலும் மக்களிடைக் காணலாம் வெவ்வேறு தெ-வங்களாலும் அறியப்படுவது பரம்பொருளே. ஆதலால் தென்னிந்தியாவில் விட்டுணுவை மால் அல்லது மாயோன் என்னும் பெயரி லும், குமாரனை மருகன் அல்லது சேயோன் என்னும் பெயரிலும், துர்க்கை யைக் கொற்றவை என்னும் பெயரிலும், கண்டபோது மகிழ்ச்சியடைந்தேன். கருத்துலகும் மதக்காட்சியுலகும் முற்றும் சமற்கிருதத்திலுள்ளனவே. இவை, சமற்கிருத இலக்கணம் போன்ற பிராமண அறிவியலும்; எக்கிய வோமங்களென்னும் வேள்விக்குரிய தீயுடனும் பூசை வழிபாட்டிற்குரிய மலர்களுடனுங் கூடி, வேதங்களை அடிப்படையாகக் கொண்ட மகாபாரத இராமாயண புராணங்களிற் சொல்லப்பட்டுள்ள பிராமண இந்துமதமும்; பண்டைத் தமிழக

மக்களால் ஒப்புக்கொள்ளப் பட்டு, ஒருகால் வட இந்தியாவிற்போல் அவர்களது ஒத்தாசையாற் புது வளர்ச்சியடைந்த நால்வகை வரணமும் நால்வகை வாழ்க்கை நிலையும் ஆகிய பிராமணக் கொள்கைகளும் ஆகும். இவற்றொடு சமண புத்தமதக் கருத்துத் தொகுதி களும் உள்ளன. கருமம், உலகவாழ்க்கை (ஸம்ஸார) என்னும் பொது வழக்கான மெ-ப்பொருளியற் கருத்துகளும், (திருவள்ளுவரின் உடன் பிறந்தையாரான ஔவையாரால் அறம்பொருளின்ப வீடு பற்றிய அவரது பெயர்போன பாவில் சொற் செறிவாகவும் அழகாகவும் இயல்வரை யறுக்கப்பெற்றுள்ள) தருமம், அருத்தம், காமம், மோட்சம் என்னும் உறுதிப் பொருள்களும், வேறு பல அனைத்திந்தியக் கருத்துகளும் அங்குள்ளன. இந்தியாவின் மாபெருங் கற்பிப்பு நூலாகிய திருக்குறள் தருமம் அருத்தம் காமம் ஆகிய திரி வருக்கம் என்னும் முப்பாலை மட்டும் எடுத்துக்கூறியது பொருத்தமே என எனக்குப் பட்டது. அதன் ஆசிரியரான அறிவர் காணப் படாத உண்மையைப்பற்றி அவரவர் கொண்டவாறு கொள்ளும்படி உத்தியாகத் தனிப்பட்டவர்க்கு விட்டுவிட்டு, சதுர்வருக்கம் என்னும் நாற்பாலின் இறுதிப் பாலாகிய வீட்டைப்பற்றிக் கூறாதே போயினர். ஒருவன் தன் பாட்டிக்கு நூல்நூற்கக் கற்றுக்கொடுப்பது உண்மையில் அடாச்செயலே. கொல்லத் தெருவில் ஊசிவிற்கத் தேவையில்லை. நெடு நாட்கு முன்பே எனக்குத் தோன்றியது என்னவென்றால், பழந்தமிழ், அதன் மாபேரின்பக் கூறுகளிற் சிலவற்றைக் காட்டும் வெளிப்படையானவும் விளங்கித் தோன்றுவனவு மான பல குறிப்புகளைக் கொண்டிருந்தும், சமற்கிருதத்தினின்றும் வேறு இந்திய இலக்கியத்தினின்றும் அதைப் பிரிக்கமுடியாதென்பதும், இந்து என்னும் சொல்லை அதன் முழு விரிவான பொருளில் எடுத்துக் கொண் டால். அனைத்திந்திய இந்து இலக்கியத்திற் அது மிகப்பெரிதும் உட்பட்டது என்பதுமே. தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமைதரும் நாயன்மார் என்னும் சிவநெறித்தூயரும் ஆழ்வார் என்னும் திருமாலடியாரும் இயற்றிய பாடல்களைப் பொறுத்தமட்டில், இது மிக உண்மையானதாகும். இப் பாடல்கள், அவற்றின் ஆழமுடைமையாலும் அழ காலும் தெ-வத் தன்மையாலும் மக்கட் பண்புரைப்பாலும், இந்துக்களை மட்டுமன்றி மாந்தரினத்தையே ஆவிக்குரிய வாழ்க்கையிலும் உயரார்வத்திலும் வளம்படுத்தியுள்ளன. பக். 8-12

"நாம் கொண்டிருக்கும் இந்து நாகரிகம் என்னும் இந்திய நாகரிகம், எண்ணுக்கெட்டாக் காலத்திலிருந்து இந்தியாவிற்கு வந்து தங்கிப் பக்கம் பக்கமாக வாழ்ந்துவந்த பல்வேறு மொழிபேசும் பல்வேறு வரண இனத்தாரின்

கூட்டுவேலை என்னும் பேருண்மை நிலைத்து நிற்கின்றது. கூடியபடி, கோல் மாந்தரின் முன்னோரான நிடாதர் அல்லது ஆத்திரியரே இக் கூட்டினத்தின் முதற்கூறாவர். அவருக்கு முந்தினவரும் இந்திய நிலத்தி னின்று நீங்கிவிட்டவராகத் தோன்றுகின்றவருமான நீகரோப்போலியரை நாம் கவனியாது விட்டுவிடலாம். ஆத்திரியருக்குப் பின் வந்தவர் திரவிட மொழியாளர். அவர் முதற்கண் கிரேக்க நாட்டிலும் அதனையடுத்த தீவுகளிலும் மேலைச் சின்ன ஆசியாவிலும் எல்லெனிய முன்னை ஈசிய (Aegean) நாகரிகத்தை அமைத் தவரோடு தொடர்புடைய நண்ணிலக் கடற்கரை வாணராயிருந்ததாகச் சிலர் நம்புகின்றனர். அதுவே என் கருத்தும். பக். 19

## இவற்றின் மறுப்பு

தமிழ்ப் பகைவரான பிராமணத் தமிழ்ப் புலவரும் வரலாற்றாசிரியரும், தமிழையும் தமிழிலக்கண விலக்கியத்தையும்பற்றித் தமிழிலும் ஆங்கிலத் திலும் தம் மனம்போனவாறு தப்புந்தவறுமாக எழுதியுள்ளனர்.

பிறமொழிகட்கில்லாது தமிழுக்குள்ள தனிச்சிறப்புகளுள் தலை மையானது பொருளிலக்கணம். இதைப் பார்த்துப் புழுங்கிய ஆரியத் தமிழ்ப் புலவர், தம்மா லியன்றவரை அதன் பெருமையை அயல்நாட்டார் அறியாதவாறு மறைத்தும் குறைத்தும் ஆங்கிலத்தில் வரைந்து வந்திருக் கின்றனர். ஒருவர் பொருளதிகாரம் என்பது பாட்டியலே (Poetics) என்று முற்றும் மறைத்துவிட்டார். பிறர் அது பழங்காலப் போருங் காதலுமே கூறுவதென்று குன்றக் கூறிவிட்டனர்.

பர். சட்டர்சியார் தமிழைப் பிராமணர் ஆங்கிலத்தில் எழுதிய நூல்கள் வாயிலாகக் கற்றுப் பிறழவுணர்ந்தவர்.

> **“பொ—யும் வழுவும் தோன்றிய பின்னர்**
> **ஐயர் யாத்தனர் கரணம் என்ப”** **(1091)**

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் உள்ள ஐயர் என்னும் சொற்கு, ஆரிய மேலோர் என்று பொருள்வரைந்தார் மு. இராகவையங்கார். அதையே மெ-யுரையாகக் கொண்டு, பேரா. கே. (K.) நீலகண்ட சாத்திரியார் தம் ‘தென்னிந்திய வரலாறு’ (A History of South India) என்னும் நுலில், ஆரியர் வருமுன் தமிழர் நிலையான இல்லற வாழ்க்கையின்றி விலங்குகள் போல் அவ்வப்போது கூடித் திரிந்தனர் என்று வரைந்துள்ளார்.

இம் முறையிலேயே பர். சட்டர்சியாரும் தொல்காப்பியத்திற் கூறப்பட் டுள்ள தமிழர் களவுமணத்தை, முந்தியல் மாந்தரின் ஒழுங்கற்ற தாராளக் கூட்டமாகக் கருதிவிட்டார். கிழவரும் வேளிரும் மன்னரும் கோக்களும் வேந்தருமான ஐவகைத் தலைவர் அல்லது அரசரே. தம் இளமையில் வேட்டையாடச் சென்றவிடத்து, எல்லா வகையிலும் தம்மையொத்த அல்லது சற்றே தாழ்ந்த, அரமகளிர் போலும் அழகிற் சிறந்த கன்னிகை யரைத் தற்செயலாகக் கண்டு, இயற்கையாக எழுந்த இருதலைக் காதலாற் கூடுவதும் பின்பு இல்லறமாக இறுதிவரை நீடுவதுமான, தெ-வத் திரு மணத்தையே, தொல்காப்பியமும் அதற்கு முந்து நூல்களுமான தமி ழிலக்கண நூல்கள், இருவர் பெற்றோர்க்கும் தோழனுந் தோழியுமொழிந்த மற்றோர்க்கும் தெரியாது மறைவா- நிகழ்தல்பற்றிக் களவு எனக் கூறுகின்றன என்பதை, அவர் இன்னும் அறிந்திலர்.

அனவரத விநாயகம் பிள்ளையார் தமிழைச் செவ்வையா- அறிந்த வரல்லர். அவர் இல்வாழ்க்கையும் ஆரியச்சூழலில் தென்சொற்கட்குப் பிரா கிருத மூலமும் சமற்கிருத மூலமும் அவர் காட்டியிருப்பது வியப்பன்று. அக்காலத்தில் இத்தகைய காட்டிக்கொடுப்பின்றிச் சென்னைப் பல்கலைக் கழத்திற் பணியாற்றுவதும் அரிது.

அந்தி, அவை, ஆயிரம், உலகு, கண்ணகி, தி (பெண்பாலீறு), துழா-, தூணம், தேயம், தோணி, நேயம், பார்ப்பான் என்பவை தூய தென்சொற்களே.

அயன், ஆவணி, காப்பியம், தருமம், பூராடம் என்பனவே வட மொழித் திரிசொற்கள்.

கோவலன் (கோபாலன்) என்பது தென்சொல்லும் வடசொல்லுங் கலந்த இருபிறப்பி (hybrid).

சென்றவிடத்து, எல்லா வகையிலும் தம்மையொத்த அல்லது

அந்துதல் = கலத்தல். பகலும் இரவும் அல்லது இரவும் பகலும் கலக்கும் வேளையே அந்தி .

**“காலை யந்தியும் மாலை யந்தியும்”** (புறம்.34)

அந்தி என்பது பிற்காலத்திற் சகரமெ- முன்னேற்றுச் சந்தி என்றா யிற்று. ஒ.நோ: அமை - சமை.

சந்தி = காலை, மாலை, பலதெருக் கூடுமிடம்.

வடவர் சந்தி என்னும் சொற்கு ஸம் + தா என்று மூலங்காட்டுவர். அந்தி என்னும் வடிவு வடமொழியில் இல்லை.

அமைதல் = நெருங்குதல், கூடுதல், பொருந்துதல், கெட்டியாதல். அமை= கல்மூங்கில்.

அமை - அவை = கூட்டம், களம் .ஒ.நோ. அம்மை - அவ்வை. செம்மை - செவ்வை. குமி - குவி, குமை - குவை.

அவை - சவை. ஒ.நோ : அந்தி - சந்தி, அமை - சமை.

சவை - ஸபா (வ.) வடமொழியில் இதற்கு மூலம் இல்லை.

அயிர் = நுண்மணல். அயிர் - அயிரம் - ஆயிரம்= மணல்தொகை போன்ற பெருந்தொகை யெண்.

ஆயிரம் - ஹசார் (பெ, இ.,) - ஸஹஸ்ர (வ.) = ஸ + ஹஸ்ர. வடமொழியில் இதற்கு மூலமில்லை.

உலத்தல் = வளைதல், சுற்றுதல், உருளுதல். உலவுதல் = சுற்றுதல். உலா = சுற்றிவருகை.

உல - உலவு - உலகு = சுற்றிவரும் கோள். உலகு - உலகம். வடமொழி யில் லோக என்னும் சொற்குச் சொல்லக் கூடியபொருள் பார்க்கப்படுவது என்பதே. லோக் = பார் . E . look.

நோக்கு - லோக் (வ.).

கண்ணகன் (ஆண்பாற் பெயர்) - கண்ணகி (பெண்பாற் பெயர்.) கண்ணகனார் ஒரு பழம்புலவர்.

கண்ணகி என்னும் தமிழ்ப்பெயர் கன்யகா என்னும் தமிழ்த் திரி சொல்லாகிய வடசொல்லின் திரிபன்று.

அத்தன் = தந்தை. அத்தி = தா-. பெற்றோரைக் குறிக்குஞ் சொற்கள் பாலீறாகவும் வரும். எ-டு: செல்லப்பன், செல்லம்மை. தட்டான்+அத்தி= தட் டாத்தி. வண்ணான்+அத்தி=வண்ணாத்தி. அத்தன்-அச்சன், அத்தி-அச்சி.

கள்ளன்-கள்ளச்சி (பெ. பா.), மருந்துவன் - மருத்துவச்சி (பெ. பா.).

அத்தி என்பதன் ஈறான 'தி' ஸ்திரீ என்னும் வடசொல்லின் சிதைவன்று. அத்தி என்னும் தென்சொல் அக்கை என்னும் பொருளில் வடமொழியிலும் வழங்குகின்றது.

துளம்-துளர். துளர்தல் = மணம் வீசுதல்.

**"துளருஞ் சந்தனஞ் சோலைகளூடெலாம்"** **(சூளா. இரத.5)**

துளம்-துளவு = மணம்வீசும் செடி.

துளவு-துளவம்-துளபம்.

துளவு-துளசு-துளசி.

துளம்-(துளை)-துழா-. ஒ. நோ: மாதுளம்-மாதுளை,

நாளி-நாழி, கழை-கழா-.

துளசி-துலஸீ (வ.). துளசி முல்லைநிலச் செடியாதலால் முல்லை நிலத் தெ-வமாகிய மாயோனுக்கு உகந்தததாகக் கொள்ளப்பெற்றது.

துண்ணுதல் = பருத்தல். துண்-தொண்-தொண்ணை = பருத்தது. துண் - தூ ண் - தூணி - தூணித்தல் = பருத்தல், தூண் = திரண்ட மரக்கம்பம் அல்லது கற்கந்து. தூண் - தூணம் = பருத்ததூண்.

தூணம் - ஸ்தூண, ஸ்தூணா (வ.).

வடவர் காட்டும் ஸ்தா (நில்) என்னும் மூலம் பொருந்தாது. திகைதல் = முடிதல், தீர்தல். திகை = முடிவு, எல்லை, திசை.

"திகையெலாந் தொழச்செல்வா-" (தேவா: 308: 1)

திகை - திசை = எல்லை, எல்லைநோக்கிய விழுத்து (direction), எல்லைப்புறம், எல்லைப்புற நாடு. ஒ.நோ: சீமை (வ.) = எல்லை, நாடு.

திசை - தேசம் = நாடு, இடம். இடப்பொரு ளுருபு.

தேசம் - தேயம் = நாடு, இடம், இடப்பொரு ளுருபு.

தேயம் - தேம் = இடப்பொரு ளுருபு.

தேம் - தே - தேவகை = இடவகை, இடப்பொரு ளுருபு.

திகை - திக்(வ.), திசை - திசா (s) திச்(வ.)

வடவர் திச் (காட்டு) என்பதை மூலமாகக் காட்டி, அது திக் என்று திரிந்த தாகக் கூறுவர். வடநூல் வேறு வழியா- வந்ததாயின், திக்கா என்னும் பிராகிருதச் சொல்லினின்று வந்திருக்கலாம். நோக்கு (த., - (தேக் (பிரா.) = காண். தேக் திக்கா = காட்டு(பி. வி.) திக்கா - திக் (வ.). - திச் (வ.)

தொள்ளுதல் = தோண்டுதல், குடைதல்.

தொள் - தோள் - (தோண்) - தோணி = முதற்காலத்திற் பெரிய அடிமரத்திற் குடையப்பட்ட நீர்க்கலம், நீர்த்தொட்டி, ஓடம், படகு.

தோணி - (வ.) த்ரோணி (d). மரத்தினாற் செ-யப்பட்டது என்று வேர்ப்பொருள் கூறி, த்ரு (மரம்) என்பதை வேராக வடவர் காட்டுவது பொருந்தாது, த்ரமிள (தமிழ்), ப்ரதி (படி), ம்ருது (மெது), வ்ருஷ (விடை) என்பவற்றிற்போல், த்ரோணி என்பதன் ரகரமும் இடைச்செருகலாக வந்ததே.

நெள் - நெ- - நேயம் = நெ-போல் ஒட்டும் குணமாகிய அன்பு. ஒ.நோ: பசை-பாசம் = அன்பு. நீரம்-ஈரம் = அன்பு. நெ- - ஸ்நிஹ் (வ.) நேயம்-நேஎம் (பிரா.).ஸ்நேஹ (வ.)

Snow என்னும் ஆங்கிலச் சொல் ஸ்நேஹ என்பதனோடு தொடர்புள்ள தாயின், அதற்கும் தென்சொல்லே அடிமூலமா யிருத்தல் வேண்டும்.

பார்-பார்ப்பான் = நூல்களைப் பார்ப்பவன். பார்ப்பனன் என்னும் வடிவம் செ-வனன் (செ-வான்) என்னும் வா-பாட்டது.

| **இ.கா.** | **நி.கா.** | **எ.கா.** |
|---|---|---|
| பார்த்தனன் | பார்க்கின்றனன் | பார்ப்பனன் |

ஆரியர் வருமுன் அந்தணர் எனப்பெற்றவர் தமிழ்த் துறவியரே.

**“அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்”** **(30)**

என்று திருவள்ளுவர் ‘நீத்தார் பெருமை’ யதிகாரத்திற் கூறியிருத்தல் காண்க.

அந்தணர் என்னும் பெயர் சிறப்பாக ஐயர் என்னும் முனிவரையே குறிப் பினும், நால்வகைத் தலைவருள் முதல்வரைக் குறிக்கும்போது பார்ப்பார் என் னும் இல்லறத்தாரையும் தழுவும். இம் முப்பெயர்களும் ஆரியர் வருமுன் தமிழ வகுப்பார்க்கே வழங்கிய தூய தமிழ்ச்சொற்கள் என அறிக.

பரம்-பரமன்-பரமம்(த.)-பிரமம்(வ.)-பிராமணன். பார்ப்பனன் என்னும் தென்சொற்கும் பிராமணன் என்னும் வடசொற்கும் யாதொரு தொடர்பு மில்லை.

கோள்-கோ = கவரப்படும் ஆ. பண்டைக்காலத்திற் கொள்ளைக்கார ராலும் அரசராலும் பெரும்பாலுங் கவரப்பட்டது ஆவே.

**"ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே"** **(தொல். 1004)**

கோ-கோவன்-கோன் = இடையர் பட்டப்பெயர். கோன்-கோனான் = மாட்டிடையன், இடையன், இடையர் பட்டப்பெயர். ஒ.நோ. ஆ-ஆயன் = மாட் டிடை யன், இடையன்.

கோ - OS. kō, OE. kō, E. cow, Skt. gō. இச் சொற்கு ஆரியமொழி களில் மூலமில்லை.

பிராமணர் நிலத்தேவர் என்றும் அவர் மொழி தேவமொழி யென்றும் தமிழர் மயங்கிய மயக்கத்தால், அவருடைய அகக்கரணங்கள் மரத்துப்போன காலத்தில், தமிழைக் கெடுக்க வேண்டுமென்றே ஆரியச் சொற்கள் அதில் தாராளமாகப் புகுத்தப்பட்டன. அவை தமிழர் விருப்பால் அல்லது தேவையால் தழுவப்பட்டவையல்ல. ஆயினும் இன்று அவற்றை, பண்டைத் தமிழர் வட சொற்களைக் கடன் கொண்டனர் என்று காட்டற்கும், வடமொழிச்சென்ற தமிழ்ச்சொற்களை வடசொற்கள் என்று திரித்தற்கும் சான்றாகப் பயன்படுத்தி வருகின்றனர். இது மடிமாங்கா- போடுதல் போன்ற கயமையே. வடமொழிச்சென்ற தென்சொற்களுட் பலவற்றின் விளக்கத்தை என் 'வடமொழி வரலாறு' என்னும் நூலுட் கண்டு தெளிக.

இனி, ..................

**"பாவ லோசன பாநுவி லோசன**
**பரம லோசன பக்தச காயமா**
**கால காலத்ரி சூலக பாலவே**
**கம்ப சாம்பக டம்பவ னேசனே"**

என்று குமரகுருபரரும்,

**"நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப**
**நிர்விஷய கைவல்யமா**
**நி கள வசங்கசஞ் சலரகித நிர்வசன**
**நிர்த்தொந்த நித்தமுக்த**
**தற்பர விஸ்வாதீத வ்யோம பரிபூரண**
**சதானந்த ஞானபகவ**

சம்புசிவ சங்கர சர்வேச வென்றுநான்
சர்வகாலமு நினைவனோ
அற்புத வகோசர நிவர்த்திபெறு மன்பருக்
கானந்த பூர்த்தியான
அத்துவித நிச்சய சொரூபசா க்ஷாத்கார
அனுபூதி யனுசூதமுங்
......................
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே"

என்று தாயுமானவரும், பாடியவை தமிழர் பாடல்களேயாயினும் ஆரிய மயக்கிற் பாடப்பட்டவையாதலால், தமிழர் வடமொழியைத் தழுவவேண்டு மென்பதற்குத் தாங்கலாகவெனக் கூறிவிடுக்க.

இனி முருகன் (குமரன்). மாயோன் (திருமால்), கொற்றவை (காளி) என் னும் மூவரும் ஆரிய வருகைக்கு முற்பட்ட குமரிநாட்டுத் தூய தமிழ்த் தெ - வங்களே. ஆரியரே அத் தெ-வங்கட்குச் சுப்பிரமணிய, வி ணு, துர்க்கா என்னும் புதுப் பெயர்களை முறையே இட்டுக்கொண்டனர்; குமரன் என்னும் பெயரைக் குமார என்றும், காளி என்னும் பெயரைக் காலீ என்றும், நீட்டித் திரித்துக்கொண்டனர். வி ணு என்னும் பெயர் வேதக்காலத்திற் கதிரவனையே குறித்தது.

திரிமூர்த்தி என்னும் முத்திருமேனிக் கொள்கையை அடிப்படை யாகக் கொண்ட இந்துமதம் என்னும் பிராமண மதம், பிராமண மேற்குலப் பாட்டினாற் புகுத்தப்பட்டதேயன்றித் தமிழறிஞரால் அல்லது மெ-கண்டார் போலும் மெ-ப்பொரு ளாசிரியரால் ஒப்புக்கொள்ளப்பட்ட தன்று.

ஔவையார் திருவள்ளுவரின் உடன்பிறப்பல்லர்.

அறம்பொரு ளின்பம் வீடென்னும் உறுதிப்பொருட் கோவை தமிழர் கண்டதே. ஆரியரே அதைத் தர்மார்த்த காமமோட்சமென மொழி பெயர்த்துக் கொண்டனர்.

சமணரும் புத்தரும் தமிழகத்திற்கு வந்து தமிழ்நூ லியற்றியதினால், தமிழ் தன் தூ-மையை அல்லது தொன்மையை இழந்துவிடவில்லை.

வீட்டுலகத்தை யடைந்தவர் எவரும் இங்குத் திரும்பி வராமையால், வீட்டை வாயில் நடைவழியாகவும் ஒப்புமை வகையிலுந்தான் கூறமுடி யும்.

இவ் விருவகை யறிவிப்பும் அறத்துப்பாலிலும் காமத்துப்பாலிலும் முறையே அடங்கியுள்ளன. ஆதலால், திருவள்ளுவர் வீட்டைப்பற்றிக் கூறாது விட்டு விட்டார் என்பது பொருந்தாது.

தமிழிலக்கியம் சமற்கிருத இலக்கியத்தினின்றும் வேறுபட்டதாகை யால், அனைத்திந்திய இலக்கியத்திற்கு உட்பட்டதன்று. சமற்கிருத இலக்கியம் தமிழிலக்கியத்திற்குள் அடங்குமென்று கூறின் மிகையாகாது.

தமிழகம் தனிநாடு; தமிழர் தனியினத்தார்; தமிழ் நாகரிகம் தனிப் பட்டது. ஆரியர் தமிழரையும் தம்மைப்போல் எல்லாவகையிலும் கலவை யராகக் காட்ட முயல்கின்றனர்.

இன்னும் இதன் விரிவையெல்லாம் என் ‘தமிழ் வரலாறு’, ‘வடமொழி வரலாறு’, ‘தமிழர் மதம்’ என்னும் நூல்களுட் கண்டு கொள்க.

அயன், ஆவணி (ச்ராவண), காப்பியம், தருமம், பூராடம் (பூர்வா ஷாட) என்னும் வடசொற்கட்கு, முறையே, நான்முகன், மடங்கல், வனப்பு, அறம், முற்குளம் என்னும் தென்சொற்களிருப்பதால், அவ் வடசொற்கள் தமிழுக்குத் தேவையில்லை.

ஆரியர் வருமுன், தமிழகத்தில் மாதப்பெயர்களெல்லாம் ஓரைப் பெயர்களாலேயே வழங்கிவந்தன. அம் முறைப்படி ஆவணி மடங்கல் (சிம்மம்) எனப்பெறும்.

## *பர். சட்டர்சியாரும் பர். கத்திரேயாரும் இணைந்தெழுதிய இந்தியத் திணைக்களஞ்சியம்*

## (GAZETTEER OF INDIA 1965)

### VII மொழிகள்

1. கி.மு. முதலாயிர வாண்டின் முற்பாதியே வடஇந்திய ஆரிய மொழியாளர், தங்கள் மொழியை, சிறப்பாக வேதங்களிலும் அவற்றிற்குப் பிற்பட்ட முந்து சமற்கிருத இலக்கியத்திலும் நாட்டப்பெற்ற இலக்கிய மொழிவடிவுகளை, அறிவியல் முறையில் ஆயத்தொடங்கினர். கி.மு. முதலாயிர வாண்டின் நடுப்பட்ட பண்டை இந்திய இலக்கணக்காரரின் பழைய இந்தாரிய மொழி பற்றிய அறிவியலா-வு (கி.மு. 5ஆம் நூற்றாண்டில்)

பண்டையுலக முழுவதிலும் தலைசிறந்த மொழியியல் வெற்றியான பாணினி சமற்கிருதவிலக்கணமாக முடிந்தது. - பக். 467-8

## இதன் மறுப்பு

இந்திய ஆரியரின் முன்னோர் இந்தியாவிற்குட் புகுந்தபோது இலக்கிய மும் எழுத்தும் இன்றி எளிய முல்லை நாகரிக நிலையேலேயே இருந்தனர். அவர் புகுந்த காலம் கி.மு. 2000-1500.

ஆரியரின் முதலிலக்கியம் பல்வேறு சிறுதெ-வ வழுத்துத் திரட்டா கிய வேதங்கள். வேதமொழி வழக்கற்றபின் வேதச்சொற்கட்குப் பொருள் விளக்கி யெழுதிய யாசுக்கரின் நிருத்தம் (நிருக்த) என்னும் சொற்பொருள் நூலே, வேதத் திற்கு அடுத்தெழுந்த ஆரிய நூல்.

ஆரியப் பிராமணர் தென்னாடு வந்து தமிழரொடு தொடர்புகொண்டு தமிழிலக்கணங் கற்றபின்பே, பிராதிசாக்கியம் என்னும் வேதப்பாட வேறு பாட்டுக் கிளைகளின் ஒலியிலக்கண நூல்களும், ஐந்திரம், பாணினீயம் (அ டாத்யாயீ) முதலிய (நன்னூல்போல் எழுத்துஞ் சொல்லுமே கூறும்) வியாகரணம் என்னும் இலக்கண நூல்களும் முறையே தோன்றின.

ஆரியரின் இந்திய வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே (கி.மு. 10,000 போல்) பஃறுளியாற்றங்கரை மதுரையில் தலைக் கழகம் தோன்றியதாலும், அக்காலத்துத் தமிழிலக்கண நூல்கள் இயற்றமிழ்க் கூறாகிய எழுத்துஞ் சொல்லும் பொருளுங் கூறும் பிண்டங்களாகவும், இயலிசை நாடகமென்னும் முத்தமிழுங் கூறும் மாபிண்டங்களாகவும் இருந் தமையாலும், ஆரியப்பிராதி சாகித்தியங்கட்கும் வியாகரணங்கட்கும் தமிழ் நூலே முதல்நூல் என்பது தெள்ளத் தெளிவாம்.

ஆயினும், தமிழையும் தமிழரையும் என்றும் தாழ்த்தியே வைத்திருத் தற்பொருட்டு, ஆரியப் பிராமணர் தம்மை நிலத்தேவரென்றும் தம் கலவை மொழியாகிய வேதமொழியையும் அரைச் செயற்கை யிலக்கிய நடை மொழியாகிய சமற்கிருதத்தையும் தேவமொழியென்றும் கூறித் தமிழரை ஏமாற்றியதற்கேற்ப, தமிழிலக்கண நூல்களின் முதன்மையையும் ஆரிய விலக்கண நூல்களின் வழிமையையும் அடியோடு மறைத்துவிட்டனர். பழங்குடிப் பேதைமையால் மதத்துறையில் மடம்பட்ட தமிழரும் அதன் கூற்றை முற்றும் நம்பிவிட்டனர். அந் நிலைமையை அறிவாரா-ச்சி மிக்க இக்காலத்தும் பயன்படுத்திக்கொண்டு, மொழியிலக்கணநூலை முதன்

முதலாரா-ந் தியற்றியவர் ஆரியரே என்று கூறுவது உலக மக்களை யேமாற்றல் என்னும் மாபெருங் குற்றத்தின்பாற்படுவதேயாகும்.

2. சமஸ்கிருதத்திலும் ஏனைய இலக்கியத்திலும் ஆரிய நடை மொழிக எல்லாத மொழிகளைப்பற்றிய குறிப்புகள் மிக அருகியுள்ளன. கிறித்தவ வூழித் தொடக்கத்தில், தென்னிந்திய மொழிகளில் இலக்கிய முயற்சி அன்றுதான் தொடங்கியுள்ளதாகத் தோன்றுகின்றது. ஆரியமொழி ஆந்திர கருநாடக நாடுகளில் தனக்கு ஓர் இடத்தை மிக முந்திப் பிடித்துக் கொண்டது. அங்கு சமற்கிருதமும் பிராகிருதங்களும் எதிர்ப்பின்றியும் வினாவின்றியும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தோன்றுகின்றது. ஆனால், தெற்கே தமிழ்நாடும் மலையாள நாடுமாகிய தொலைவான திரவிட நிலப் பகுதியில், தமிழ் சமஸ்கிருதத்தினின்றும் வடபால் நடைமொழிகளி னின்றும் வேறுபட்டதென்னும் கூருணர்ச்சி, புலவரிடையும் பிறரிடையும் கி.பி. முதலாயிர வாண்டின் நடுவிலேயே இருந்ததாகப் பழந்தமிழிற் காண் கின்றோம். தமிழ்ச் சிவநாயனார் ஒருவர் பரம்பொருளைச் சிவ வடிவிற் பின்வருமாறு விளிக்கின்றார். (திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரம் தோரா. கி.பி. 7ஆம் நூற்றாண்டு);

**"ஆரியன் கண்டா—" = நீ ஆரியனா யிருக்கின்றா—.**
**"தமிழன் கண்டா—" = நீ தமிழனாகவு மிருக்கின்றா—.**

வடவாரியன் மொழியாகிய சமற்கிருதமும் தென்மொழியாகிய தமிழும் ஆகிய இரண்டும் இறைவனிடத்துத் தோன்றியவையே என்பது இதன் கருத்து. அதே நாயனார் "ஆரியந் தமிழோ டிசையானவன்" என்றும் கூறு கின்றார். இறைவன் சமற்கிருதத்தையும் தமிழையும் அவ் விரண்டின் இன் னிசையும் தனக்கு வடிவாகக் கொண்டவன் என்பது இதன் பொருள். இங்ஙனம் தமிழின் தொன்முது பழங்காலத்தில் சமற்கிருதத்திற்கு அல்லது ஆரிய மொழிக்கு ஏற்பிருந்ததே யன்றி அதன்மீது வெறுப்பிருந்ததில்லை. சமற்கிருதத்திற்குப்போல் தமிழுக்கும் ஒரு தனியிடம் அளிக்கப்பட்டிருந்தது.

- பக். 368-9

## இதன் மறுப்பு

ஆரிய நூலாசிரியர் வேண்டுமென்றே ஆரியமல்லாத பிற மொழி களைஆரிய இலக்கியத்திற் குறிப்பிடவில்லை. தமிழிலக்கியம் கி.மு. 10,000 ஆண்டு கட்கு முன்பே முழுவளர்ச்சியடைந்துவிட்டது. தெலுங்கரும் கன்னடரும் ஆரியத்தை முந்தி ஏற்றுக்கொண்டது. அவ் விரினத்தாரும்

ஆரியர் தமிழ் நாட்டிற்கு வரும்வழியில் இன்று போன்றே அதனையடுத்து அதற்கு வடக்கிலிருந்தமையாலும், அவர் வந்தபோது தெலுங்கிலும் கன்னடத்திலும் இலக்கிய மின்மையாலும், மொழியினவுணர்ச்சி இக்கால த் திலுள்ள அளவுகூட அக்காலத்தி லின்மையாலும், ஆரியம் தேவமொழி யென்னும் ஏமாற்றை நம்புந்தன்மை அவர்க்கு மிக்கிருந்த தனாலுமே.

"ஆரியன் கண்டா-", "தமிழன் கண்டா-" என்னும் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத் தொடர்கள் 'அவன் ஆரியன்காண்', 'அவன் தமிழன் காண்' என்று பொருள்படும் படர்க்கைக் கூற்றுகளேயன்றிப் பர். சட்டர்சி கொண்டதுபோல் முன்னிலைக் கூற்றுகளல்ல.

"கண்டா-" என்பது மாந்தனொருவனை நோக்கிக் கூறும் முன்னிலை யொருமையிசை. இதையறியாது ஒரு முதன்மை வா-ந்த இந்திய அரசியல் வெளியீட்டில் இலக்கணவழுவாகப் பொருள் கூறியிருப்பது மிக இரங் கத்தக்க தொன்றாகும்.

"ஆரியந் தமிழோ டிசையானாவன்" என்பதிலும் இசை என்பது தமிழிசையையே குறிக்கும்.

தமிழிலக்கியம் தோன்றியது கி.மு 10,000 ஆண்டுகட்குமுன். திருநாவுக்கரசு நாயனார் காலம் கி.பி. 7-8 ஆம் நூற்றாண்டு. இங்ஙனமிருக்கவும், நாயனார் காலத்தைத் தமிழின் தொடக்கக் காலமெனக் குறித்திருப்பது எத்துணைக் கேடான காலவழுவாகும்!

ஆரியமொழிக்குத் தமிழகத்திலும் தொடக்கத்தில் ஏற்றமிருந்ததற்கு, அக்காலத்தில் மொழியாரா-ச்சியின்மையும், ஆரியரின் வெண்ணிறமும் அவர் மொழியின் எடுப்போசையும் அவர் நிலத்தேவரென்று நம்புவதற்குத் துணையாயிருந்தமையும், தமிழ வேந்தரின் பேதையையுமே கரணிய மாம்.

3. ஆயின், "பிற்காலத்தில் செங்கொள்கை (அதாவது பிராமணியச் செங்கொள்கை) கடைப்பிடித்த புலவர், தமிழை ஓர் ஆரிய நடைமொழி யாகவும் பழந்தமிழுக்கு மூலமான ஒருவகைத் திரவிடப் பிராகிருதமாக வும் காட்டப் பார்த்தனர். இன்றோ, அரசியலும் பிறவும்பற்றிய கரணியங் களால் தொங்கட்டம் அடுத்தபக்கம் சா-ந்துள்ளது. தமிழார்வலர் சிலர் சமற் கிருதத்தையும் ஆரியயும் மொழியையும் பழந்தமிழினின்று திரிக்க முயன்று கொண்டிருக்கின்றனர்? - ப. 369

## இதன் மறுப்பு

பிராமணர் அன்றுமட்டுமன்று, இன்றும் தமிழைச் சமற்கிருதத்தின் கிளையாகவே காட்டிவருகின்றனர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியையும், 1967 ஆம் ஆண்டு விளக்கணி (தீபாவளி) மலராக வெளிவந்த ‘அமைப்பாளன்’ (Organiser), என்னும் சிறப்பிதழிலுள்ள “திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணாதுரை என்பவையெல்லாம் சமற் கிருதச் சொற்களே” என்னும் கட்டுரையையும், காண்க. தமிழ் ஓர் ஆரியக் கிளை என்பது முழுப்பொ-யும் புரட்டுமாகும். ஆயின், தமிழ் திரவிடத் திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் என்பது முற்றும் உண்மையே. இதற்கு மொழிநூல், வரலாறு, மாந்தனூல் ஆகிய முத்துறைபற்றிய மறுக் கொணாச் சான்றுகள் நிரம்பவுள்ளன. இக்காலம் அறிவும் ஆரா-ச்சியும் மிக்க காலமாதலின், ஆரியப் பிராமணர் நிலத்தேவர் என்பதும் ஆரியம் தேவமொழி என்பதும் எள்ளளவும் செல்லா. இதுகாறும் தமிழரையும் திரவிடரையும் ஏமாற்றி மேனத்தாக வாழ்ந்த ஆரியர்க்கு அவர் குட்டு வெளிப்படுவது வரைகடந்த வருத்தமே. ஆயின், “மெ- வெல்லும், பொ- தோற்கும்” என்பது உண்மையன்றோ?

4. “தொல்காப்பியத்தொடு தொடங்கும் தொன்முது பழந்தமிழ் கன்னட தெலுங்கு இலக்கணங்கள் கிறித்துவிற்குப் பின் தொடக்க நூற்றாண்டு களில் தோன்றியவை; சற்று முந்தியவையாயு மிருக்கலாம்.” - ப. 369.

## இதன் மறுப்பு

தொல்காப்பியக் காலம் கி.மு. 7 ஆம் ஆண்டு நூற்றாண்டு, அது இடைக்கழகத்திற்கும் கடைக்கழகத்திற்கும் இடைப்பட்டுத் தோன்றிய சார்பிற் சார்புநூல். ஆகவே, தமிழ் முதல் இலக்கணநூல் தோன்றிய தலைக்கழகக் காலம் கி.மு. 10,000 ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.

தெலுங்கு கன்னடத் திரவிடமொழி யிலக்கணங்கள் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலும் பிற்பட்டும் தோன்றியவையே.

5. “இந்திய மொழிநூற்கும் மொழியியல் அறிவியம் முழுமைக்கும் அடிகோலப்பெற்றது, இந்தியாவிற்கு வந்த விடையூழியரும் பிறருமான ஐரோப்பிய அறிஞர் சமற்கிருதத்தைக் கண்டுபிடித்துக் கற்றதின் உடன் விளைவாகும்.” - பக். 369.

### இதன் மறுப்பு

இந்திய மொழிநூற்கு அடிமணை தொல்காப்பியர் காலத்திற்கு முந்திய தமிழிலக்கண நூல்களிலேயே இடப்பெற்றதென்பது, முன்னரே கூறப்பட்டது.

6. "இந்தியாவில் மிக முந்திய காலத்திலேயே நாட்டப்பெற்ற நான் மொழித் தொகுதிகளுள், இறுதியாக வந்தது ஆரியமொழிக் குடும்ப மாகும். அதற்கு முந்திவந்தவை திராவிடம், சீன திபேத்தம், ஆத்திரியம் என்பன."

- பக். 373.

### இதன் மறுப்பு

திரவிடம் என்பது தமிழின் திரிபு. தமிழ் தோன்றியது இந்தியவாரியுள் மூழ்கிப்போன குமரிக்கண்டத்தின் தென்கோடியில். தமிழ் வடக்கே சென்று திரவிடமாகத் திரிந்து, திரவிடம் வடமேற்கே சென்று ஆரியமாக மாறி. அவ் ஆரியத்தின் ஒரு கிளையே கீழையாரியமாக வந்து இந்தியா விற்குட் புகுந்தது. ஆகவே, திரவிடம் வெளிநாட்டினின்று வந்ததன்று.

7. "ஆரியத்திற்குப் பின்பு திரவிட இலக்கியம் முந்தி வளர்ச்சி பெற்றது."

- பக். 373.

### இதன் மறுப்பு

இந்தியாவில் மட்டுமன்றி உலகத்திலேயே முதன்முதல் தோன்றி வளர்ந்தது தமிழிலக்கியமே. அதன் தோற்றம் கி. மு. 10,000 ஆண்டுகட்கு முன். இந்திய ஆரியரின் முதல் இலக்கியம் வேதம் ஆகும். அதன் காலம். கி.மு.1500 - 1200. அதற்குப் பிற்பட்ட சமற்கிருத இலக்கண இசை நாடக நுல் களும் கணியம் மருந்துவம் முதலிய வேறு பலவும் பண்டைத் தமிழி லக்கியத்தைப் பின் பற்றியவையே.

8."பிரிக்கப்படாத இந்தியாவில் நூற்றிற்கு எழுபத்துமூவர்க்கு மேற் பட்டவர் ஆரியமொழிகளைப் பேசினர்." - பக். 374.

### இதன் மறுப்பு

இது தவறான கணக்கு. ஆரியர் வருமுன் திரவிடமாகவும் திரவிடத் திரிபாகவுமிருந்த பல வடஇந்திய மொழிகள் இன்று ஆரியமாகக் கருதப் படுகின்றன. பி.தி (P. T.) சீநிவாச ஐயங்காரின் இந்தியக் கற்காலம்' (Stone Age in India) என்னும் நூலைப் பார்க்க.

9."நீகரோப் போலிக் குக்குலத்தார் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் இன்றும் காணப்படுகின்றனர். இவர் இருளர், காடர், பணியர், குரும்பர் என்பார். பண்டை யிந்திய நீகரோப்போலியரின் எச்சமான இவர் தம் மொழி களை யிழந்துவிட்டுத் தமிழ் வகைகளைப் பேசிவருகின்றனர்." - பக். 375.

## இதன் மறுப்பு

இது முற்றுந் தவறு. தமிழர் கிரேக்க நாட்டினின்று வந்தனரென்று கொண்ட அடிப்படைத் தவற்றினாலேயே, இம் மேற்படைத் தவறும் ஏற்பட் டது. மேற்குறித்த நால்வகுப்பாரும் தூய தமிழினத்தாரே. அவர் மலைகளி லும் காடுகளிலும் வாழ்வதனாலும் நாகரிக மக்களொடு கூட்டுறவு கொள் ளாததினாலுமே சிறிது வேறுபட்டுத் தோன்றுகின்றனர். குரும்பர் பலர் இன்று நாட்டுப்புறங்களிலும் நகர்களிலும் வந்து வேற்றுமை தெரியாது வாழ்கின்ற னர். இருளரும் ஒருசிலர் அவரைப் பின்பற்றியிருக்கின்றனர். தமிழைத் தா- மொழியாகக் கொண்டுள்ள பழங்குடி மக்கள் அனைவரும் தூய தமிழரே.

10. "ஆத்திரியப் பேச்சு திரவிடத்திலும் ஆரியத்திலும் கலந்துள்ளது."- பக்.375.

## இதன் மறுப்பு

**ஆத்திரியம் தமிழிற் கலக்கவில்லை.**

11. "அடுத்து, சின்ன ஆசியாவிலிருந்தும் கீழை நண்ணிலக் கடற் கரையிலிருந்தும் வந்தவராகச் சொல்லப்படும் திரவிடரைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியுள்ளது. அவர் சின்ன ஆசியரும் கிரேத்தாத் தீவினரும் கிரேக்க நாட்டு (ஈசியர் என்னும்) எல்லெனிய முன்னை மக்களும் ஆகிய வரொடு சேர்ந்த நண்ணிலக் கடற்கரை வாணராயிருந்தனர். இந்தியத் திர விடர் இங்ஙனம் முதலில் கிரேக்க நாட்டு எல்லெனிய முன்னையரும் சின்ன ஆசியருமான மக்களின் ஒரு கிளையாகவே யிருந்தனர். திரவிடத்திற்கும் கீழை நண்ணிலக் கடற்கரையர் மொழிக்கும் இடைப்பட்ட இனமை இன்னும் துல்லியமாகத் திட்டஞ் செ-யப்பெறவில்லை. ஆயின், சில பொதுச் சொற்கள் காணப்படுகின்றன. இந்தியத் திரவிட மக்களின் சில சமயக்கருத்து களும் ஏடல்களும் (Ideas) வணக்கங்களும் பழக்கங்களும், மேலை யாசியாவிற்கும் நண்ணிலக் கடற் கரைக்கும் உரியவற்றொடு வலுத்த உறவு கொண்டுள்ளன. திரவிடர் பொதுவாக நண்ணிலக் கடற்கரையர்போல் நீள் தலையராவர். சிந்து பஞ்சாபிலும் இந்தியாவின் ஏனைப் பகுதிகளிலு மிருந்த நகர நாகரிகம் திரவிடமாகவும், அதனால் மேலையாசியாவொடு தொடர்பு கொண்டதாகவும்

தெரிகின்றது. திரவிடமொழிகள் இன்று தக்கணத்திலும் தென்னிந்தியாவிலும் உறுதியான பாளங்களாக ஊன்றி, ஆரியமொழியின் வலுத்த தாக்குதல்களையும் எதிர்த்துத் தனிநிலை பெற்றுள்ளன. இந்திய ஆரியமொழிகளில் வலுத்த திரவிட ஆத்திரியக் கூட்டடிப்படையிருப்பது போன்றே, திரவிட மொழிகளிலும் ஆத்திரியக் கூறுள்ளது.

"இத் திரவிடமொழிகள் தெற்கில் ஆரியமொழிகளின் தாக்குதல் களைத் தடுத்துள்ளன. வடஇந்தியாவிற் பெரும்பாலிடங்களில் அவை மெள்ள மெள்ள ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ளன. ஆண்மையும் நல்லமைப் பொழுங்குமுள்ள ஒரு வெற்றியர் கூட்டத்தின் நெகிழ்ச்சியும் வலிமையுங் கொண்ட பேச்சாகிய ஆரியமொழி, தனக்கு எதிர்ப்பட்ட எதையும் விலக்கித் தள்ளியது. சீனதிபேத்தம், ஆத்திரியம், திராவிடம் என்னும் தனிப்பட்ட முக்குடும்பங்களைச் சேர்ந்த பற்பல வேறின மொழிகளைப் பேசிய, ஆரியத்திற்கு முன்னைமக்களிடை மொழியொற்றுமை யின்மையால், இது எளிதாக நேர்ந்தது. ஆயின் இன்றும் திரவிடமொழிகள் ஆரியத்திற்கு அடுத்து, முதன்மை வா-ந்தவை. அவற்றுட் சில மிக வுயர்நிலை இலக்கியங்கொண்டுள்ளன. அவற்றுள் தலைசிறந்தது எங்ஙனமும் தமிழ்தான். திரவிடமொழிகளின் எழுதப்பட்ட இலக்கியத் தொடக்கம், பெரும்பாலும் இருந்திருக்கக் கூடியபடி, கிறித்துவிற்கு முற்பட்ட முதலாயிர வாண்டின் இறுதி நூற்றாண்டுகளாகும். ஆயின். திரவிடரிடை இலக்கிய முயற்சி கி.பி.முதல் இரண் டொரு நூற்றாண்டுகளிலிருந்து மிகமிகப் பயன்படுவதாயிற்று. கி. பி. முத லாயிர வாண்டின் நடுவையடுத்து, முதன்மைமிக்க திரவிடமொழிகள், நல்லமைப்பொழுங்கும் பண்பாடுங்கொண்ட மக்கட்கூட்ட மொழிகளாக முற் றும் நாட்டப்பட்டுவிட்டன. அவை எதிர்கால மலையாளத்தை யுள்ளிட்ட பழந்தமிழும் பழங்கன்னடமும் பழந்தெலுங்கும் ஆகும்." - பக். 378 - 9.

## இதன் மறுப்பு

தமிழர் அல்லது திரவிடர் முதுபண்டைக்காலத்தில் மேலையாசியாவிலும் ஐரோப்பாவிலும் பரவியிருந்ததினாலேயே, மேனாட்டுத் தெ-வ வணக்கங்களும் பழக்கவழக்கங்களும் சொல்வழக்காறுகளும் தமிழருடையவற்றொடு ஓரளவு ஒத்துள்ளன. இதன் விளக்கத்தை வி. ஆர். (V.R.) இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய 'தமிழரின் தோற்றமும் பரவலும்' (Origin and Spread of the Tamils) என்னும் ஆங்கில நூலில் விரிவாகக் கண்டுகொள்க.

திரவிடமொழிகள் தென்னிந்தியாவிற் சிறந்தும் செறிந்தும் நிலைத்தும் இருப்பதே, திரவிடரும் அவரின் முன்னோரான தமிழரும் தென்னாட்டுப் பழங்குடி மக்கள் என்பதை நாட்டப் போதிய சான்றாகும்.

ஆரியர் முகமதியரும் ஆங்கிலரும்போற் படையெடுத்துப் பொருது வென்று தம் மொழியை இந்தியாவிற் பரப்பவில்லை; அடுத்துக் கெடுத்தலும் ஏமாற்றலும் ஆகிய வலக்காரங்களைக் கையாண்டே பழங்குடிமக்களை மெல்ல மெல்ல அடிப்படுத்தினர். அவரது வெண்ணிற மும் அவர் மொழியின் வல்லோசையுங் கண்டு தமிழரும் திரவிடரும் ஏமாறிவிட்டனர். மேலும், சிவநெறியும் திருமால் நெறியும் ஆகிய தமிழர் சமயங்களையே ஆரியர் தழுவியதாலும், ஆரியத்தோடு பிராகிருதமும் திரவிடமும் தமிழும் ஆகிய இந்திய மொழிகளைக் கலந்தே சமற்கிருதத்தை அமைத்ததாலும், இந்தியருட் பெரும் பான்மையரும் மதப்பித்த மும் கொடைமடமும் மிக்க வருமான தமிழரையும் திரவிடரையும் ஆரியர் எளிதா- அடிப்படுத்தத் தோதாயிற்று.

ஆரியமொழிகள் என்று தவறாகக் கருதப்படும் வடஇந்திய மொழி களின் அடிப்படை தமிழா- அல்லது திரவிடமா- இருப்பது உண்மையே. ஆயின், ஆரியர்க்கு முற்பட்ட பழந்தமிழில் வேறெம்மொழியும் கலக்க வில்லை. ஆரியத்தின் (சமற்கிருதத்தின்) கலப்படத்தை ஒத்துக்கொள் வதால் மட்டும், தமிழையும் கலப்படமாகக் கூறுவது உண்மையாகிவிடாது.

தமிழும் திரவிடமும் ஒரே காலத்தில் இலக்கிய வளர்ச்சி பெற்றவை யல்ல. தெலுங்கு கன்னடம் முதலிய திரவிட மொழிகளின் இலக்கியமெல் லாம் கி. பி. 9 ஆம் அல்லது 10 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையே. தமிழிலக்கியத் தோற்றம் கி. மு. 10 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்பது முன்னரே கூறப்பட்டது.

12. ‘‘இந்திய ஆரியமொழிகள், அவற்றின் முதுபழந் தொல்வடிவ மான வேத சமற்கிருதத்தொடு தொடங்கி, இந்தியாவின் மதித்திறனும் பண் பாடும்பற்றிய பெரிய உரிமைப்பேறாக இருந் துவந்திருக்கின்றன.’’ - பக். 379.

## இதன் மறுப்பு

வேதமொழி வேறு; அதற்குப் பிற்பட்ட அரைச் செயற்கை யிலக்கிய நடைமொழியாகிய சமற்கிருதம் வேறு. வேதமொழியை வேத சமற்கிருதம் என்பது, முற்காலப்படுத்தம் (prochronsim) என்னும் காலவழுவாகும்.

13. ‘‘தமிழிலக்கியம் கிறித்தவ வூழியின் தொடக்கக் காலத்தில் தோன்றிய தாகும். அது பரந்த சமற்கிருதக் கூற்றைத் தன்னுட்கொண்டிருந்து கொண்டே பண்பட்ட வேறெத் திரவிட மொழியையும்விட மிகப் பேரளவு தன் திரவிடச் சொற்றொகுதியின் தூ-மையைத் தாங்கிநிற்கின்றது.’’ - ப. 404.

## இதன் மறுப்பு

ஆரிய வருகைக்கு முற்பட்ட செந்தமிழில் சமஸ்கிருதக் கூறேயிருந்த தில்லை. அந் நிலைமையைக் காட்டும் நூல்கள் அனைத்தும் அழிக்கப் பட்டுவிட்டன.

14. "இந்திய மொழிகளின் வரலாற்றில், இன்றும் சமற்கிருதத்தின் முதன்மை சிறப்பாக வலியுறுத்தப் பெறவேண்டும். சமற்கிருதம் எங்கேனும் பேச்சுமொழியா யில்லாதிருப்பினும், இந்தியாவின் 14 தேசிய மொழிகளுள் ஒன்றாக ஒப்புக்கொள்ளப்பெற்றுள்ளது. ஆயின், இன்னும் அதை வீட்டு மொழியாகக் கருதுபவர் சின்னூற்றுவர் இந்தியாவில் உளர் என்பதை நோக்கும் போது உவகை யுண்டாகின்றது. உண்மையில் சமற்கிருதம் அல்லது இன்னுஞ் சரியானபடி பழைய இந்தாரியம், கிறித்துவிற்குப் பன்னூற்றாண்டு கட்கு முன்பே உலக வழக்கற்றுப்போ-, பிராகிருதம் என்னும் இடையிந்தாரியமாகத் திரிந்து, பின்பு இக்கால அல்லது புதிய இந்தாரிய மொழிகளாக மாறிற்று. ஆயின் சமற்கிருதம் இந்தியாவெங்கும் எப்போதும் விடாமுயற்சியொடு பண்படுத்தப் பெற்றுவந்து. இன்னும் இந்திய மொழிகளுட் பெரும்பாலானவற்றின் உயிர்நாடியிணைப்பாக இருக்கின்றது. இந்திய வொற்றுமை முதற்படியாகப் பண்பாட்டொற்றுமையே. சமற்கிருதம் இப் பொழுது அனைத்திந்தியப் பண்பாட்டின் அடையாளமும் வெளிப்படுத்த மும் ஆகும். இதுவுமன்றித் திரவிடம் உட்பட எல்லா இந்திய மொழிகளும் உயர் பண்பாட்டுச் சொற்களைச் சமற்கிருதத்தினின்று கொள்ளுகின்றன. இக்கால அறிவியல் (Scientific) கம்மிய (Technological) மன்னியல் (Humanistic) ஏடல்களும் செ-முறைகளும் (Processes) கருத்தமைவுகளும் (Concepts) பற்றிய புதுச் சொற்களின் தேவையை இந்திய மொழிகள் எத்துணை அதிகமா- உணர்கின்றனவோ, அத்துணை யதிகமா-ச் சமற் கிருத உறுத்தமும் அவற்றின்மேற் படுகின்றது. தேவையான சொற்கள் சமற்கிருதத்தினின்று நேரே எடுக்கப்படுகின்றன. அல்லது அவை சமற்கிருத வேர்ச்சொற்களும் ஈறுகளுங்கொண்டு புனையப்பெறுகின்றன. - பக். 409

## இதன் மறுப்பு

சமற்கிருதம் ஓர் இலக்கிய நடைமொழி. அது என்றேனும் வழக்கு உற்றது மில்லை, அற்றதுமில்லை.

சமற்கிருதத்தை வீட்டுமொழியாகக் கருதுவார் சிலர் உளராயின், அது அவரது மொழிப்பித்த முதிர்ச்சியையே காட்டுகின்றது.

சமற்கிருதம் பழைய இந்தாரியமன்று. அது இடையிந்தாரியமாக!வும் புது இந்தாரியமாகவும் திரியவில்லை. முதற்காலத் திரவிடமாகிய வடதிர

விடமே பிராகிருதமாகவும் இற்றை வடஇந்திய மொழிகளாகவும் திரிந்துள்ளது. பிராகிருதத்தைத் தன்னுள் ஒரு கூறாகக்கொண்டு அதற்குப் பிற்பட்டுத் தோன்றியதே சமற்கிருதம்.

உயர் பண்பாட்டுச் சொற்களைக் கடன் கோடற்கும் அறிவியலும் கம்மியமும்பற்றிய புதுச்சொற்களைப் புனைவதற்கும் சமற்கிருதத் துணையை இன்றியமையாததாகக் கொள்வது, தமிழொடு தொடர்பற்ற திரவிட மொழிகட் குரியதேயன்றித் தமிழுக் குரியதன்று. சமற்கிருதச் சொற் களுள் ஐந்தி லிருபகுதிக்கு மேற்பட்டவை தமிழ். ஆதலால், தமிழ்த்துணை சமற்கிருதத்திற்கு வேண்டுவதேயன்றிச் சமற்கிருதத் துணை தமிழுக்கு வேண்டுவதன்று.

இங்ஙனம். பர். சட்டர்சியாரும் பர். கத்திரேயாரும் தமிழைத் தமிழர் வாயிலாகக் கல்லாது தமிழ்ப்பகைவரான பிராமணர் தமிழைப்பற்றி ஆங்கி லத்தில் தவறாக எழுதியுள்ளதையே படித்துப் பிழைபடவு ணர்ந்து. மிகப் பொறுப்புவா-ந்த அரசியல் வெளியீடாகிய இந்தியத் திணைக் களஞ்சியத்தில் தாம் விரும்பியவா றெல்லாம் தமிழைப் பழித்தும் இழித்தும் வரைந்துள்ளனர்.

இவர் போக்கைத் தழுவியே பர்.சி.பி. (C.P.) இராமசாமி ஐயரும் பிறரும் வரைந்த இந்தியச் சமயங்கள்பற்றிய கட்டுரையிலும் திருவள்ளுவர் காலம் கி.பி ஆம் நூற்றாண்டென்னும் கருத்துப்படக் குறிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் பொறுப்பற்ற தன்மையைக் கண்டே, இந்திய அரசினர்க்கு ஏதும் இழுக்கு நேராதவாறு, இந்தியத் திணைக்களஞ்சியத்தை வெளியிட்ட அரசியல் அதிகாரியார் "இம் மடலத்தில் வெளிடப்பட்டுள்ள கருத்துகள் கட்டுரையாளருடையனவேயன்றி இந்திய அரசியலாருடையன வல்ல." (The views expressed in this volume are those of the contributors and not of the Government of India) என்று உள்தலைப்பிதழின் பின்புறத்திற் குறித்துத் தப்பிக்கொண்டதும் என்க.

பர். சு. கு. சட்டர்சியார் 'நந்தமௌரியர் காலம்' என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலில், தமிழர் நண்ணிலக் கடற்கரையினின்று வந்தவர் என்று வரைந்ததை அன்றே கண்டித்திருந்தால், அவர் கொள்கை இத்துணை வளர்ந்தும் இராது. ஆயின், முப்பல்கலைக்கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரும், குடியிருக்கும் வீட்டிற் கொள்ளிவைப்பவரும் தமிழ்ப்பகை வரை வலிய வரவழைத்தச் சிறப்புச் செ-பவருமாதலின் தமிழுக்கு இந் நிலைமை நேர்ந்ததென்க.

பர், சேதுப்பிள்ளையார் தம் பதவியினாற் பெற்ற செல்வத்திலிருந்து, தம் அன்னையார் பெயரும் தம் பெயரும் என்றும் நிலைத்திருக்குமாறு சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் அண்ணாமலை பல்கலைக்கழகத் திற்கும் தனித்தனி காலிலக்கம் உருபா சொற்பொழிவு மானியமாக ஒதுக்கி வைத்திருப்பதால், அதன் சார்பிற் சொற்பொழிவாற்றும் புலவர், தமிழ்நலத் தைக் கருதாது தம் நலம் ஒன்றையே கருதி,அவரைத் தலைசிறந்த தமிழ்த் தொண்டராக வானளாவப் புகழ்வது, தனக்கு ஒரு சூப்பெலும் புத்துண்டு கிடைக்குமாறு தன் தந்தை மரத்தினின்று கீழ்விழுந்து காலொடிவதை விரும்பிய சிறுமியின் தன்மையையே ஒக்கும்.

## 9. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்

பேராய ஆட்சியிற் பேராயக் கட்சிச் சார்பினால் மதுரைப் பல்கலைக்கழ கத்திற்கு முதல் துணைக் கண்காணகராக அமர்த்தப்பெற்று முதல் ஆண்டி லேயே அப் பல்கலைக்கழகத்திற் பண்டாரகர் என்னும் கண்ணியப் பட்டம் பெற்ற பேரா. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழைச் செவ்வையாக அறியாமைக்கு முந்நிலைமைகள் கரணியமா- உள்ளன. அவையாவன:

1. சென்னையரா யுள்ளமை.

2. சமற்கிருத அடிப்படையில் தமிழ் கற்றமை.

3. பேராயத்தைச் சேர்ந்தமை.

பேராயத்தைச் சேர்ந்ததினாலேயே அவர் இதுவரை இந்தியை எதிர்த்ததில்லை. இந்தியை ஏற்பவர் உண்மையான தமிழன்பரா யிருக்க முடி யாது. அதனாலேயே கல்வித்தந்தையார் திரு. கருமுத்து தியாகராசச் செட்டி யாரும் நாவலர் சோசுந்தர பாரதியாரும் பேராயத்தை விட்டு விலகினர்.

பர்.தெ.பொ. மீ. தம் தமிழ்ப்பற்றின்மையை வெளிப்படையாகக் காட் டிக்கொண்ட நிகழ்ச்சிகள் வருமாறு:

1. 'தமிழா நினைத்துப் பார்' என்னும் நூலில் தமிழரின் முன்னோரை வெளிநாட்டினின்று வந்தவராகக் கூறியிருத்தலும், பர். சு .கு. சட்டர்சியார் அண்ணாமலை பல்கலைக்கழகத் திரவிட மொழிநூல் துறைத் தொடக்க விழாத் தலைமையுரையில் அங்ஙனங் கூறியிருப்பதை மறுக்காமையும்.

"ஆஸ்திரேலியாவிலும் கிழக்குத் தீவுகளிலும் வாழ்கிற மக்களினமும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஒருகாலத்தில் வாழ்ந்திருத்தல்

வேண்டும். வெட்டர் இருளர் மலைவாழ் சாதியார் முதலானோர் இந்த இனத்தைச் சேர்ந்தவர் ஆகலாம்.'' 'பிராஹுவி' என்ற திராவிடமொழியை இந்தியாவின் வடமேற்கிலுள்ள பெலுச்சிஸ்தானத்தில் உள்ளவர் பேசுகின்றனர். ஆகவே இந்த மொழிக்கூட்டத்தினர் வடமேற்கு வழியாக இந்தியாவிற்கு வந்து, படிப்படியாகத் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் பரவினர் என்று கூறவேண்டும்.

“ஆரியர் பேசிய வடமொழி, இந்திய நாட்டு - ஏன்? - ஆசியநாட்டுப் பொதுமொழியாயிற்று'' தமிழா நினைத்துப் பார். இந்திய வரலாற்றின் கடைக் கால்''
பக். 2-7

2. அமெரிக்க வண்ணனை மொழியிய லாசிரியர் திரு. (H.A.) கிளீசனாரிடம், தமிழர்க்கு நால்நிறங்களே தெரியுமென்று கூறியமை.

3. 1957 - ல் தேராதூனில் நடைபெற்ற வேனில் மொழியியற்பள்ளியில் பேரா. சீகண்டையா பொன் என்ற தமிழ்ச்சொல் கன்னடத்தில் ஹொன் என்று திரிந்துள்ளதென்று தம் வகுப்பு மாணவர்க்குக் கூறியதைக் கண்டித்து, வண்ணனை மொழியியல் வகுப்பில் வரலாற்று மொழியியல் கற்பித்தல் கூடாதென்றமை.

4. அண்ணாமலை பல்கலைக்கழத்தில் திரு. (T.M) நாராணசாமிப் பிள்ளையார் தலைமையிற் பர். சு. கு. சட்டர்சியார் சொற்பெருக்கு நிகழ்த் திய கூட்டத்தில், தொல்காப்பியம் தோன்றிய காலம் கிறித்தவ ஊழியின் முந்து நூற்றாண்டுகள் (Early centuries of the Christian era)எனக் கூறியமை.

(5) அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நான் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி'தொகுக்க எதுவுஞ் செ-யாமை.

(6) தமிழ்க் கலைச்சொல்லாக்கக் குழுக்களுள் ஒன்றிலுங் கலந்து கொள்ளாமை.

(7) 1994 ஆம் ஆண்டுச் 'சுதேசமித்திரன்' விளக்கணி (தீபாவளி) மலரில் வரைந்துள்ள 'தமிழில் பிறமொழிச் சொற்கள்' என்னுங் கட்டுரையில், தமிழை ஒரு கலவை மொழியாகக் காட்டியிருத்தல்.

இக் கட்டுரையை நடுநிலையாளர் எவர் படிப்பினும் பர். தெ. பொ. மீ. ஒரு தமிழ்ப் பகைவர் என்ற முடிபிற்குத்தான் வரமுடியும். தமிழில் உண்மையான பற்றுள்ளவர் பிறமொழிகளிலுள்ள தமிழ்ச்சொற்களையே குறிப்பிட்டுத்

தமிழின் பெருமையைக் காட்டுவர். அங்ஙனம் காட்டியவர் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கோ. இராமச் சந்திரனார் என்ற நிலவழகனார்.

வழுதுணங்கா-, தவளைக்கா-, மீசை, இளநீர் முதலிய சொற்கள் முண்டாமொழிச் சொற்களென்றும், முருங்கை என்பது சிங்களச்சொல் லென்றும் கூறியிருப்பது, எத்துணை இளிவரலும் இரங்கத்தக்க செ-தியும் ஆகும்! ஆங்கிலரான பேரா. பரோ கூட முருங்கை என்பது தென்சொல் லென்று தம் ‘சமற் கிருதமொழி’ என்னும் ஆங்கில நூலுட் கூறியிருத்தல் காண்க.

இனி **மத்திகை, சுருங்கை, கன்னல், ஓரை** என்னும் சொற்கள் கிரேக்கச் சொற்களேயாம் என்று கூறியிருப்பது, அவரது தமிழறிவுத் தாழ்வையே வலியுறுத்திக் காட்டுகின்றது. கிரேக்கத்தில் இந்நாற் சொற்கள் மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான வேறுசொற்களும் தமிழாயுள்ளன.

அவற்றுட் பல வருமாறு:

| **தமிழ்** | **கிரேக்கம்** |
|---|---|
| அஃகு | oxus (sharp) |
| அகில் | agallochen |
| அகை | ago (to drive) |
| அச்சு | axon |
| அசை | seio |
| அஞ்சல் | aggelos (angelos) |
| அண் | ana (up) |
| அத்தன் | tetta |
| அப்பன் | abbas |
| அப்பால் | apo |
| அம்பு (வளையல்) | amphi (round) |
| அரசன் | archon |
| அரத்தம் | erythros |
| அரிசி | oryza |
| அருவு | rheo (flow) |

| | |
|---|---|
| அல் | an (privative) |
| அல்லது | allos |
| அலை | ale (wander) |
| அறை-ரா- (தெ.) | lai -a (stone) |
| ஆண் | aner (man) |
| ஆழி (வட்டம்) | halo |
| இஞ்சிவேர் | zingiber |
| இகல் | agon (contest) |
| இதா | itha |
| இ- (இயங்கு) | ei -mi |
| இரு | es |
| இல் | en |
| இலக்கம் | leukos (white) |
| இழு | eruo (draw), helko (drag) |
| இளகு | eleeo (to pity), elos (compassion) |
| உண்டு (உள்பொருள்) | onto (being) |
| உந்து | otheo (push) |
| உம்பர் | ufar, hyper |
| உமட்டு | emco |
| உரும், உரும்பு | thermos |
| உளை | elos (marsh) |
| ஊளை | oloyuzo |
| எ - | hio |
| எல் (கதிரவன்) | helios |
| ஏர் | aroo |
| ஏர் (எழு) | aeiro (raise up) |
| ஏழகம் (செம்மறிக்கடா) | alke (elk) |
| ஏறுகடை | eskhatos (?) |

| | |
|---|---|
| ஒழி | ollus (destroy) |
| கணு | gonu |
| கந்தல் | kentron |
| கப்பல் | skaphe |
| கரப்பு | krypto |
| கரை | horos (limit) |
| கலவம் | karahos (boat) |
| கழுவு | kluzo |
| கள்வன் | kleptes, klapeis |
| களவன், | |
| கடப்பான்(நண்டு) | karabos (crab) |
| களம் | halos (threshing floor) |
| களை (அழகு) | kalos, kallos |
| கறங்கு (சுழற்சி) | guros (ring), E. gyre |
| கறி | kreas (meat, flesh) |
| கன்னல் (கரும்பு) | kanna (reed) |
| காண் | gno, O E. con, cun, ken |
| காமம் | gamos (marriage) |
| கா - | kaio (burn) |
| கால் | skelos (leg) |
| கால் (காம்பு) | kanlos (?) |
| கிழம் | geron (old), geras (old age) |
| கிழி, கீள் | klao |
| கிளை | klados (young shoot, branch) |
| கீழ், தெ. கிந்த | cata (down) |
| கிறு, கிறுகிறு | guros, E. gyre |
| குந்தம் | kontos, kenteo (prick, goad) |
| குதறு | sked -aiss |

| | |
|---|---|
| குப்பல், குப்பை | kopros (dung, dirt) |
| கும் -கும்ம | sym, syn |
| கும்பா | kumbe, kumbion |
| குயில் (துளை, குடை) | koilon (hollow) |
| குரங்கு (வளை) | kurtos (curved) |
| குரவை | khoros (orig. a dance in a ring |
| குரிசில், குருசில் | kyrios, kurios (lord) |
| குரு (நிறம்) | chroma |
| குருகு (நாரை) | geranos |
| குருகு (வளையல்) | guros (ring) |
| குலவு (வளை) | clino, kloo |
| குழி | koilos |
| கேள் | cluo |
| கை | kheir |
| கொறி (செம்மறி) | krios (ram) |
| கொனை | konos |
| கோணம் | gonia |
| சங்கு | cogkhe |
| சந்து | sundeo (bind together) |
| சமம் | homos |
| சரடு | chorde |
| சருக்கரம் -சக்கரம் | kuklos |
| சருகு | seros (dry) |
| சாயை | skia (shade) |
| சிதறு | storeununi |
| சீறு | surijo (hiss) |
| சுருங்கை | surigx, surigg, |
| சுரும்பு | thronax E. drone |

| | |
|---|---|
| செப்பு | epo, gepo (speak) |
| சொறி | psora (itch) |
| தயிர் | turos (cheese) |
| தளம்பு | trem -eim |
| தளிர் | thallos |
| தாவு (இடம்) | topos (place) |
| திரிகை -திகிரி | trochos (wheel) |
| திருப்பு | tropa (turn) |
| திருப்பம் | trope, tropa (turn) |
| திரும்பு | tornos (a turner's chisel) |
| தின்றி | tenthes (gourmand) |
| தீர்மானம் (முடிவு, முடிபு) | terma (boundary, limit, end) |
| துமி (வெட்டு) | tome (a cutting) |
| துறப்பணம் | trupanon |
| துருவு -துருவ | tero (through) |
| துள் -துளை (வாசல்) | thura (door) |
| தெள் -தெளிவு | delos (plain, clear) |
| தெ-வம் | theos |
| தொலை, தொலைவு | telos (distance) |
| தோகை (மயில்) | taos |
| நங்கூரம் | angtyra |
| நசு, நசுங்கு | nasso (squeeze) |
| நரம்பு | neuron |
| நீந்து | ne -o, nē -cho |
| நீரம் - ஈரம் | neros (wet) |
| படகு, படவு | baris |
| படர் (செல்) | pet |
| படு (விழு) | pet |

| | |
|---|---|
| படு (வருந்து) | pathein (suffer) |
| பண் | pen - omai (to work), pon -os (work) |
| பதம் - பாதம் | podos |
| பம்பு (தெ.) = அனுப்பு | pempo (send) |
| பரி (வட்ட) | peri |
| பல | poly, polu, polus |
| பழைய | palaios |
| பாடு | pathos (suffering) |
| பாதை | hodos |
| பாழி (நகரம்) | polis (city) |
| பிகுவு (தெ.) | sphiggo (draw tightly) |
| பிசை | pisso |
| பிடுங்கு (பிடி, உடை, வெடி) | (f) regnymi |
| புட்டி | buttis |
| புரி (செ-) | prasso |
| புருவம் | ophrys (brow) |
| புரை (துளை) | poros |
| புழை (சிறுவாயில்) | pule, pulai, pulon |
| புறம் (பக்கம்) | para |
| பெள் (விழை) | philos |
| பேபே | bobos |
| பைதல் | paidos |
| பையன் | pais |
| பொறு | pher, pherein, phero |
| போ | ba -o |
| மடல் | petalon |
| மத்து -மது | methu |

| | |
|---|---|
| மற்று | meta (a pfx. meanning beyond, over, after and frequently) denoting change or transforma tion) |
| மனை | mone (abode) |
| மால் (கருப்பு) | melos (black) |
| முகில் | O -michle |
| முயல் | moleo (strive) |
| முறுமுறு | mumu, E. murmur |
| முன்னம் - முனம் - மனம் | menos (mind) |
| மூக்கு[1] | mukter (nose) |
| மூக்கு[2] | muxa (mucus) |
| மூழ் - மூடு, மூ- | muo (shut) |
| மூளை - | muelose (marrow) |
| மேல் - மெலுக்கு | malakos (soft) |
| மொத்திகை -மத்திகை | mastix, mastigos |
| மொல்லை | molos (mass) |
| வழு | sphellow (fallacy) |
| விளாசு | plasso (strike) |
| விறை | phrisso (shiver with cold) |
| வெட்டம் (வெளிச்சம்) | photos (light) |

**மத்திகை**

மொத்துதல் = அடித்தல். மொத்து -மொத்திகை -மத்திகை = குதிரைச்சம்மட்டி.

ஒ. நோ: சவட்டு -சவட்டி சாட்டி. சவட்டு - சவட்டை - சாட்டை. சவட்டு - சமட்டு -சமட்டி - சம்மட்டி.

ஒகரம் அகரமாகத் திரிதல் இயல்பு. எ -டு: ஒட்டு - அட்டு, கொம்பு- கம்பு, தொண்டையார் பேட்டை -தண்டையார்பேட்டை, பொலிசை - பலிசை, மொண்டை (மொந்தை) -மண்டை.

கிரேக்க மொழியில் இச்சொற்கு மூலமில்லை.

**சுருங்கை**

சுல் -சூல். சூலுதல் = தோண்டுதல்.

“நுங்குசூன் றிட்டன்ன கண்ணீர்மை” (நாலடி.44)

சுல் -)சுன்) -சுனை = துளைவழியா- நீர்சுரக்கும் நீர்நிலை.

சுல் -சுர் - சுர. சுரத்தல் =துளைவழியாக நீர் ஒழுகுதல்.

சுர = சுரை = சுரக்கை, பால் சுரக்கும் மடி, கறவை, உட்டுளை, திருகாணிக் குழா-, மூங்கிற்குழா-, நெற்றானபின் உட்டுளை விழும் கா-,

சுர - சுரப்பு - சுரப்பி - சுரபி = கறவையிற் சிறந்த ஆ.

சுர - சுரங்கு - சுரங்கம் = வெடிமருந்திடும் குழி, கீழ்நிலவழி, இரும்பு முதலியன தோண்டியெடுக்கும் கனி.

சுர் -சுரு -சுரி. சுரித்தல் = துளையிடுதல். சுரி =துளை (திவ.), ஏட்டுத்துளை.

சுரு - (சுருங்கு) - சுருங்கை - நுழைவாயில், நீர்செல்லுங் கரந்து படை, கீழ்நிலவழி.

சுர - ஸ்ரு (இ.வே.), சுருங்கை = ஸுருங்கா (வ.) சுரப்பி -சுரபி ஸுரபி (வ.), சுருங்கை -ஸுருங்கா (வ.),

Surigx என்னும் கிரேக்கச் சொற்குக் குழா- என்றுதான் பொருள். ஆங்கிலத்தில்தான் அதற்குச் செவிக்குழா-, சுருங்கை முதலிய பொருள்கள் கொள்ளப்பெற்றுள்ளன. ஆதலால், மேற்காட்டிய வடசொற்கள் போன்றே கிரேக்கச் சொல்லும் தமிழ்ச்சொல் திரிபாகும். துளைத்தல் என்னும் வேர்ப் பொருளும் சுல் என்னும் அடிவேரும் ஆரியமொழிகளி லின்மையுங் கவனிக்கத்தக்கதாம்.

**கன்னல்**

கல்லுதல் = தோண்டுதல். கல் - கன் - கன்னம் = சுவரிற் குடையும் துளை. கன் -கனி = நிலத்தில் தோண்டும் சுரங்கம்.

கன்- கன்னல் = உட்குழி, நீர்க்கலம், நாழிகை வட்டில், நாழிகை, உட் டுளையுள்ள நாணல், நாணல் வகையான கரும்பு.

ஒ. நோ: நுள் - நள் - நாளம் - நாணல்.

கன்ன என்னும் கிரேக்கச் சொற்கு நாணல் என்றே பொருள். இச் சொற்கு அடிவேரும் அடிமூலப்பொருளும் தமிழிலேயே யிருத்தல் காண்க.

### ஓரை

ஒல்லுதல் = பொருந்துதல். ஒல் - ஒர் - ஓர். - ஓர்தல் = பொருந்துதல், கூடுதல். ஓர் - ஓரை =கூட்டம், மகளிர் கூட்டம் (பிங்.), விண்மீன் கூட்டம் (இராசி).

மேழம், விடை முதலிய பன்னீரோரைகளும் விண்மீன் கூட்டங்களா தலால், ஆங்கிலத்தில் constellation என்றும் வடமொழியில் 'ராசி' என்றும், பெயர் பெற்றிருத்தலை நோக்குக.

ஹோரா என்னும் கிரேக்கச் சொல் நாழிகை அல்லது முழுத்தம் (முகூர்த்தம்) என்று பொருள்படுவதேயன்றி, ஓரை (signs of the zodiac) என்று பொருள்படுவதன்று.

**"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்**
**துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை" (1081)**

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் உள்ள ஓரை என்னும் சொல், மேழம் விடை முதலிய பன்னீரோரையுள் ஒன்றன் எழுச்சியையே குறிக்கும்.

ஆதலால், தமிழ் ஓரைக்கும் கிரேக்க ஹோராவிற்கும் யாதொரு தொடர்புமில்லையெனக் கூறி விடுக்க.

இனி, "யூதர்கள்......புகுந்தார்கள்" 'யூதர்' என்ற பெயர் 'யௌதி' என்று வழங்கும் ஹீப்ரூச் சொல்லாகும்" என்னும் கூற்று, கட்டுரையாளர் எந்த அளவிற்குத் தமிழைக் கலவையாகக் காட்ட விரும்புகிறார் என்பதையும் புலப்படுத்தும்.

(8) சென்னையில் நடைபெற்ற சட்ட மொழிபெயர்ப்புக் குழுக்கூட்டத் தில் தலைமை தாங்கியபோது, தமிழ்த் தூ-மையைப் போற்ற வேண்டும் என்ப தைக் குறிக்கொண்டு பொதுமக்கட்கு விளங்காத சொல்லைப் புகுத்தல் கூடா தென்று கூறியமை.

(9) பர். மெ. சுந்தரனார் மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியப் பதவிக்குரிய முழுத்தகுதியும் உடையாரேனும், அவரை அப் பதவிக்கு அமர்த்தாமை.

(10) 2 ஆம் உலகத் தமிழ் மாநாட்டுக்ருத்தரங்கில் தமிழரல்லார் தமிழைப் பழித்துப் பேசியவற்றைக் கண்டியாமை.

## *(10) தனிநாயகம்*

இவரைப்பற்றிப் பின்னர்க் கூறப்படும்.

## *(11) தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்*

இனி, தலைமைப் பதவி தாங்கும் தமிழ்ப் பேராசிரியர் பலர் ஓர் ஆங்கிலப் பட்டம் பெற்ற துணையானே தம்மை இறப்ப மதித்து எல்லாம் வல்லராக எண்ணி, புலமைத்திற வேறுபாடறியாதும் தமிழ்நலங் கருதாது தந் நலமே கருதியும், தம் பதவிக்குரிய தமிழ்க் கடமையில் முற்றும் தவறிவிடு கின்றனர்.

சோழன் ஒருவன் ஔவையார் ஒருவரை நோக்கி, கம்பர் அகல வனப் பியற்றுவதில் ஆற்றல் மிக்கவர் என்று சிறப்பித்துக் கூறியபோது, பின்னவர்,

**“வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்**
**தேன்சிலம்பி யாவர்க்குஞ் செ–யரிதால் –யாம்பெரிதும்**
**வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்**
**எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது”**

என்று பாடி முன்னவன் வாயடைந்தார்.

**“வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான்**
**விருத்த மென்னும்**
**ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா வந்தாதிக்**
**கொட்டக் கூத்தன்**
**கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக்**
**காள மேகம்**
**பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாலொருவர்**
**பகரொ ணாதே.”**

என்னும் பாட்டும் பாவலர் திறமை வேறுபாட்டைத் தெளிவுபடுத்தும்.

இக்காலப் புலவருட் சிலர் நாவலர்; சிலர் எழுத்தாளர்; சிலர் நூல்வலர்; சிலர் உரைவலர்; சிலர் ஆ-வலர்.

ஆரா-ச்சியாளருள்ளும், சிலர் நூலாரா-ச்சியாளர்; சிலர் வரலாற்றாரா-ச்சியாளர்; சிலர் மொழியாரா-ச்சியாளர்; சிலர் மதவாரா-ச்சியாளர்.

வரலாற்றாரா-ச்சியாளருள்; சிலர் பழம்பொருளாரா-ச்சியாளர்; சிலர் கல்வெட்டாரா-ச்சியாளர்; சிலர் காசாரா-ச்சியாளர்; சிலர் ஏட்டுச்சான்றாரா-ச்சியாளர்; சிலர் பரவை வழக்காரா-ச்சியாளர்.

இங்ஙனம் ஒவ்வொருவர் சிறப்புத் திறமையையும் அறிந்து,

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றா-ந்து**

**அதனை அவன்கண் விடல்"**

ஒரு மொழியில் ஓர் அகரமுதலி தொகுத்தற்கோ திருத்தற்கோ இலக்கண அறிவு, சொல்லாரா-ச்சி, மொழியாரா-ச்சி, சொற்றொகுப்பு ஆகிய நாற்றிறம் வேண்டும். இவற்றை ஒருங்கேயுடையவர் தனிப்பட ஓர் அகர முதலியைத் தொகுக்கலாம் அல்லது திருத்தலாம்.

ஆங்கிலத்தில், சாண்சன் (Johnson), அன்னண்டேல் (Annan-dale), வெபுத்தர் (Webster), சாண் ஆசில்வீ (John Ogilivie) முதலி யோர் தனிப்பட்ட அகரமுதலி தொகுத்தவரே. தமிழிலும், வீரமாமுனிவர் என்னும் கான்சுத்தாந்தியசு பெசுக்கி (Constantius Beschi), பெப்பிரிசியசு (Fabricius), இராட்டிலர் (Rottler), போப்பு (Pope), பெர்சிவால் (Perci val), வின்சுலோ (Winslow) முதலிய அயல்நாட்டாரும்; சந்திரசேகர பண்டிதர், கதிரைவேற்பிள்ளை, குமாரசாமிப் பிள்ளை முதலிய தமிழரும்; தனிப்பட்ட அகரமுதலி தொகுத்திருப்பதை அறிந்திருந்தும்; சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகர முதலியின் பெருந்தொகையான பல்வகைக் கழகக் கடும்பிழைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் தெளிவாக நான் வெயிட்டுக் காட்டியபின்பும்; அவ் வகரமுதலியைத் திருத்தப் பலர் வேண்டும் என்பதுபோல் ஏராளமாகச் செலவாகும் என்று, பொறுப்புவா-ந்த பதவியிலுள்ள தமிழ்ப் பேராசிரியர் சொல்லிவருகின்றனர்.

அவ் வகரமுதலியைத் திருத்தத் தகுதிவா-ந்த ஒருவரே போதும்; மூவாண்டிற்குள் திருத்திவிடலாம். ஐம்பதினாயிரம் உருபாவிற்குமேற் செல்லாது.

ஆயினும், தமிழ்ப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகத் துணைக் கண்காணகரின் தமிழறியாமையையும் ஆரியக் கூட்டத்தின் சா-காலையும் துணைக்கொண்டு, எல்லாம் வல்லவராகத் தம்மைக் காட்டிக்கொள்ளும்

நிலைமைக்கு இழுக்குநேராதவாறு, அவ் வகர முதலித் திருத்தத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையிட்டு வருகின்றனர்.

அத் திருத்தம் முன்னரே நிகழ்ந்திருப்பின், பேரா, பரோவும் பேரா. எமெனோவும் அவ் வகரமுதலியை அடிப்படையாகக் கொண்டு தம் திர விட ஒப்பியல் அகரமுதலியை வழுப்படத் தொகுத்திரார்; கோலாலம்பூரி லும் சென்னையிலும் உலகத் தமிழ்ப் பழிப்பு மாநாடுகள் நிகழ்ந்திரா; மறை மலையடிகளின் 'தா-மொழி'க் கட்டுரைக்கு எதிர்ப்பும் எழுந்திராது.

சிலர் மேனாட்டு மொழிநூலறிஞரின் நூல்களைப் படித்திருப்பத னாலேயே தங்களையும் மொழிநூலதிகாரிகளாகக் கருதிக்கொள்கின்றனர். படிப்பு வேறு; ஆரா-ச்சி வேறு என்பதை அவர் அறிவதில்லை. மேனாட் டார் சமற்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டு மொழிநூலை வளர்த் திருப்பதால், அது தமிழுக்கும் உண்மைக்கும் மாறானது என்பதும் அவர்க் குத் தெரிவதில்லை.

தமிழ் ஆரியத்திற்கு அடிப்படுத்தப்பட்டிருப்பதால், அதை முதலில் மீட்காது அதனை வளர்த்தல் இயலாது. இதற்கு இன்றியமையாத துணை உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட நடுநிலை மொழிநூலே.

## *(12) சிவமடத் தலைவர்*

இனி. தமிழ்நாட்டிலுள்ள சிவமடங்களும்- குன்றக்குடி தவிர ஏனைய வெல்லாம்- பிற்காலத்து ஆரிய வேதங்களையே இன்னும் அடிப்படை யாகக் கொண்டு சிவநெறியைப் போற்றிவருவதால், ஆரிய வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சிவநெறியும் அதனொடு சேர்ந்த தமிழும் அளவிறந்து கெடுகின்றன. இங்ஙனம் கெடுத்தற்குக் கரணியம் ஆரியத்திற்கு மாறாகச் சிவனியத்தை வளர்த்தால் சிவமடங்களையும் அரசியலின் அறப்புறத்திணைக்களத்திற்கு உட்படுத்திவிடுவர் என்னும் அச்சமோ, உண்மையான வரலாற்றை அறியாமையோ அறிகிலம்.

## *(13) தமிழ்நாட்டுப் பேராயத் தலைவர்*

தமிழ்நாட்டுப் பேராயத் தலைவர், இந்தியை ஆட்சிமொழியாக ஏற் றுத் தமிழ்நாட்டுப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கட்டாயப் பாடமாகப் புகுத்தி, எதிர்காலத்தில் தமிழ் கெடுவதற்கும் இறந்துபடுவதற்கும் வழி கோலவும் துணிந்தனர்.

இனி, மரபான தமிழ் வரிவடியை மாற்றியும், லகரளகரமெ-த் திரிதற்புணர்ச்சியைத் தோன்றற்புணர்ச்சியாகத் திரித்தும், வடசொற்களோடு ஆங்கிலச் சொற்களையும் உரைநடையிலுஞ் செ-யுளிலுங் கலந்தும், தமிழை இழித்தும் பழித்துங்கூறியும், தமிழைக் கெடுத்த சிறியாரும் பெரியாரும் எத்துணையோ பலர் என அறிக.

## 6. மறைமலையடிகள் மாண்பு

தம் வாழ்நாள் முழுதும் தமக்கென வாழாது தமிழ்க்கெனவும் தமிழர்க்கெனவும் வாழ்ந்து, ஆரியத்தாற் குறைப்புண்டும் அயற்சொற் களால் நெருக்குண்டும் சுருக்குண்டும் அகப்பகைவரால் இழிப்புண்டும் பழிப்புண்டும் அடியோடழிந்துபோம் நிலையிலிருந்த தமிழைத் தம் முக்கரணத்தாலும் ஒல்லும் வகையாற் செல்லும் வழியெல்லாம் ஓவாது போற்றிக்காத்து, ஆரியத்தினின்று அறவே மீட்டு, பல்லவபுரம் பொது நிலைக் கழகம் நிறுவியும், 'அறிவுக்கடல்' ஆரா-ச்சியிதழ் நடத்தியும், அவைகளிற் சொற்பொழிவாற்றியும், பல்வேறு துறைகளிற் பயன்மிக்க நூல்களியற்றியும், தென்மதுரைத் தீந்தமிழை மீண்டும் தோற்றுவித்து, இனி இவ் வுலகுள்ளளவுந் தொடரும் புத்தூழியைத் தொடங் கிவைத்த ஒப்புயர் வற்ற மாபெருந் தமிழறிஞர் மறைமலையடிகள்

## தமிழ்க்கால முப்பெரும் பிரிவு

(1) குமரிக்காலம் அல்லது தனிநிலைக் காலம் -தோரா கி.மு. 50, 000 -1500.

(2) இடைநிலைக்காலம் அல்லதுக் காலம் தோரா.கி.மு. 1500-கி.பி. 1916 - கலவை.

(3) மறைமலைக்காலம் அல்லது மறுமலர்ச்சிக்காலம் -கி.பி. 1916 உலகிறுதி.

இங்ஙனம் தமிழொடு இரண்டறக் கலந்த மறைமலையடிகளை ஏனைப் புலவருளொருவராகக் கருதுவதும், அடிகள் தொடர்பின்றியுந் தமிழிருப்பதாக மயங்குவதும், தமிழறியாமையையே காட்டும். தமிழ்த்தொண்டர் திருக்கூட்டத்தில் மறைமலையடிகட்கு அடுத்தபடியாகப் பெருமைவா-ந்த திரு.விக. அவர்களும்,

"மறைமலையடிகளால் தென்னாடு விழிப்புற்றதை மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும். அடிகளே தென்னாடு; தென்னாடே அடிகள்" என்று கூறியிருத்தல் காண்க.

# 7. வடவர் மொழிநூல்

**வடவர் மொழிநூல் வருமாறு:**

ஆரிய வேதமொழியும் அதன்வழிப்பட்ட சமற்கிருதமும் தேவமொழி யாம். அவ் விரண்டும் ஒன்றே.

வேதங்கள் இறைவனைப்போல் தொடக்கமற்றவை. அவற்றின் மந் திரங்களொடு தொடர்புள்ள முனிவர், அவற்றை இறைவனருளால் கண்ட வரேயன்றி இயற்றினவரல்லர்.

முதற்காலத்தில் மூவுலக ஆட்சியும் சமற்கிருதத்திலேயே நடை பெற்றுவந்தது. இன்றும் வீட்டுலகிற் பேசப்பெறுவது அம் மொழியே.

அ டாத்யாயீ என்னும் பாணினீயத்தின் குறுங்கணக்கு நூற்பா பதினான்கும் சிவநூற்பாக்கள். அவை சிவபெருமான் உடுக்கையினின்றுந் தோன்றின. பாணினியாரின் இலக்கணத்தை அவர்க்கு அறிவுறுத்தியவர் இறைவனாரே.

ஆரியம் பிறமொழிகளினின்று கடன்கொள்ளாது. ஆயின் பிறமொழி களெல்லாம் அதனின்று கடன்கொள்ளும். மேலை யாரியமொழிகளும் இந்திய மொழிக ளெல்லாமும் ஆரியக் கிளைகளே, சமற்கிருதத் தினின்று பிராகிருமும் பிராகிருதத்தினின்று திரவிடமும் தோன்றின.

வேத மந்திரங்கள் இம்மை மறுமை வீடு ஆகிய மும்மையுந் தர வல்லன. அவற்றின் ஆற்றற்பாடு அவற்றின் துல்லிபமான பலுக்கலைப் பொறுத்தது. அப் பலுக்கல் சிறிது தவறினும் பேரிடர் விளையும். ஆதலால், பிராமணரே அவற்றை ஓதித் தாம் வழிபடவும், பிறரை வழிபடச் செ-யவும் வேண்டும்.

# 8. மேலை மொழிநூல் வரலாறு

'வரலாற்றுத் தந்தை' என்று சொல்லப்பெறும் எரோதாத்தசு (Herodotus. கி.மு. 485 - 25), மொழிகளுள் முதலது எது என்று கண்டு பிடிக்க, ஓர் எகிபதிய அரசன் இரு குழவிகளைப் பிறந்தவுடன் வேறாகப் பிரித்து வளர்த்த தாகவும், அவற்றுள் ஒன்று 'பெகோஸ்'என்னும் பிரிசியச் (Phrygian) சொல்லை முந்திச் சொல்லியதால், பிரிசிய மொழியே உலக முதன் மொழியென்று முடிபு செ-ததாவும் தம் நூலொன்றிற் குறித்திருக்கின்றார்.

பிளேற்றோ (Plato, கி.மு. 427 -347) என்னும் அத்தேனிய மெ-ப் பொருளியலார் சொல்லிற்கும் பொருளிற்குமுள்ள தொடர்பு இயற்கை யானதென்றும், அவர்தம் தலைமை மாணவரான அரிசுற்றாட்டில் (Aristotle, கி.மு. 384 - 22) அது செயற்கையானது அல்லது மரபுவழிப்பட்டது என்றும் கொண்டனர்.

இத்துணையே எகிபதியரும் கிரேக்கரும் செ-த மொழியாரா-ச்சி.

பிரித்தானியில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வந்தேறி மொழியாகத் தோன்றிய ஆங்கிலம் என்னும் முக்குலக் கூட்டுமொழி, முதலில் கெலத்தி யத்தோடும் (Keltic) 6ஆம் நூற்றாண்டில் இலத்தீனோடும், 8ஆம் நூற் றாண்டிற் காண்டினேவியத்தோடும், 11ஆம் நூற்றாண்டிற் பிரெஞ்சு மொழி யோடும் கலந்தாலும், 14ஆம் 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி (Renaissance) என்னும் இலத்தீன் கிரேக்கக் கல்வியே ஆங்கிலரின் இலக் கியச் செம்மொழிக் கல்வித் தொடக்கமாகும். அன்றும், philology என்னும் மொழிநூற்பெயர், ஒரு மொழியை அதனைப் பேசும் மக்களின் அகக்கரண அறிவியல் மதவியல் குமுகவியல் வளர்ச்சியை அறியும் வாயிலாகக் குறித்த தேயன்றி, அம் மொழியையே கற்கும் பொரு ளாகக் குறிக்கவில்லை. philology என்னும் கிரேக்கச்சொல் விழைநூல் என்று பொருள்படுவதாகும். விழைதல் மிக விரும்புதல். இலத்தீன் கிரேக்கமொழிகள் மிகவிரும்பிக் கற்கப்பெற்றதினால், அவற்றின் கல்வி அப் பெயர் பெற்றது.

18ஆம் நூற்றாண்டிலேயே இற்றை மொழியாரா-ச்சி தோன்றிற்று. அவ் வறிவியற்கு, Science of Language, Linguistics (Linguistic Science), Glottology முதலிய பல பெயர்கள் புதிதா-த் தோன்றினும், philology என்னும் பழம்பெயரே சென்ற நூற்றாண்டு வரை பெருவழக்கா- வழங் கிற்று. ஆயின் மொழியாரா-ச்சியையும் பன்மொழி யொப்பியலையுங் குறித்தற்கு ஒப்பியல் (Comparative) என்னும் அடை கொடுக்கப்பெற்றது.

இற்றை ஒப்பியன் மொழிநூல் உருவாவதற்கு இன்றியமையாத அடிப் படை வேலை செ-தவர்கள், உலகெங்கும் பரவித் தங்கிய ஐரோப்பிய விடையூழியரும் (Missionaries) குடியேற்ற நாடுகளின் அரசியலதிகாரி களுமே.

இந்தியாவிற்கு வந்த ஆங்கில அரசியல் அதிகாரிகளுள், வயவர் சாள்சு வில்கின்சு (Sir Charles Wilkins) என்பவர் சமற்கிருதங் கற்று, 1784 ஆம் ஆண்டில் பகவற்கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்; வயவர்

வில்லியம் சோன்சு (Sir William Jones) என்பவர், பன்மொழி கற்றுத் தேர்ந்து 1772-ல் பாரசீக இலக்கணமும் 1780-ல் ஏழ் அரபிச் செ-யுள் மொழிபெயர்ப்பும், 1794-ல் சாகுந்தலம், இதோபதேசம், சில வேதப்பகுதிகள், மனுதரும சாத்திரம் ஆகியவற்றின் மொழிபெயர்ப்பும், வெளியிட்டார். இவரே சமற்கிருதத்திற்கும் மேலையாரிய மொழிகட்கு முள்ள நெருங்கிய தொடர்பை முதன்முதல் உலகிற்கு வெளிப்படுத்தினார். இவர் காலத்திலேயே இற்றை ஒப்பியன் மொழி நூலும் தொடங்கிற்று.

இவர் கண்திறந்துவிட்டதன் பயனாக, 19ஆம் நூற்றாண்டிற் பொது வாகப் பல்வேறு மொழிகளின் இலக்கண நூல்களும் அகரமுதலிகளும் சிறப்பாக ஆரியமொழிகளின் ஒப்பியல் ஆரா-ச்சியும் தோன்றின. பல் வேறு மொழிநூலறிஞர், பல்வேறு மொழிகளையும் மொழிக் குடும்பங்களை யும் சிற்றளவாகவும் பேரளவாகவும் வெவ்வேறு வகையில் ஆரா-ந்து, மொழிநூல் அறிவியலை மேன்மேலும் வளர்த்து வந்தனர்.

கோல்புரூக்கு (Colebrooke) என்னும் ஆங்கிலர் 1805-ல் சமற் கிருத இலக்கணமும், காம்பெல் (Campbell) என்பவர் 1816-ல் தெலுங்கிலக்கணமும், இயற்றி வெளியிட்டனர்.

பிரெட் சுதார்ப்பு (Bredsdorff) என்பவர், 1821-ல் சொற்கள் திரிவதற்குக் கரணியங்கள் 7 என வகுத்துக்காட்டினார்.

வில்லியம் கேரி (William Carey) என்னும் ஆங்கில விடையூழியர், 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வடஇந்திய மொழிகளையெல்லாங் கற்று அவற்றில் திருமறையை (Bible) மொழிபெயர்த்ததுமன்றி, வடஇந்திய மொழிகளெல்லாம் ஆரியம் என்றும், தென்னிந்திய மொழிகளெல்லாம் அவற்றினின்றும் வேறுபட்ட திரவிடம் என்றும் பிரித்துக் காட்டினார்.

யாக்கோபு கிரிம் (Jacob Grimm) என்னும் செருமானிய மொழி நூலறிஞர் முதலாம் மெ-பெயர்வு (First Consonant - Shifting) என்றும் கிரிம் நெறியீடு (Grimm's law) என்றும் சொல்லப்பெறும் ஆரிய இனமொழி மெ-ம்மாற்ற மூவகை நெறிமுறைகளை 1932-ல் கண்டறிந்தார். அவையாவன:

(1) bh, dh, gh, ஆகிய ஆரிய மூச்சொலி முழங்கு நிறுத்தங்கள் (āpirated voiced stops) பின்னர் முறையே, b, d, g ஆகிய முழங்கு நிறுத்தங்களாகத் (voiced stops) திரிந்தன.

(2) ஆரிய முழங்கு நிறுத்தங்கள் பின்னர் முறையே, p,t, k ஆகிய முழங்கா உரசிகளாகத் (voiceless fricatives) திரிந்தன.

இந் நெறிமுறைகளின் குறைபாடு பின்னர் விளக்கப்பெறும். இவற்றின் ஒருசார் இலக்கணவழு இவர்க்குப் பின்வந்த வெர்னெர் (Verner) என்பவரால் திருத்தப்பெற்றது. யாக்கோபு கிரிம் தியூத்தானிய இலக்கணமும் இயற்றி வெளியிட்டார் (1819 -37).

பிரான்சு பாப்பு (Franz Bopp ) என்பவர், சமற்கிருதம், செந்து (Zend), கிரேக்கம், இலத்தீன், இலித்துவானியன், பழஞ் சிலாவோனியம், கோதியம், செருமானியம் ஆகிய மொழிகளின் ஒப்பியல் இலக்கணத்தை 6 மடலமாக வெளியிட்டார் (1833 - 52). இவரால் ஒப்பியன் மொழிநூல் வளர்ச்சியடைந்தது.

இராப்பு (J. M. Rapp ) என்பவர் கிரேக்கு, கோதியம், இலத்தீன் ஆகிய மொழிகளின் ஒலிமுறைகளையும், அவற்றின் வழிவந்த இடைக் கால இக்கால மொழிகளின் ஒலிமுறைத் திரிபுகளையும் ஆ-ந்து, முந் நிலைகளையுங் காட்டி 4 மடலங்கள், முறையே, 1836, 1839, 1840, 1841 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டார்.

பாட்டு (Pott) என்னும் செருமானியச் (1802 - 27), மொழி வளர்ச்சி நிலைகள் அசைநிலை (Isolating), கொளுவுநிலை (Agglutinating), பகுசொன்னிலை (Flexionnal), பஃறொகைநிலை (Incorporating, என நாலாக வகுத்தார்.

வில்சன் (H. H. Wilson) என்னும் ஆங்கிலர், 1813-ல் விட்டுணு புராணமும், 1841-ல் சமற்கிரும இலக்கணமும் வெளியிட்டார்.

ஆகத்து கிளேச்சர் (August Schleicher) என்பவர் (1821 - 68) முதனிலை ஆரியத்தின் (Proto -Aryan) மறுவமைப்பைச் (Reconstruction) செ-தார்; இந்தோ -ஆரிய மொழிகளின் ஒப்பியலிலக்கணம் வெளியிட்டார்.

மாக்கசு முல்லர் (Max Muller) என்னும் செருமானிய மொழிநூற் பேரறிஞர் (1823 -1900), பன்மொழிகளை, சிறப்பாக ஆரிய மொழிகளை, கற்றுத் தேர்ந்து, 1844-ல் இதோபதேச மொழிபெயர்ப்பையும், 1849முதல் 1874 வரை இருக்கு வேத 6 மடலங்களையும், 1859-ல் சமற்கிருத இலக்கிய வரலாற்றையும், 1861 முதல் 1863 வரை மொழிநூற் கட்டுரை களின் (Lectures on the Science of Language) இரு மடலங்களையும், 1888-ல் சொல்

வரலாறுகளையும் (Biographies of Words) வெளியிட்டார். பல்லாண்டுகளாகக் கீழைத் திருப்பனுவல்களையும் (Sacred Books of the East) பதிப்பித்தார். அவற்றின் வாயிலாகச் சமற்கிருதப் பற்றையும் ஊட்டி வந்தார்.

மேலை மொழிநூல் வல்லாருள் தலைவராகக் கொள்ளப்படுவர் இவரே. இவராலேயே ஒப்பியன் மொழிநூல் ஒருவாறு நிறைவடைந்து உலகெங்கும் பரவிற்று.

ஆட்டோ போத்திலிங்கு (Otto Bohtlingk) என்னும் செருமானியர் (1815 - 1904) 1839-ல் பாணினி யிலக்கணத்தையும், 1845-ல் சமற்கிருதச் சிறப்புப் பகுதிகளையும், அதன்பின் 1856 முதல் 1875 வரை தொகுத்த 7 மடலங் கொண்ட சமற்கிருத அகரமுதலியையும், வெளியிட்டார். இவ் வகரமுதலித் தொகுப்பில் உருடால்பு ராத்தும் (Rudolph Roth) உடனுழைத்தார்.

யோசியா துவைத்து விற்றினி (Josiah Dwight Whitney) என்னும் அமெரிக்கர், 1856-ல் அதர்வ வேத சங்கிதையையும், 1875-ல் ‘மொழி யிற் கருவியும் வடிவமும்’ என்னும் நூலையும், 1873-5-ல் ‘கீழைக்கலை மொழி நூலா-வு’ என்னும் நூலையும், 1876-ல் ‘மொழியின் வாழ்க்கையும் வளர்ச்சியும்’ என்னும் நூலையும், 1879-ல் சமற்கிருத இலக்கணத்தையும், 1881-ல் ‘மொழியிற் கலப்பு’ என்னும் நூலையும் வெளியிட்டார்; பேத்தி லிங்கின் அகரமுதலிக்கும் இடையிடைச் சொற்கள் உதவினார். இவர் சில சமயங்களில் மாக்கசு முல்லர் கொள்கையைக் கடிந்ததுண்டு.

1856-ல் கால்டுவேல் மேற்காணியார் (Bishop),தம் உலகப் புகழ் பெற்ற திரவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணத்தை வெளியிட்டார். அந் நூல் தமிழின் சிறப்பையும் தமிழன் பெருமையையும் உலகத்திற் கெடுத்துக் காட்டுவதிற் சாண் ஏறி முழஞ் சறுக்கினதாகும்.

கால்டுவெல் ஐயர் அயர்லாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்து, பண்டைச் செந்தமிழ் நாடாகிய பாண்டிநாட்டின் தென்பால் தங்கி, பதினெண் ணாண்டு அயராதுழைத்துத் தமிழைச் சிறப்பாக ஆ-ந்து கற்றபின் தம் ஒப்பியலிலக்கணத்தை எழுதினாரேனும், அக்காலத்துச் சூழ்நிலைகளும் சுற்றுச் சார்பும் அவர் தமிழின் உண்மையான இயல்பை அறியமுடியாவாறு அமைந்திருந்தன.

(1) இதுபோதுள்ள பண்டைத் தமிழ்நூலாகிய தொல்காப்பியமும் கடைக் கழக நூல்களும், அக்காலத் தலைமைத் தமிழ்ப்புலவர்க்குந் தெரியாது மறையுண்டு கிடந்தன.

(2) மறைமலையடிகள் போலுந் தனித்தமிழ்ப் புலவர் அக்காலத்தில் இல்லை.

(3) தமிழன் பிறந்தகம் குமரிநாடென்பது அக்காலத்து ஒருவர்க்குந் தெரியாது.

(4) இக்காலத்திற் போன்ற இனவிழிப்புணர்ச்சி அக்காலத் தமிழர்க்கில்லை.

(5) எல்லா வகையிலும் ஆரிய மேம்பாட்டைத் தமிழர் அனைவரும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டனர்.

இனி, ஆரிய வருகைக்கு முற்பட்ட தனித்தமிழ் இலக்கியம் அனைத்தும் அழியுண்டதும், இந்திய நாகரிகம் முழுவதையும் காட்டும் இலக்கியம் இன்று சமற்கிருதத்திலிருப்பதும், எல்லாத் துறையிலும் பிராமணர் முன்னேறி யிருப்பதும் கால்டுவெலார்க்குத் தமிழ நாகரிகத்தைப் பற்றி யிருந்த தாழ்வான கருத்தை வலியுறுத்திவிட்டன.

தமிழ் நாகரிகம் கொற்கையில் தோன்றி ஆரியர் வருமுன் நகர நாட்டு(City State) நிலையே அடைந்திருந்ததென்றும், தமிழர்க்கு ஆழ் கடற் செலவின்மையால் இலங்கைதவிர வேறொரு தீவுந் தெரியாதென்றும், தமிழ் நெடுங்கணக்கும் எண்வேற்றுமையமைப்பும் சமற்கிருதத்தைப் பின் பற்றியவையென்றும், உயர்கலைகளையெல்லாம் தமிழர் ஆரியத் திடத்தினின்று கற்றுக்கொண்டனரென்றும், பல அடிப்படைத் தென்சொற் களை வடசொற்களென்றும், கூறித் தம் அறிதல் வா-ப்புக் குறைவினால் தமிழரை மிகமிகத் தாழ்த்தி யெழுதிவிட்டனர்.

இரண்டாம் பதிப்பில் ஓரளவு தமிழ்ப் பெருமையை வெளியிட்டதற்கும், மலையாள மொழியறிஞரான குண்டர்ட்டு, தமிழறிஞரான போப்பு, கன்னட மொழியறிஞரான கிற்றெல் முதலியோரே பெரிதுங் கரணியம் என அறிதல் வேண்டும்.

பேரா. (K.A). நீலகண்ட சாத்திரியார் தம் ‘தமிழர் வரலாறும் கலை நாகரிகமும், என்னும் நூலில் , தமிழரைத் தாழ்த்தி யெழுதியதற்குக் கால்டுவெலார் மதிப்பீட்டையே சான்றாகக் காட்டியிருப்பதால், கால்டுவெலார் ஒப்பியல் இலக்கணத்தை இயற்கைக் கேலாதென்று தள்ளுவதே தக்கதாம்.

கோல் (Cole) என்பவர் 1867-ல் குடகுமொழியின் தொடக்க இலக் கணத்தை வெளியிட்டார்.

சாண் பீம்சு (John Beames) என்பவர், 1867-ல் ‘இந்திய மொழி நூற் சட்டகம்’ என்னும் நூலையும், இக்கால இந்திய ஆரிய மொழிகளின் ஒப்பியல் இலக்கண மும்மடலங்களை முறையே 1872, 1875, 1879 ஆகிய ஆண்டுகளிலும் வெளியிட்டார்.

குண்டர்ட்டு (Gundert) என்னும் செருமானிய ஐயர் 1868-ல் மலையாள - ஆங்கில அகரமுதலியை வெளியிட்டார்.

1872-ல் ஆர்டென் (Arden) ஐயரின் தமிழ்தெலுங் கிலக்கணங் களும், பிரிகேல் (Brigel) என்பவரின் துளுவிலக்கணமும் வெளிவந்தன.

1873-ல் போப்பு ஐயரின் ‘துடவமொழி யிலக்கணச் சட்டகம்’ வெளிவந்தது.

1884-ல் ஏர்ணத்து துரோசு (Ernest Droese) என்பவரின் மாலத் தோப் (Malto) புகுமுக விலக்கணமும், 1890-ல் வில்லியம் சன் என் பவரின் கோண்டிச் சொற்றொகுதியோடு கூடிய இலக்கணமும், 1894-ல் கிற்றெலின் (Kittel) கன்னட ஆங்கில அகரமுதலியும், 1899-ல் மானியர் வில்லியம்சின் சமற்கிருத ஆங்கில அகரமுதலியும் வெளிவந்தன.

இந் நூற்றாண்டில் ஆங்கிலத்தில் வெளிவந்த மொழிநூல்களுள் முதன் மையானவை, கிரையர்சன் (1903-28). எடுவர்டு சப்பீ, (Edward Sapir, 1921) ஆட்டோ செசுப்பெர்சென் (Jespersen, 1922), வெந்திரையசு, (Vendryes, 1925), புளூம்பீல்டு (Bloomfield, 1933), பிரொடரிக்கு பாடுமேர், (Frederick Bodmer, 1944), கிளீசன் (Gleason, 1955), இலாகோவாரி (Lahohvary, 1963), பார்பெர் (1964)என்பவர் எழுதியனவாகும்.

இவற்றுள் கிரையர்சன் தொகுத்த ‘இந்திய மொழிப் பரப்பளவை’ (Linguistic Survey of India)’ இந்தியாவைப் பொறுத்தமட்டில் மிகச் சிறப்புடையதாகும். அது 20 மடலங்கொண்டது; இந்திய மொழிகளை யெல்லாம் ஆ-ந்து 179 மொழிகளும் 544 நடைமொழிகளுமாகக் (Dialects) கணக்கிட்டு, ஒவ்வொன்றன் இயல்பையும் இலக்கிய விலக்கணங்களையும் குடும்பவுறவையும் எடுத்துக்காட்டுடன் விரிவாக விளக்குவது.

சப்பீர் மொழியின் அமைப்பையும் வளர்ச்சியையும் கலப்பையும் அயலாரால் தழுவப் பெருந்தன்மையையும், செசுப்பெர்சென் மொழிகளின்

தோற்ற வளர்ச்சி மாற்றங்களையும், வெந்திரையரசு எழுத்தொலி முறை களையும் சொல்லின் வடிவு பொருள் வளர்ச்சிகளையும் மொழிகளையும் வரிவடிவுத் தோற்றத்தையும், புளூம்பீல்டு உலகமொழிகளையும் ஒலிவகை களையும் சொற்றொடர் முறைகளையும் சொன்மாற்றங்களையும் சொற் கடன் கோடல் வகைகளையும் பாடுமேர் மேலைக் குறுங்கணக்கு (Alphabet) வரலாற்றையும் சொற்றொடர் நெறிமுறைகளையும் மொழிகளின் பாகுபாட்டையும் செயற்கையுலக மொழிகளையும் மேலையாரியச் சொற் றொகுதிகளையும் சொன்மூலங்களையும், மேரியோ பெ-மொழியின் வரலாறு அமைப்பு பயன்பாடு முதலியவற்றையும், கிளீசன் வண்ணனை மொழிநூலையும், இலாகோவாரி இந்தியாவிற்கும் நண்ணிலக் கடற்கரைக் கும் இடைப்பட்ட மொழிகளின் படிமுறைத் திரிபையும், பார்பெர் மொழி வரலாற்றையும், எழுத்துவரலாற்றையும் மொழிக்குடும்பங்களையும் ஆங்கில மொழிவரலாற்றையும் சிறப்பாக விளக்கிக் கூறியுள்ளனர்.

இந் நூற்றாண்டிலெழுந்த திரவிட மொழிகளின் இலக்கணங்களும் அகர முதலிகளும் ஆவன:

1903 -கிற்றெலின் கன்னட இலக்கணம்.

1909 -தெனிசு தீ எசு, பிரே எழுதிய பிராகுவீ மொழியின் அறிமுகமும், இலக்கணமும், -முதற்பாகம்.

1911 -குல்சே எழுதிய குவீமொழி யிலக்கணம்.

1913 -பிராண்மேயர் (Frohnmeyer) எழுதிய மலையாள இலக்கணம்.

1924 -கிரிகுனாடு எழுதிய ஒராவொன் மொழி அகரமுதலியும் இலக்கணமும்.

1928- பின்பீல்டு எழுதிய கூ-மொழி யிலக்கணம்.

1924 -36 சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி 7 மடலம்.

1944 -பரோவும் பட்டாச்சாரியாவும் சேர்ந்தெழுதிய 'பர்சிமொழி'

1955-எமனோ எழுதிய 'கோலாமி ஒரு திரவிடமொழி'

1956- பட்டாரிச்சாரியா எழுதிய 'கொண்டாமொழி' (இலக்கணமும் சொற் றொகுதியும்).

1957 - பட்டாச்சாரியா எழுதிய'ஒல்லாரி ஒரு திராவிடமொழி.'

1961- பரோவும் எமெனோவும் இணைந்து தொகுத்த திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

இங்ஙனமே ஏனை யிந்தியமொழிகட்கும் பிறநாட்டு மொழிகட்கும், இலக்கண நூல்களும் அகரமுதலிகளும் வெவ்வேறு ஆசிரியரால் இயற்றப்பட்டன.

ஒரு மொழிக்கே சிறப்பும் உலகப்பொதுவுமான எழுத்தொலி யிலக்கணங்களும் (Phonetic works) ஒன்றன்பின் ஒன்றா-த் தோன்றின.

ஆங்கிலத்திற்போன்றே செருமனிய பிரெஞ்சுமொழிகளிலும், மொழிநூல்களும் மொழியாரா-ச்சிக் கட்டுரைகளும் பன்மொழி யிலக்கணங் களும் அகரமுதலிகளும் ஏராளமாக எழுந்தன. ஆயின், மேலையர், பொது வாக, சமற்கிருதத்திற்கே அளவிறந்த முதன்மை கொடுத்து அதனையே சிறப்பாக ஆ-ந்து வந்தனர்.

எல்லா மொழியகரமுதலிகளுள்ளும் மிகமிகக்கேடானதும் உண்மைக்கு மாறானதும் வழுமலிந்ததும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியே. அது தமிழ்ப்பகைவரான பிராமணரால் திரு. வையாபுரிப் பிள்ளையின் துணைகொண்டு தமிழைக் கெடுத்தற்கே தொகுக்கப்பட்டது. அதன் எண்பெருங் குற்றங்களாவன:

(1) ஆயிரக்கணக்கான தென்சொல் இன்மை.

(2) ஆயிரக்கணக்கான வேண்டா அயற்சொல் உண்மை.

(3) சொற்பொருளெல்லாங் கூறப்படாமை.

(4) கூறப்பட்டுள்ள பல பொருள்களின் வழுவியன்மை.

(5) அடிப்படைத் தென்சொற்களுட் பெரும்பாலனவற்றிற்கு ஆரிய மூலங் குறிக்கப்பட்டுள்ளமை.

(6) வேறுபட்ட பல சொற்கள் ஒரே மூலத்தனவாகக் காட்டப்பட்டுள்ளமை.

(7) சொற்களின் ஒலிமுறை வரிபெயர்ப்பில் (Transliteration) உண்மைக்கு மாறாயுள்ளமை.

(8) இயற்சொல்லின்கீழ்த் திரிசொற்களும் பிறந்தையின் (Genus) கீழ் இனங்களும் (Species) காட்டப்பெறாது, எல்லாம் ஒரே அளவான எழுத்து வடிவில் அகரவரிசையா- அமைக்கப்பட்டுள்ளமை.

இவ் வகரமுதலியை அடிப்படையாகக் கொண்டதினாலேயே, பர். பரோவும் பர். எமெனோவும் தொகுத்த திரவிட ஒப்பியல் அகரமுதலி பல் வகையிலும் வழுப்பட்டுள்ளதென்க. அது ஒப்பியல் அகரமுதலியாகவே யிருப்பினும், சொற்பிறப்பியல் (Etymological) அகரமுதலியென்று பெயர் பெற்றிருப்பதே அதன் அடிப்படைத் தவற்றைக் காட்டும்.

ஒரு மொழியின் இலக்கியத்தை அயலார் கற்றுத் தேர்ச்சி பெறலாம். ஆயின், ஒரு மொழிப் பேச்சில் அங்ஙனம் தேர்ச்சிபெற முடியாது. ஒவ் வொரு மொழிக்கும் சிறப்பான சொன்மரபுகளும் வழக்காறுகளும் உள. அவற்றை அம் மொழி நாட்டார் அறிவிக்கவே அறியமுடியும். அவற்றை அந் நாட்டார்போல் இயற்கையாக ஆள ஓரிரு தலைமுறையேனும் அந் நாட்டில் வதிந்து அவரொடு இரண்டறக் கலந்து பழகியிருக்க வேண்டும். பிராமணர் இன்னும் தமிழரொடு நெருங்கிப் பழகாமையால் தமிழைச் செவ்வையா- அறியவில்லை. அதோடு தமிழை வெறுத்து வடசொற் களைப் புகுத்தித் தமிழ்ச்சொற்களை வழக்கு வீழ்த்தவுஞ் செ-கின்றனர்.

## 9. உலக மொழிக் குடும்பங்கள்

உலகமெங்கும், சிறப்பாக ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இந்தியாவிலும், பல்வேறு மொழியாரா-ச்சியாளரும் மொழிநூலாசிரியரும், தமித்தும் இணைந்தும் கூடியும், பல்வேறு மொழியிலக்கணங்களையும் அகரமுதலிகளையும் துணைக்கொண்டும் தாமாகப் பல மொழிகளைக் கற்றும், கடந்த முந்நூற்றாண்டுகளாகச் செ-துவந்த ஆரா-ச்சியின் பயனாக, பெரும்பாலும் உலகமொழிகளெல்லாம் சிறியவும் பெரியவுமான பல்வேறு மொழிக்குடும் பங்களாகப் பாகுபாடு செ-யப்பட்டுள்ளன. அவையாவன:

(1) ஆத்திரேலியாக் கண்டத்தின் பழங்குடி' மக்கள் பேசும் மொழிகளெல்லாம் சேர்ந்து ஆத்திரேலியம் என்னும் குடும்ப மாகும்.

(2) நியூகினியாவிலும் அதையடுத்த தீவுகளிலும் பேசப்படும் பாப்புவன் (Popuan) என்னும் குடும்பவுறவு இன்னும் அறியப் பெறவில்லை.

(3) நியூகினியா வொழிந்த மலையாத் தீவுக்கணத்தினின்று, மேற்கே மடகாசுக்கர்த் தீவுவரையும் பேசப்படும் மொழிகள் மலையோ - பாலினீயம் என்னும் பெருங்குடும்பமாகும்.

இது கீழையது, மேலையது (இந்தோனசியம்) என இருபாற்பட்டது. கீழையது மைக்கரோனீசியம், பாலினீசியம், மெலனீசியம் என்னும் முப் பிரிவு கொண்டது. மேலையது, கீழையிந்தியத் தீவுகளிற் (East Indies) பேசப்படுவது.

(4) தென்னிந்தியாவிலும் நடுவிந்தியாவிலும் வடஇந்தியாவின் கீழைக் கோடியிலும் மேலைக்கோடியிலும் பேசப்படும் மொழிகள், தென் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. இவை மேலை வழக்கில் திரவிடம் (Dravidian) எனப்படும். இற்றை யாரா-ச்சியால், ஆரியக்கலப்பை நீக்க முடியாத தெலுங்கு கன்னடம் முதலிய மொழிகளே திரவிடம் என்றும், அதை நீக்கமுடியும் தமிழ் அவற்றினின்று பிரிந்து தனித்து நிற்பதென்றும், வேறு படுத்தப்பட்டுள்ளன. தென்மொழிக் குடும்பத்தைச் தென்னிந்தியம் அல்லது தமிழியம் என்றும் கூறலாம்.

தென்னிந்தியக் குடும்பத்தை முதன்முதல் தெளிவாகப் பிரித்துக் காட்டி, அதன் மொழிகளைப் பதின்மூன்றாக் கணக்கிட்டவர் கால்டு வெலார். அக் கணக்கைப் பரோவும் எமெனோவும் விரிவுபடுத்தி இன்று பத் தொன்பதாகக் காட்டியுள்ளனர்.

(5) தென்கிழக்காசியாவிலும் நடுவிந்தியாவின் மலைகளிலும் அசாமி லும் கடாரம் எனப்படும் பர்மாவின் வடகோடி தென்கோடிகளிலும் நக்க வாரத் தீவுகளிலும் (Nicobar Islands) பேசப்படும் பல மொழிகள், ஆத் திரோ - ஆசியம் ( Austro -Asiatic) என்னும் குடும்பத்தைச் சேர்ந்தன வாகும். இக் குடும்பம் மான் -குமேர் (Mon - Khmer) என்றும் பெயர்பெறும்.

நடுவிந்தியாவிற் பேசப்படும் இக் குடும்ப முண்டா அல்லது கோலா ரிய மொழிகள் கெர்வாரீ, கூர்க்கூ, கறியா, சுலாங், சவரா' கடபா என ஆறென்றும், அவற்றுள் முதலது சந்தாலீ, முண்டாரீ, பூமிசு, பிரார், கோடா, ஓ (Ho), தூரீ, அசுரீ, அகரியா, கொர்வா எனப் பத்து நடைமொழிகளைக் கொண்டதென்றும் கிரையர்சன் கூறுவர்.

இவற்றுள் கடபா என்பது ஒரு திரவிடமொழி என்னுஞ் செ-தி வெளி யாகியுள்ளது.

முண்டா மொழிகளை ஒரு தனிச் சிறு குடும்பமாகப் பிரித்துக் காட்டி யவர் மாக்கசு முல்லராவர்.

(6) சீன -திபேத்தம் (Sino -Tibetan) என்னுங் குடும்பம் சீனதேசத்திலும் திபேத்து நாட்டிலும் பேசப்படும் மொழிகளைக் கொண்டதாகும். இது திபேத்தோ -பர்மியம், சீனம் என்னும் இரு கிளைகளை யுடையது.

(7) தென்மேற்குச் சீனத்திலும் ஐனான் தீவிலும் தா-நாட்டிலும் இந்தோ - சீனத்திலும் பர்மாவின் ஒரு பகுதியிலும் பேசப்படும். மொழித் தொகுதி கதா- (Kadai) என்னும் குடும்பமாகும். இது மலையோ -பாலினீ சியத்திற்கு இனமான தாகவும் இருக்கலாம்.

(8) வடநடு ஐரோப்பாவிலும் கீழை ஐரோப்பாவிலும் சின்ன ஆசியாவிலும் வடஆசியாவிலும் பேசப்படும் (ஆரியமும் சேமியமும் அல் லாத) பல மொழிகள், ஊரல் - ஆலத்தேயம் (Ural - Altaic) என்னும் குடும்பத்தைச் சேர்ந்தனவாகும். இக் குடும்பத்தைத் துரேனியம் அல்லது சித்தியம் என்பர் கால்டுவெலார்.

இக் குடும்பம் ஊரலியம் (Uralian), ஆலத்தேயம் என்னும் இரு கிளைகளைக் கொண்டது.

சாமோயெதம், அங்கேரியம், பின்னியம், இலாப்பியம், எசுத்தோனியம் என்பன ஊரலியத்தையும்; துருக்கியம், மங்கோலியம், மஞ்சு என்பன ஆலத்தேயத்தையும் சேர்ந்தனவாகும்.

(9) காக்கேசிய மலைத்தொடரையடுத்து வழங்கும் பல மொழிகள், வடகாக்கேசியம் என்றும் தென்காக்கேசியம் என்றும் இரு குடும்பங்களாகக் பகுக்கப்பட்டுள்ளன.

(10) ஐரோப்பாவின் பெரும்பகுதியிலும், ஐரோப்பியர் குடியேறி யுள்ள வடதென் அமெரிக்காவிலும் ஆத்திரேலியாவிலும் ஆப்பிரிக்கப் பகுதிகளிலும், பேசப்படும் மொழிகள் இந்தோ -ஐரோப்பியம் என்றும் இந்தோ - செருமானியம் என்றும் ஆரியம் என்றும் சொல்லப்பெறும் மாபெருங் குடும்பத்தைச் சேர்ந்தனவாகும்.

இக் குடும்பமே எல்லா மொழிக் குடும்பத்துள்ளும் பெரிதாம். இது மேலையது, நடுவணது, கீழையது என முறையே ஒன்றினொன்று சிறிய முக்கவைகளை யுடையது.

செலத்தியம் (Celtic), இத்தாலியம் (இலத்தீனம்), தியூத்தானியம் (செருமானியம்), தொக்காரியம், எல்லெனியம் (கிரேக்கம்), இலெத்தியம் என்பன மேலையாரியத்தையும்; பாலத்தியம் (Baltic), சிலாவோனியம்,

அல்பானியம், அர்மீனியம், இத்தைத்தம் (Hittite) என்பன நடுவணாரி யத்தையும்; ஈரானியம் (பாரசீகம்), இந்திய ஆரியம் என்பன கீழையாரித் தையும் சேர்ந்த கிளைகளாகும்.

வேதமொழியும் அதற்குப் பிற்பட்ட சமற்கிருதமும் இந்திய ஆரியமாகும்.

வடஇந்தியாவிலும் நடுவிந்தியாவிலும் ஒருகாலத்தில் திரவிட மொழி களாயிருந்தவை, பின்னர் ஆரியகலப்பால் ஆரியமொழிகளாக மாறியுள்ளன.

தமிழே திரவிடமாகவும் திரவிடமே ஆரியமாகவும் மாறியிருப் பினும், தமிழ் இந்திய ஆரியரால் மறைக்கப்பட்டுள்ளமையாலும் தமிழ் தோன்றிய குமரிநாடு மூழ்கிப்போனமையாலும், மேலையாரியர் உண்மை நிலையறியாது ஆரியத்தை ஒரு தனிமொழியின் வளர்ச்சியாகக் கருதி அதற்கு மூலமென ஒன்றைப் படைத்து, அதற்கு முதல் இந்தோ - ஐரோப் பியம் (Proto - Indo - European) எனப் பெயரிட்டுள்ளனர்.

(11) மேலையாசியாவிலும் வடஆப்பிரிக்காவிலும் பண்டு பேசப் பட்ட அக்காடியம் (அசீரியம், பாபிலோனியம்) அரமேயம், சிரியம், மோவாபியம், பினீசியம், எபிரேயம் என்னும் மொழிகளும், இன்று பேசப் படும் அரபியும், வடகிழக்காப்பிரிக்காவிற் பேசப்படும் எத்தியோப்பிய (அமரிக்கு) மொழியும், சேமியம் (Semitic) என்னும் குடும்பத்தைச் சேர்ந் தனவாகும்.

(12) பண்டை எகிபதியமும் இன்று எத்தியோப்பியாவில் வழங்கும் கோபதியமும் (Coptic), சோமாலி, பெர்பெர் சது (Chad) முதலிய மொழி களும், ஆமியம் (Hamitic) என்னும் மொழிக் குடும்பமாகும்.

பண்டை எகிபதிய வழிவந்த கோபதியம் இன்று எத்தியோப்பிய வழி பாட்டு மொழியாக மட்டும் வழங்குகின்றது.

சேமியத்தையும் ஆமியத்தையும் இணைத்து ஆமிய - சேமியம் (Hamito - Semitic) என ஒரு குடும்பமாகக் கூறுவதுமுண்டு.

அரமேயம் இன்று தமசுக்கு (Damascus) நகர்ப்பக்கத்தில் முச்சிறு குமுகங்களாற் பேசப்படுபவதாகப் பாடுமேர் கூறுவர்.

(13) சூடான் நாட்டில் மிகச் சிறிதே அறியப்பட்டுள்ள பல சிறு மொழிக்குடும்பங்கள் உள்ளன.

(14) நீலாற்றின் மேற்பள்ளத்தாக்கை நடுவாகக் கொண்டு தெற்கே தங் கனியிக்கா வரையும் மேற்கே சதுவேரி வரையும் பரந்துள்ள, நிலப்பகுதியிற் பேசப்படும் மொழிக் குடும்பம் சரி - நீல் (Chari - Nile) என்பதாகும்.

(15) சதுவேரியின் வடக்கும் கிழக்குமாகவுள்ள நிலப்பகுதியிற் பேசப் படும் மொழிக்குடும்பம் நடுச்சகாரம் (Central Saharan) எனப்படும்.

(16) மேலையாப்பிரிக்காவின் பெரும்பகுதியிலும், பொதுவாக நடுக் கோட்டின் தென்பா லாப்பிரிக்காவிலும் வழங்கும் நைசர்' - காங்கோ (Niger - Congo) என்னும் மொழிக்குடும்பம் ஆப்பிரிக்காவில் முதற்றர முதன்மை வா-ந்ததாகும். இதிற் பல கிளைகள் உள. அவற்றுள் நடுக் கிளையின் ஒரு பிரிவான பந்து (Bantu) மொழித்தொகுதி, மற்றெல்லா நைசர் - காங்கோ மொழிகளும் வழங்கும் மொத்த நிலப்பரப்பினும் பரந்த நிலப்பகுதியில் வழங்குவதும், வேறெத் தொகுதியினும் மிகுந்த மொழி களையும் நடைமொழிகளையுங் கொண்டதுமாகும்.

(17) தென்னாப்பிரிக்காவிற் பேசப்படும் புசுமன் (Bushman) மொழி களும் ஆட்டன்றாட்டு (Hottentot) மொழியும் வேறிரண்டும் சேர்ந்து கா-சன் (Khoisan) மொழிகள் எனப்படும்.

(18) தென்னமெரிக்காவின் பழங்குடி மக்கள் மொழிகள் ஐரோப்பிய மொழிகளாற் பெரும்பாலும் வழக்கு வீழ்த்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வற்றுட் சிறந்த நான்குள் ஒன்று பிரசீல் நாட்டுப் பொதுக் கலவை மொழி யாகும். இன்றுள்ளவை குடும்பப் பாகுபாட்டிற்கும் இடந்தராதனவாகும்.

இடையமெரிக்க மொழிகளுள்ளும் பல வழக்கு வீழ்த்தப்பட்டுச் சிலவே எஞ்சியுள்ளன. அவற்றுள்ளும் ஒருசில வழக்கு வீழ்ந்து வருகின்றன.

## வட அமெரிக்க மொழிக்குடும்பங்கள்

ஐரோப்பிய மொழிகளால் வழக்கு வீழ்த்தப்பட்டனவும் படாதனவு மான வடஅமெரிக்க மொழிகளைப்பற்றிப் பண்டையாசிரியரும் இற்றையா சிரியரும் வரைந்தும் வண்ணித்து முள்ளவற்றைத் துணைக்கொண்டு, கிளீசன் என்னும் அமெரிக்க மொழிநூலாசிரியர், தம் வண்ணனை மொழி நூலின் புகு முக விலக்கணத்திற் பின்வருமாறு மொழிக்குடும்பப் பாகுபாடு செ-துள்ளார்.

### *(1) அல்காங்குவியன் மொழிகள்* (Algonquian languages)

இவை கீழைக் கரையிற் கேரோலினாவிலிருந்து வடக்கே லேபிர டார் வரை பேசப்பட்டன.

### *(2) நாச்செசு –மசுக்கோசியக் குடும்பம்* (Natchez - Muskogeam*)*

இது தென்கிழக்கு ஒன்றிய நாடுகளிற் பேசப்பட்டது. இது அமெரிக்க மொழிக்குடும்பங்கள் எல்லாவற்றுள்ளும் பெரியது.

### *(3) இரேக்குவாயக் குடும்பம்* ( Iroquoian)

இதன் முதன்மைப் பகுதி திரு இலாரென்சுப் பள்ளத்தாக்கு நடுவிலும் கீழைப் பென்சில்வேனியாவிலும் பேசப்பட்டது.

### *(4) சியௌவக் குடும்பம்* (Siouan)

இது வடக்குப் பெருவெளி நிலங்களிற் (Great Plains) பேசப்பட்டது.

### *(5) கதோவக் குடும்பம்* (Caddoan)

இது சியௌவக் குடும்ப நிலப்பரப்பிற்குத் தெற்கிற் பேசப்பட்டது.

### *(6) துனிக்கக் குடும்பம்* (Tunican)

இது மிசிசிப்பிப் பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதியிற் பேசப்பட்டது.

### *(7) யுச்சிக் குடும்பம்* (Yuchi)

இது தெனெசீயிற் பேசப்பட்ட ஒற்றைமொழிக் குடும்பம்.

### *(8) எசுக்கிமோ –அலியத்து மொழிகள்* (Eskimo -Aleut Is)

இவை வடமுனைக் கரைகளிலும் அவற்றையடுத்த கரைகளிலும், இலேபர்டாரிலிருந்தும் கிரீன்லாந்திலிருந்தும் அலாசுக்காவரை பேசப்படு கின்றன.

### *(9) சலிசம் (*Salishan*), வக்கசம் (*Wakashan*) சிமக்குவம் என்னும் முக்குடும்பங்கள்*

இவை வடமேற்கில் கொலம்பியா ஆற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து அலா சுக்காவரை பேசப்படும் மொழிகளுட் பெரும்பாலனவற்றைக் கொண்டன.

ஏனையவற்றுள் நான்கு ஒற்றைமொழிக் குடும்பங்களும் உள்ளன. அவை அலாசுக்காவிற் பேசப்படும் ஐதாவும் (Haida) திலிங்கித்தும் (Tlingit),

அவற்றையடுத்துத் தெற்கிற் பேசப்படும் சிமிசியமும் (Tsim shian) கிழக்கிற் பேசப்படும் குத்தெனையும் (Kutenai) ஆகும்.

### *(10) இரித்துவான்* (Ritwan) *உள்ளிட்ட 25 குடும்பங்கள்*

இவை ஒரிகன், கலிபோர்னியா ஆகிய நாடுகளின் பெரும்பகுதியிற் பேசப்படுகின்றன; வட அமெரிக்க மொழிக்குடும்பங்களுள் ஏறத்தாழ மூன்றிலொரு பகுதியாயுள்ளன.

இவற்றுள் இரித்துவான் ஒழிந்த ஏனையவெல்லாம், பெனுட்டியும் (Penutian), ஒக்கம் (Hokan) என்னும் இரு கூட்டுக் குடும்பங்களாக அமைகின்றன.

### *(11) மாயக் குடும்பம்* (Mayan)

இது மெகசிக்கோ நிலவிணைப்பினின்று ஒண்டூராசு (Honduras) வரை முற்றடக்கமாகப் பேசப்படும் மொழித்தொகுதியாகும். இதுவே இடை யமெரிக்காவில் மிகத் தெளிவாக வரையறுக்கப்பெற்றதும் மிக முதன்மை யானதுமாகும்.

### *(12) ஆத்தொமாங்குவேயக்* (Otomanguean) *கூட்டுத்தொகுதி*

இது மாயக்குடும்பத்திற்கு மேற்கிலும் வடக்கிலும் வழங்கும் பன்மொழித் தொகுதிக் கூட்டாகும்.

### *(13) உத்தோ –அசுத்தெக்கக்* (Uto -Aztecan) *குடும்பம்*

இது பெருநிலத் தாழியிலும் (Great Basin) கொலரேடோப் பள்ளத் தாக்கிலும் பேசப்படுவதாகும்.

### *(14) அத்தபாசுக்கக் குடும்பம்* (Athabaskan)

இதன் பேருடற்பகுதி கானடாவின் வடமேற்கிலும் அலாசுக்காவிலும் உள்ளது. இதைச் சேர்ந்த மொழிகள் உத்தோ -அசுத்தெக்கக் குடும்பத் தின் தலைமையிடத்தை ஊடறுத்துத் தெற்கே மெகசிக்கோவரையிலும் பரவி வந்துள்ளன.

### *(15) தனோவம்* (Tanoan)*, கெரெசம்* (Keresan) *சுனி* (Zuni) *என்னும் முக்குடும்பங்கள்*

இவை மெகசிகோவிலுள்ள புவேபிளா (Pueplo) மக்களாற் பேசப்படு வன. இவற்றைச் சேர்ந்த பல மொழிகள் ஒரூர் ஒரு மொழிகளாக வேயுள்ளன.

இவை அசுத்தெக்கக் குடும்பத்திற்கு இனமானவை.

வட அமெரிக்க மொழிகளுட் சில இன்னுங் கற்கப்பெறவில்லை; சில அரைகுறையாகக் கற்கப்பெற்றுள்ளன; முற்றுங் கற்கப்பெற்றவைபற்றியும் கருத்துவேறுபாடுள. ஆதலால், வடஅமெரிக்க மொழிக் குடும்பப் பாகு பாடு சிறிதும் பெரிதும் மாற்றமடையலாம்.

இங்ஙனம் மேலை மொழியாரா-ச்சியாளர் ஒப்பியலைத் துணைக் கொண்டு உலக மொழிகளைப் பல்வேறு குடும்பங்களாகப் பாகுபடுத்தி னரேயன்றி, அவற்றின் முன்மை பின்மைகளையும் உலக முதன்மொழி யையும் அது தோன்றிய வகைகையும் இன்னும் அறிந்திலர்.

## இனமற்ற மொழிகள்

சுமேரியாவில் வழங்கிய சுமேரிய மொழியும், இத்தாலியாவில் வழங் கிய எத்திரசுக்க (Etruscan) மொழியும், பிரனீசு மலைநாட்டில் வழங்கும் பாசுக்க (Basque) மொழியும், கொரியாவில் வழங்கும் கொரிய மொழியும், சப்பானில் வழங்கும் சப்பானிய மொழியும் வேறு சிலவும் இனமற்றன வாகச் சொல்லப்படும் மொழிகளாகும்.

உலக மொழிகள் மொத்தம் 2796 எனக் கணக்கிடப் பெற்றுள்ளன. ஏறத்தாழ மூவாயிரம் எனக் கொள்ளினும் குற்றமாகாது.

# 10. மொழித்தோற்றக் கொள்கைகள்

அறிவியற்பட்ட மொழியாரா-ச்சி தோன்றுமுன், மொழியின் அல்லது மொழிகளின் தோற்றத்தைப்பற்றி அறிஞரிடைப் பல்வேறு தவறான கருத்துகள் இருந்துவந்தன. அவையாவன:

### *(1)* தெ—வக் கொள்கை (Divine Theory)

இது இறைவனே மொழிகளைப் படைத்தான் என்பது. இதுவே முதன் முதல் எல்லா நாடுகளிலும் கொள்ளப்பெற்றுப் பின்பு தள்ளப்பட்டது.

இதை மறுக்கும் ஏதுக்கள்:

1. மொழியில்லாமலும் சில விலங்காண்டி மக்கள் உள்ளனர்.

2. சில மொழிகள் சிறியனவாகவும் அநாகரிகமாகவும் உள்ளன.

3. எவரும் கற்காமல் இயல்பாகத் தம் தா-மொழியைப் பேச இயலாது.

4. மக்கள் முயற்சியால் சிறுமொழிகளும் பெருமொழிகளாக வளர்ந்துள்ளன.

5. திரிபினாலும் கலப்பினாலும் பல புதுமொழிகள் தோன்றியுள்ளன.

6. மக்களெல்லாரும் என்றும் ஒரே மொழியைப் பேசுமாறு இறைவன் செ-திருக்கலாம்.

7. இறைவன் படைத்திருந்தால் மொழிகள் இன்றிருப்பதினும் மிகச் சிறப்பாகவும் குற்றங்குறையற்றும் இருந்திருக்கும்.

### *(2) ஒப்பந்தக் கொள்கை* (Contract Theory)

இது மக்கள் கூடி இன்ன ஒலி இன்ன பொருளுணர்த்துக என்று ஒப்பந்தஞ் செ-துகொண்டது மொழி என்பது. இது உரூசோ கொள்கை

இது வெண்ணெ- தடவிக் கொக்குப் பிடிக்குங் கதைபோல் தன்மறுப்புக் கொள்கையாதலால் ஆ-விற்குரியதன்றாம்.

### *(3) தூண்டுணர்ச்சிக் கொள்கை* (Instinct Theory)

இது, இயற்கையாக மாந்தனிடையெழுந்த தூண்டுணர்ச்சி யொலி களால் மொழிதோன்றிற் றென்பது. இது காண்டிலக்கு கொள்கை.

இதுவும் இறைவன் படைப்புக் கொள்கைபோல் ஏரணமுறைக்கு ஒவ்வாததே.

### *(4) குறிப்பொலிக் கொள்கை* (Pooh- pooh Theory)

இது மாந்தனின் இன்ப துன்பக் குறிப்பொலிகளால் மொழி தோன்றிற் றென்பது.

குறிப்பொலிகள், ஒருசில கருத்துகளையேயன்றி எல்லாக் கருத்துகளை யும் உணர்த்தும் சொற்றொகுதியைத் தோற்றுவிக்கும் ஆற்றலற்றவையாகும்.

### *(5) ஒப்பொலிக் கொள்கை* (Bow - wow Theory)

இது விலங்கு பறவைகளாலும் பல்வேறு நிகழ்ச்சிகளாலும் எழும் ஒலிகளைப் பின்பற்றிய சொற்களைக் கொண்டு மொழி தோன்றிற் றென்பது.

ஒப்பொலிகளும் எல்லாக் கருத்துகளையும் உணர்த்தும் சொற்களைப் பிறப்பிக்கும் ஆற்றலற்றவையே.

### (6) மணியொலிக் கொள்கை ( Ding - dong Theory)

இது, மணியடித்தவுடன் ஒலியெழுவதுபோல் கருத்துத் தோன்றிய வுடன் சொல் வெளிப்படும் என்பது. இது மாக்கசு முல்லர் கொண்டு பின்பு விட்டுவிட்டது. சொல்லிற்கும் பொருளிற்கும் இயல்பான தொடர்புண்டு என்னும் வழூஉக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது இது.

### (7) அயாவுயிர்ப்புக் கொள்கை (Yo-he-ho Theory)

இது, மக்கள் கூடி உடலை வருத்தி ஒரு வேலையைச் செ-யும் போது மூச்சடக்கி வெளியிடும் ஒலிகளால் மொழி தோன்றிற்றென்பது. இது நா-ரே கொள்கை.

### (8) சைகைக் கொள்கை (Gesture Theory)

இது, கருத்தறிவிக்கும் இரு வாயில்களுள் சைகை முந்தியது என் றும், ஒலிவடிவான மொழி அதன் வழிப்பட்டதென்றும், கூறுவது.

சைகையில்லாமல் ஒலியும் ஒலியில்லாமற் சைகையும் இருதிணை யுயிர் களிடத்தும் தோன்றுவதால், இவ் விரண்டிற்கும் ஒன்றுபட்ட உறவு இல்லை யென்பது தெளிவு.

ஒலியொடு கூடிய வா-ச் செ-கையால் மொழி தோன்றிற்று என்பது (Mouth gesture theory) சைகைக் கொள்கையின் மற்றொரு வகை. இதைக் கொண்டவர் ரிச்சார்டு பேகெற்று.

### (9) தொடர்புக் கொள்கை (Contact Theory)

இது, முதலில் பிறரொடு தொடர்புகொள்ளக் குரலிடுவதும், பின்பு பொது வாகக் கரைவதும். அதன்பின் ஒருவரைச் சிறப்பாக விளிப்பதும், அதன்பின் ஒன்றைச் செ-ய ஏவுவதுமாக மொழி தோன்றிற்று என்பது. இது ரெவெசு (Revesz) கொள்கை.

இது, பிறரொடு தொடர்பு கொள்வதில் நேரும் உளநிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் கூறுகின்றதேயன்றி, மொழி தோன்றிய வகையை விளக்கு கின்றிலது.

### (10) பாட்டொலிக் கொள்கை (Musical Theory)

இது, முந்தியல் மாந்தர் வினைமுடிவில் தம் கருத்தைப் பாட்டொலி யாக அல்லது இன்னிசையொலித் தொடராக வெளிப்படுத்தினர் என்றும்,

அவற்றினின்று அலகுடைக்கும் நெடுஞ்சொற்கள் தோன்றினவென்றும், அவை உயர்ந்த இசையிலும் அலகிலும் ஒலித்தனவென்றும், அவற்றினின்றே பிற்காலச் சொற்கள் தோன்றினவென்றும் கூறுவது.

இது செசுப்பெர்சென் கொள்கை.

வா-க்கு வந்தபடி உணறும் இசையொலிகளினின்று, ஒழுங்கான பெயர் வினையிடைச் சொற்களும் அவற்றின் பல்வேறு வடிவுகளும் தோன்றினவென்பது, முட்செடிகளினின்று முக்கனிகளும் தோன்றின என்பதையே ஒக்கும்.

இனி, உணர்வொலிக் கொள்கை (Emotion Theory) என்பதும் ஒன்றுண்டு.

இங்ஙனம் 18ஆம் நூற்றாண்டுமுதல் 20ஆம் நூற்றாண்டுவரை மேலை மொழிநூலார் மொழித் தோற்றத்தை ஆ-ந்துவந்ததும், இன்னும் உண்மைகாண இயலாதவராயிருக்கின்றனர். இதற்கு முந்தியல் இயன் மொழியாகிய தமிழை அடிப்படையாகக் கொள்ளாது பிந்தியல் திரிமொழியாகிய சமற்கிருதத்தை அல்லது ஆரியத்தை அடிப்படையாகக் கொண்டதே கரணியம்.

முழைத்தல்மொழி, (Inarticulate Speech), இழைத்தல்மொழி (Articulate Speech) என மொழி இருவகைப்படும் என்பதையும்; இவற்றுள் முன்னது உணர்ச்சியொலிகள், விளியொலிகள் முதலிய எழுவகையொலிகளாலும், பின்னது சுட்டொலி வளர்ச்சியாலும், ஆயினவென்பதையும், என் ‘தமிழ் வரலாறு’ என்னும் நூலிற் கண்டு தெளிக.

## ௨

# வண்ணனை மொழிநூல்

## 1. மொழிநூற் குலைவு

மொழிநூலானது வரலாற்றியல், வண்ணனையியல், ஒப்புநோக்கியல் என்னும் மூவியல்களையும் ஒருங்கேயுடையதேனும், மேலை மொழி நூலார் இயன்மொழியாகிய தமிழை அடிப்படையாய்க் கொள்ளாது திரி பில் திரிபாகிய ஆரியத்தை அடிப்படையாக வைத்து ஆ-ந்ததினால், மூல மொழியையும் அது தோன்றிய வகையையுங் காணாது குன்று முட்டிய குரீ இ போல் இடர்ப்பட்டு, வரலாற்றியலை அடியோடு விலக்கிவிட்டு வண் ணனையியலையும் ஒப்பியலையுமே கையாண்டுவருகின்றனர்.

ஒரு குடும்பத்திலுள்ள மக்களுள் ஒவ்வொருவரையும்பற்றி, இவர் இன்ன பாலினர்; இன்ன நிறத்தர்; இன்ன வளர்த்தியர்; இன்ன தோற்றத்தர்; இன்ன இயல்பினர்; இன்ன திறமையர் என்று கூறுவது போன்றது வண்ணனை மொழியியல் (Descriptive Linguistics)

ஒரு குடும்பத்தார் எல்லாரையும் ஒப்புநோக்கி, இக் குடும்பத்தில் இத் தனையர் ஆடவர்; இத்தனையர் பெண்டிர்; இத்தனையர் சிவப்பர்; இத்த னையர் கருப்பர்; இத்தனையர் நெடியர்; இத்தனையர் குறியர்; இத்தனையர் ஒத்தவர்; இத்தனையர் வேறுபட்டவர் என்றுரைப்பது போன்றது ஒப்பியன் மொழிநூல் (Comparative Linguistics).

ஒரு குடும்பத்தாருள், இன்னார் தந்தையார்; இன்னார் தாயார்; இன்னார் புதல்வர்; இன்னார் புதல்வியர்; இன்னார் தமையனார்; இன்னார் தம்பிமார்; இன்னார் தமக்கையார்; இன்னார் தங்கைமார் என்றிங்கனங் கூறுவது போன்றது வரலாற்று மொழிநூல் (Historical Linguistics)

வரலாற்று மொழிநூல் மொழிகளின் தோற்ற வளர்ச்சிகளைக் கூறுவ தால் ஏனை யீரியல்களினுஞ் சிறந்ததாம். ஒப்பியன் மொழிநூல் வரலாற்றை அறியத் துணை செ-வதால், அதற்கு அடுத்தபடியாகச் சிறந்ததாம். வண்ணனைமொழிநூல் பிறமொழித் தொடர்பு நோக்காது ஒரு மொழியை வண்ணிப்பதுமட்டும் செ-வதால், உண்மையில் இலக்கணத்தின்பாற் படுவதே. இங்ஙனம் இம் மூன்றியல்பும் முறையே தலையிடை கடையாம்.

மேலையர் மூலமொழியையும் மொழி தோன்றிய வகையையும் அறி யாமையால், அவர் வரலாற்று மொழிநூலென்று கொள்வது, இலக்கியத் துணைகொண்டு ஒரு மொழியின் அல்லது மொழிக் குடும்பத்தின் பல்வேறு நிலைகளைத் தொடர்ச்சியாகக் காலமுறைப்படி கூறுவதேயன்றி வேறன்று. இது ஒரு மொழியின் முழுச் சொற்றொகுதியை மட்டுமன்றித் தனிச்சொற் களையுந் தழுவும்.

சென்ற நூற்றாண்டிறுதிவரை உலக முதன்மொழி எதுவென்று கண்டு பிடிக்கப்படாவிடினும், என்றேனும் ஒருநாள் அது கண்டுபிடிக்கப்படும் என்னும் நம்பிக்கையோ நம்பாசையோ மேனாடுகளில் இருந்துவந்தது. இந்நூற் றாண்டிலோ அது முற்றுங் கைவிடப்பட்டுவிட்டது. அதன் விளைவே வண்ணனை மொழிநூல். இதைச் சிறப்பாக வளர்த்து வருபவர் அமெரிக்கரே. அவர் தமிழைச் செங்கொள்கைத் தமிழ்ப் புலவர் வாயிலாகக் கற்கும் வரை, இவ் வழுவியல் மொழிநூல் மேனாடுகளில் தொடரத்தான் செ-யும். ஆயினும் தமிழர் ஆரிய அடிமைத்தனத்தாற் பிறந்த தம் தாழ்வுணர்ச்சி நீங்கிப் பகுத்தறிவுக் கண்கொண்டு பார்ப்பாராயின், தமிழின் முன்மையையும் பிற மொழிகளின் வழிநிலைத் தன்மையையும் காணத் தவறார் என்பது திண்ணம்.

## 2. வண்ணனை மொழிநூல் வழுக்கள்

### *1. அடிப்படைத் தவறுகள்*

(1) தமிழர் கிரேக்க நாட்டினின்று அல்லது நண்ணிலக் கடற்கரையி னின்று வந்தேறிகள் ஆவர் என்பது.

(2) நீகரோவர் ஆத்திரேலியர், முந்து நண்ணிலக் கடற்கரையர், நண் ணிலக் கடற்கரையர், அர்மீனியர், காண்டிநேவியர் ஆகிய அறுவகைக் கலவையினத்தார் தமிழர் என்பது.

(3) வேதமொழியும் சமற்கிருதமும் ஒன்றென்பது.

(4) சமற்கிருதம் பண்டை உலகவழக்கு மொழி என்பது.

வேத மொழியே வழக்கற்றும் பிராகிருதங் கலந்தும் போ-விட்டது. அதன்பின் வேதமொழியோடு தமிழைக் கலந்து ஆக்கிய சமற்கிருதம். இலக்கிய நடைமொழியே யன்றி உலக வழக்குமொழியன்று. அதன் நிலைமை படிமையும் பாவையும் போன்றதென அறிக. அது பிறந்ததுமில்லை; இறந்தது மில்லை.

(5) சமற்கிருதம் ஆரியமூலம் என்பது

சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய இலக்கியச் செம்மொழி களைச் சிறப்பாகச் சமற்கிருதத்தை, ஆரிய மொழிகட்கு மூலமாகக் கொண்டே, கிரிம் நெறியீடு என்னும் ஆரிய இனமொழி மெ-ம்மாற்ற வா-பாடு வகுக் கப்பட்டுள்ளது. இது கடைமகனைத் தலைகனாக வைத்து உடன்பிறந்தார் வரிசையைத் தலைகீழாக அமைப்பது போன்றது.

(எ-டு.)ஆரிய மூச்சொலி முழங்கு நிறுத்தங்கள் முழங்கு நிறுத்தங்கள ாகத் திரிந்தன என்பது.

| சமற்கிருதம் | கிரேக்கம் | இலத்தீன் | கோதியம் | செருமானியம் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|---|
| bhar | phero | fero | baira | biru | bear |
| bhu | phuo | fu-i | ----- | bi-n | be |
| d̄vara (= d̄hvara) | thura | fores | daur | tor | door |

இங்குக் காட்டப்பட்டுள்ள முச்சொற்கட்கும் மூலம், முறையே பொறு, பூ, துள்-துளை என்னும் தமிழ்ச்சொற்களாகும். பொறுத்தல்= சுமத்தல். “சிவிகை பொறுத்தானோ டூர்ந்தானிடை” (குறள். 37) பூத்தல்=தோன்றுதல், இருத்தல். “பூத்தலிற் பூவாமை நன்று”. (நீதிநெறி, 6). துளை = வாசல்.

மாக்கசு முல்லர் bear, burden, bier, barrow, birth, bairn, barley, barn என்று ஆங்கிலத்திலும்; ber என்று செலத்தியத்திலும் சிலா வோனியத்திலும்; bar என்று செந்திலும்; உள்ள சொற்களெல்லாம் bar என்னும் வேரினின்று பிறந்த பொறுத்தற் கருத்துச் சொற்களென்று, மொழிநூல் பற்றிய முச் சொற்பொழிவுகள் (Three Lectures on the Science of Language) என்னும் நூலிற் கூறியுள்ளார். (பக். 20-34).

ஐரோப்பாவின் வடமேல் கோடியிலுள்ள தியூத்தானியச் சொற்கள் தமிழ்ச்சொற்கட்கு மிக நெருங்கியும், அக் கண்டத்தின் தென்கோடி நடுவிலும்தென்கிழக்கிலுமுள்ள இலத்தீன கிரேக்கச்சொற்கள் அவற்றினின்று சற்றுத் திரிந்தும், இந்தியாவிலுள்ள வேதமொழி அல்லது சமற்கிருதச் சொற் கள் மிகத் திரிந்தும், இருத்தலையும் நெறியீட்டொடு பொருத்துவதற்காக dvāra என் னும் சமற்கிருதச் சொல்லை dhvāra என்று திரித்தலையும் நோக்குக.

ஆரிய முழங்கு நிறுத்தங்கள் முழங்கா நிறுத்தங்களாகத் திரிந்தன என்பது.

| இலத்தீன் | கிரேக்கம் | தியூத்தானியம் |
|---|---|---|
| ago | ago | aka(lce.),to drive |
| geru | gonu | knee(E.) |

இவை முறையே அகை, கணு என்னும் தமிழ்ச்சொற்களின் திரிபாகும். உகைத்தல் = செலுத்துதல். உகை-அகை. அகைத்தல் = செலுத்துதல். கணு= பொருத்து, முட்டு.

சமற்கிருதத்தில் இச் சொற்கள் அஜ் (செலுத்து) என்றும் ஜானு (மூட்டு) என்றும் கிரிம் நெறியீட்டிற்கு மாறாகத் திரிந்திருத்தல் காண்க.

ஆரிய முழங்கா நிறுத்தங்கள் உரசிகளாகத் திரிந்தன என்பது.

எ- டு;- சமற்கிருதம் இலத்தீன் கிரேக்கம் கோதியம் ஆங்கிலம் செருமானியம்

padam pedem poda fotus foot fuss

இது பதம்-பாதம் என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபாம்.

நிலத்திற் பதிவது பாதம். பதி-பதம்-பாதம். அடி (bottom part) வேறு; பாதம் வேறு. பாதம் வைத்த தண்டு என்னும் வழக்கை நோக்குக.

இங்குக் காட்டியவற்றால், சமற்கிருதம் ஆரிய மூலமன்மை அறிக.

(6). சமற்கிருதத்தின் வழியது பிராகிருதம் என்பது.

பிராகிருதம்=முந்திச் செ-யப் பெற்றது. ஸ்ம்ஸ்கிருதம் = வேதமொழியொடு பிராகிருதம் கலந்து செ-யப்பெற்றது.

சமற்கிருதத்திற்கு முந்தியே தோன்றி வழங்கிவந்த இந்திய வட்டார மொழிகளே பிராகிருதங்கள். சில வடசொற்கள் தமிழிற் கலந்து திரிந்துள்ளது போன்றே (எ-டு. ஸ்தோத்ர- சோத்தம். த்ரு டாந்த-திட்டாந்தம்), பல

வடசொற்கள் பிராகிருதங்களிற் கலந்து திரிந்துள்ளன. இவை மேற்படைச் சொற்களேயன்றி அடிப்படைச் சொற்களாகா. வடசொற்களால் சில தமிழ்ச் செற்கள் வழக்கு வீழ்த்தப்பட்டும் இறந்துபட்டும் போனது போன்றே, பல பிராகிருதச் சொற்களும் போயுள்ளன. அதனாற் பிராகிருதங்கள் வடசொற் கலப்பு மிகைபற்றிச் சமற்கிருதக் கிளைகள்போல் தோன்றுகின்றன.

(7) சில வடசொற்கள் பிராகிருத வாயிலாக அடிப்படைத் தமிழ்ச் சொற்களாயின என்பது.

எ-டு. "வட்டம் < Pkt. vatta< Skt. vrtta"

(சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி, ப. 3468)

வகரம் உகரத்தொடு கூடி மொழிமுதலாகாமையால் சுட்டடி வகரமுதற் சொற்களெல்லாம் பெரும்பாலும் பகர முதற் சொல்லின் அல்லது மகர முதற் சொல்லின் திரிபாகவே யிருக்கும்.

எ-டு. பகு-வகு, மிஞ்சு-விஞ்சு.

இங்ஙனமே மல் என்னும் அடி வல் எனத் திரிந்துள்ளது. முல்-மல்-வல். முல்-முர்-முரி. முரிதல்-வளைதல். முரி-முறி. வல்லுதல் = வளைதல். வல் = வட்டு (சூதாடுகருவி). வல்லம்-ஓலைக் கூடை. வல்-வல்லி = வளைந்த கொடி. வல்லி-வல்லீ(வ.)

வல்-வல, வலத்தல் = வளைதல், வளைதல், சுற்றுதல், சூழ்தல்

வல்-வலி வலித்தல்-சுளித்தல். வலி வலிச்சம்=முகச்சுளிப்பு. வல்-வலை சூழும் கயிற்றுப்பொறி.

வல்-வள்

வள்-வள்ளம்=வளைவு, வட்டக் கிண்ணம், படி, மரக்கால், சிறுதோணி.

வள்-வள்ளி = கொடி. வள்ளியம் = மரக்கலம்.

வள்-வளவு = வளைவு.

வள்-வளர்-வளரி = வளைதடி. வளர்-வணர் = யாழ்க்கோட்டின் வளைந்த பகுதி. வணர்-வணரி=வளைதடி.

வளர்-வளார்=வளையும் சிறுபோத்து. வளாகம்=வளைந்த இடம், பறம்பு

வளி=வளைந்து வீசுங் காற்று. வளி-வசி-வசிவு=வளைவு. வளை-

வளவு, வளையம், வளைவி, வளையல், வளைசல். வளையம்-வலய(வ.).
வளை - வணை. வளை-வனை. வனைதல் = சக்கரத்தைச் சுற்றி
மட்கலஞ் செ-தல்.

வாள்=வளைந்த கத்தி. வாளம் = வட்டம். சக்கரவாளம் - சக்கரவால(வ.)

வாளி=வட்டமாயோடுகை. வாளி-பாலி(வ.).

வாளி=வளைந்த பிடி, வளையமான அணி.

வாளி-வாளிகை=காதணி. வாளி-வாலீ(வ.).

வாளி-வாசி = தெ-வப் படிமை மேல்வளைவு. வாசி-வாசிகை.
வள் - வண் - வணம் - வணங்கு - வணக்கு - வணக்கம் = வளைவு,
உடல் வளைவு, வழிபாடு.
வணங்கு-வாங்கு-வங்கு-வங்கி = நெளிவளையல், வளைந்த கத்தி.
வாங்கி-வாங்கா-வளைந்த ஊதுகருவி.
வங்கு-வங்கம்-வளைவு, ஆற்று வளைவு.
வள்+து வண்டு = கைவளை, சங்கு, வட்டமான அறுகாற் சிறு
பறவை, பெருவிரலும் அணிவிரலும் வளைந்த நிற்கும் இணையா
வினைக்கை, வளைத்து வைக்கும் வைக்கோற் பழுதை.

வள்+தி = வண்டி= சக்கரம், சகடம். வண்டி-பண்டி-பாண்டி= வட்டு,
கூடார வண்டி, உருண்டு திரண்ட காளை. பாண்டி-பாண்டியம் = எருது,
உழவு. பாண்டி - பாண்டில் = வட்டம், வட்டத்தோல், தேர்வட்டை,
வட்டக்கட்டில், வெண் கலத் தாளம், வண்டி, கிண்ணி, எருது.

வள்-வள்கு-வட்கு. வட்குதல்=வணங்குதல். வட்கார்=வணங்கார்,
பகைவர்

வட்கு-வக்கு-வக்கா = வளைந்த கழுத்துள்ள பறவை.

வக்கா-பக்க(வ.). வக்கா வங்கா.

வள்+து = வட்டு = வட்டமான சில், வட்டமான கருப்புக் கட்டி. வட்டு - வட்டம் - வட்டன் = உருண்டு திரண்டவன். வட்டம் என்னும் சொல் வட்ட வடிவான இருபதிற்கு மேற்பட்ட காட்சிப் பொருள்களைத் தொன்று தொட்டுக் குறித்து வருகின்றது. திருத்தம், தோறும், விழுக்காடு என்பன வட்டக்கருத்தை அடிப்படையாகக் கொண்ட கருத்துப்பொருள்களாகும்.

வட்டக்கிலுகிலுப்பை, வட்டத்தாமரை, வட்டத்திருப்பி, வட்டத்தாளி, வட்டத்துத்தி, வட்டநரி வெருட்டி, வட்டப்பாலை என்பனவும் பிறவும், தொன்றுதொட்டு வழங்கிவரும் நிலைத்திணைப் பெயர்களாகும்.

வட்டங் கூட்டுதல், வட்டம்பிரிதல், வட்டசட்டம், வட்டதிட்டம் என்பன வழக்கியன் மரபுச் சொற்கள். வட்டம் - வருத்த(வ.). இச்சொல் உருண்டையையுங் குறிக்கும்.

வட்டம்-வட்டகை = சிறு நாட்டுப்பகுதி.

வட்டணம் = வட்டமான கேடகம். வட்டணம்-அட்டண(வ.).

வட்டணித்தல் = வட்டமாதல், வட்டமாக்குதல்,

வட்டணை = வட்டம், கேடகம், தாளக்கருவி, வட்டமான செலவு, உருண்டை.

வட்டா = கீழும் மேலும் பரப்பொத்த வட்டக்கிண்ணம்.

வட்டாரம் = நாட்டுப்பகுதி.

வட்டித்தல் = வட்டமாதல், சுழலுதல், உருட்டுதல்.

வட்டி = வட்டமான கடகப்பெட்டி, கூடை, படி, படியளவு,

வட்டிகை = சுற்றளவு, கூடை, பரிசல், வளைத்தெழுதும் தூரிகை

வட்டி- வட்டில் வட்டமான உண்கலம், நாழிகை வட்டில்,

வட்டை = சக்கரச் சுற்று வளைமரம், தேர், வட்டப்பக்கா.

வடகம் = கறிச்சக்குச் சேர்த்துத் தாளிக்கும் உருண்டை.

வடகம்-வடக(t) - வ.

வட்டை-வடை = வட்டமான பலகாரவகை. வடை- வடா(வ.). வடையம்= நெல்லிப்பழவடை, வெற்றிலை பாக்குப் பொட்டலம். வாடுதல் = வளைதல், சா-தல், சோர்தல், மனமழிதல், மெலிதல், உலர்தல், பட்டுப்போதல்.

வாட்டம் = சா-வு, வாட்டசாட்டம் = சா-வுப்போக்கு.

வாடி- வளைந்த இடம், மதில், அடைப்பிடம், வளைசல், மண்டி. வாடி -வாடீ(t)-வ.

வாடம் = வட்டம். ஒன்றறுவாடம் = ஒன்டுவிட்டொரு நாள்

வாடகை = சுற்று வட்டம், வட்டகை.

“அரசூர் வாடகையில்” (S.I.I. III 109). வாடகை - வாட்டிகா(வ.).

வாடகை-வாடை = சிற்றூர், தெரு. வழி. வாடை - வாட்டா(வ.).

வள்-(வர்)-வரி = வளைந்த கோடு, கோடு எழுத்து. வர்-வார் - வாரம் = சரிவு, மலைச்சரிவு, தாழ்வாரம், கடல், வார் - வாரி=வளைந்த கடல், வார்-

வாரணம் = கடல், சங்கு. வாரணம் - வரணன் = கடல் அல்லது நெ-தல்நிலத் தெ-வம்.

வாரி-வாரி. வ(வ.); வாரணம் - வாரண (வ.). வாரணன் வருண(வ.)

வளைவு அல்லது வட்டக்கருத்தினின்று கிளைத்துள்ள பல்வேறு கருத்துச் சொற்கள் இங்குக் காட்டப்பட்டில.

வல் என்னும் அடி மல் என்பதினின்று திரிந்திருப்பதையும், வல் என்பதி னின்று வாரணம் என்பதுவரையும் காட்டப்பட்டுள்ள சொற்களெல்லாம் நேரே கோவையாகத் தொடர்புகொண்டிருப்பதையும், வடமொழியில் இங்ஙன மன்றி, இடையிடையுள்ள ஒருசில சொற்களே வழங்குவதையும், பெரும் பாற் சொற்கள், தமிழ் உலக வழக்கில் அடிப்படைச் சொற்களாக விருப் பதையும், ‘வல்’, ‘வ்ருத்த’ என்னும் இரண்டையும் வடமொழியார் வெவ் வேறு மூலங்களாகக் காட்டுவதையும், நோக்குவார்க்கு வட்டம் என்பது தூய தென்சொல் லென்றும், அதுவே பிராகிருதத்தில் வட்ட என்றும் சமற்கிருதத் தில் வ்ருத்த என்றும் முறையே திரிந்துள்ளதென்றும், தெற்றெனத் தெரியலாகும்.

ஒ.நோ நடி-நடம்-நட்டம்(த):-ந்ருத்த(வ.)

Valve (L. valva), vert (L. vertere), volve, volute (L. volvere), wallow (L. volvere), marina (L. mare, marinus) முதலிய பற்பல மேலையாரியச் சொற்களெல்லாம், வள், வளவு, வட்டம் (வ்ருத்த), வாரி, வார ணம் முதலிய தென்சொற்களினின்று திரிந்தனவே.

ஒருசில வடசொற்கள் பிராகிருதவாயிலாகத் தமிழில் வந்து திரிந்துள்ளது உண்மையே ஆயின் அவை தமிழுக்கு எத்துணையும் வேண்டாதன என அறிக.

8. தமிழ் சமற்கிருதத்தால் வளம்பெற்றது என்பது.

சமற்கிருதச் சொற்கலப்பால், தமிழ்ச்சொற்களுட் பல இறந்துபட்டும் பல வழக்கிறந்தும் பல பொருளிழந்தும் அல்லது மாறியுமே உள்ளன.

9. இந்திய நாகரிகம் ஆரியரது என்பது.

ஆரிய வருகைக்கு முற்பட்ட முதலிரு கழக நூல்களும் அழிக்கப்பட்ட தினாலேயே, சமற்கிருத நூல்கள் முதனூல்களும் மூலநூல்களும்போல் தோன்றுகின்றன.

10. ஆரியம் தனிமொழி என்பது.

ஆரியம் திரிமொழி என்பதை, என் The Primary Classical Language of the World என்னும் நூலைக் கண்டு தெளிக.

11. வட இந்தியாவிலுள்ளனவெல்லாம் ஆரியம் என்பது.

ஆரியர் வருமுன் வட இந்தியவாணருட் பெரும்பாலார் திரவிடரேயாத லின், வட இந்தியக் கலை நாகரிகக் கூறுகளுட் பெரும்பகுதி திரவிடமே என அறிக.

12. ஆரியம் எல்லாவகையிலும் அளவைப்பட்டது என்பது.

மேனாட்டு நாகரிகம் முந்நூற்றாண்டுக் காலத்ததே யாதலின், அதற்குமுன் உலகிற் சிறந்திருந்தது தமிழ நாகரிகமே.

13. நாகரிகம் குறுந்தலை (Brachycephalic) மக்களிடத்திலேயே சிறந்து தோன்றிற்றென்பது.

தமிழ நாகரிகம் குமரிநாட்டிலேயே பெருவளர்ச்சியடைந்துவிட்ட தனால், மாந்தன் நாகரிகம் நீள்தலை (Dolichocephalic) மக்களிடத்தும் தோன் றக்கூடியதேயாம்.

14. கொளுவுநிலை தென்னிந்திய அல்லது சித்திய மொழிகட்கே உரியது என்பது.

கொளுவுநிலை (Agglutination) என்பது பிறவினைக்கேயன்றி எல்லா வினைகட்கும் பெயர்கட்கும் உரியதன்று.

தென்மொழியிலும் சித்திய மொழியிலும் கொளுவுநிலை பிறவினைச் சொல்லின் பின் நிகழின், ஆரியமொழியில் அது வினைச்சொல்லின் முன் நிகழ்கின்றது.

எ-டு: forest, afforest, disafforest, anti-disafforestation, re-anti - disafforestation.

15. சொல்லின் ஈறு பிரியாமை உயர்நிலை என்பது.

சொல்லின் ஈறு முன்னிலையினின்று பிரியாது அதனொடு இரண்டறக் கலந்துநிற்பது, சொல்லின் திரிபு முதிர்ச்சியை யன்றி மொழியின் உயர்நிலை யைக் குறிக்காது; புதுத்தண்டின் பூண் பிரியக் கூடிய நிலையையும் துருப்பிடித்த பழந்தண்டின் பூண் பிரியமுடியாத நிலையையும் ஒப்புநோக்கிக்காண்க.

16. இருமையெண் மொழியின் உயர்வளர்ச்சியைக் காட்டும் என்பது.

அநாகரிக மாந்தர் பேசும் முண்டாமொழிகளிலும் இருமையெண் இருப்பதால் அது மொழியின் சிறப்பு வளர்ச்சியைக் குறிக்காது.

17. சொற்பால் அல்லது இலக்கணப்பால் மக்களின் உருவலிப்புத் (Imagination) திறனைக் காட்டும் என்பது.

உயிரில்லாப் பொருள்கட்கு உயிர்த்தன்மையூட்டுவது சிறுபிள்ளைகட்கும் இயல்பாம்.

18. சொல் இயல்பாகப் பொருளுணர்த்தும் என்பது.

ஒருசில ஒலிக்குறிப்புகளன்றிப் பிற சொற்களெல்லாம் கற்றாலன்றிப் பொருளுணர்த்தா.

19. மொழியலகு (unit of speech) சொற்றொடர் அல்லது சொல்லியம் (sentence) என்பது.

ஒவ்வொரு சொல்லாகவே மொழி தோன்றியிருப்பதனாலும், கருத்தை ஒரு தனிச்சொல்லும் உணர்த்துமாதலாலும் சொல்லே மொழியலகாம்.

20. எண்ணத்திற்கு மொழி இன்றியமையாத தென்பது.

ஊமையர் உள்ளத்திலும் எண்ணம் நிகழ்வதாலும் விலங்கு பறவைகளும் எண்ணி வினை செ-வதாகவே தெரிவதனாலும், மொழியின்றியும் எண்ணம் நிகழக் கூடியதே.

## 2. நெறிமுறைத் தவறுகள்

(1) எல்லா மொழிகளும் இடுகுறித் தொகுதிகளே என்பது. தமிழில் எல்லாச் சொற்களும் வேர்ப் பொருளுணர்த்துவதாலும்,

**“எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.” (610)**

**“மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா” (877)**

என்று தொல்காப்பியங் கூறுவதாலும், இந் நெறிமுறை தவறானதாம்

(2) எல்லா மொழிகளும் ஆயிரவாண்டிற் கொருமுறை அடிப்படைச் சொல் உட்பட முற்றும் மாறிவிடுகின்றன என்பது.

தமிழ் பல்லாயிரம் ஆண்டாக மாறாதிருப்பதால், இதுவும் தவறானதே.

(3) பொதுமக்கள் பேசுவதே மொழி என்பது.

வரலாற்றிற் கெட்டாத பண்டைக் காலத்திலேயே, உயிரும் உயிரில்லதும் உயிருள்ளதுமாகவுள்ள மூவகை இயற்கைப் பொருள்களை

யொப்ப, உயிரும் மெ-யும் உயிர்மெ-யும் என எழுத்தொலிகளை முதன் முதல் மூவகையாகப் பகுத்து, அதற்கேற்ப மூவகை வடிவமைத்து, ஓரொ லிக்கு ஒரே வரி யும் ஒரு வரிக்கு ஒரே ஒலியுமாக நெடுங்கணக்கு வகுத்து, பேசுகிறபடியே எழுதியும் எழுதுகிறபடியே பேசியும்; பொருள்களைப் பகுத்தறிவுள்ளதும் இல்லதும் என இருதிணையாக வகுத்து அதற்கேற்பச் சொல்வடிவுகளை யமைத்தும்; செ-யுளிலேயே பேசுந் திறனை வளர்த்துக் கருத்துகளையெல்லாம் மெ-ப்பாடு தோன்ற வெளிப் படுத்தற்கேற்ற பல்வகைப் பிரிவு கொண்ட நால்வகைப் பாக்களைப் படைத்து, எல்லா இலக்கியத்தையும் செ-யுளிலேயே இயற்றியும்; எழுத்து சொல் யாப்பணியொடு இன்றும் பிறமொழிகட்கில்லாத பொருளிலக்கணத்தை வகுத்தும்; சொல்லும் சொற்றொடரும் என்றும் இலக் கணவடிவு சிதையா திருத்தற் பொருட்டுச் செந்தமிழ் என்னும் வரம்பிட்டும்; மொழித்துறையில் ஒப்புயர்வற்ற நாகரிகமடைந்தவர் தமிழரே. அவர் இட்ட செம்மை என் னும் வரம்பே, பல்லாயிரம் ஆண்டின் பின்பும் பிறமொழிகள் போல் உருத் தெரியாதவாறு திரியாது உலக வழக்கழிந்தொழிந்து மறையாதும், தமிழைக் காக்கும் வல்லரணாயிருந்து வருகின்றது. இவ் வரணைச் சில வையாபுரிகள் வண்ணனைமொழிநூலின் பெயரால் தகர்க்கப்பார்க்கின்றனர். அடுக்குகிற அருமை உடைக்கிற நா-க்குத் தெரியுமா?"

**"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி யவர்கட் டாக லான"** **(1592)**

என்று தொல்காப்பியங் கூறுவதால், புலவரும் உயர்ந்தோரும் பேசும் வழக்கே தமிழுக்கு உலக வழக்காம். அவை பண்டைச் செ-யுளில் இடம் பெறாத காடை, தவசம் முதலிய பெயர்ச்சொற்களும் செ-துகொண்டு, செ-கின்ற முதலிய வினைச்சொல் வா-பாடுகளும் அன்னா, அந்தா முத லிய இடைச்சொற்களும், கேழ்ப்பை (கேழ்வரகு), தடிம்பல் முதலிய சொல்வடிவுகளும், ஒருவரைக் குறிக்கும் உயர்வுப் பன்மைச் சொற்களும். கூடப்போதல், கொடித் தட்டல் முதலிய வழக்குகளுமேயன்றி, கொச்சைச் சொற்களும் வழூஉச் சொற்களும் இடக்கர்ச் சொற்களும் ஆகா.

உடைவகையிலும் ஊர்தி வகையிலும் தமழர் மேலையரைப் பின்பற்றுவது போன்று, மொழித்துறையில் மேலையரே தமிழரைப் பின்பற்று தல் வேண்டும்.

(4) எல்லா நடைமொழிகளும் (Dialects) கொள்ளத்தக்கனவே என்பது.

இது எல்லாக் கீழ்மக்களின் தீய ஒழுக்கங்களையும் இழிந்த பழக்க வழக்கங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்பது போன்றதே. நரிக்குற வன் நடைமொழியையெல்லாம் ஆரா-வதினும், நகராண்மைக் குப்பை யைக் கிளைப் பின் ஏதேனும் நற்பொருள் கிடைப்பது திண்ணம்.

முத்திற மொழிநூல்போல் வண்ணனை மொழிநூற்குப் போதிய ஆரா-ச் சிக்கிடம் இன்மையாலேயே, இத்தகைய இழிதகைய ஆரா-ச்சியில் இறங்கியுள்ளனர். இது "வேலையில்லாத மஞ்சிகன் (அம்பட்டன்) வெண்கழு தையைப் பிடித்துச் சிரைத்தானாம்" என்னும் பழமொழியையே நினை வுறுத்துகின்றது.

இனி, நடைமொழிகளையும் ஒரு வரைதுறையின்றி, வட்டார நடை மொழி (Regional Dialect), உள்ளூர் நடைமொழி (Local Dialect), வகுப்பு நடைமொழி (Class Dialect), குமுக நடைமொழி (Communal Dialect), குடும்ப நடைமொழி (Family Dialect), தனிப்பட்டவர் நடை மொழி (Personal Dialect), எனப் பலவாறு வகுத்துள்ளனர் மேலையர். தமிழர்போல் ஒரு சிறந்த இலக்கண நடைமொழியை அளவைப்படுத்திப் பேச்சுவழக்கையும் பலுக்கல் (உச்சரிப்பு) முறையையுங் கட்டுப்படுத்தாது, சண்டிக் குதிரையும் பட்டிமாடும்போல் போன போன போக்கெல்லாந் திரியவிட்டுக் கீழோர் வழக் கையும் மேலோர் வழக்கொப்பக்கொண்டு, அவற்றை எழுத்துவடிவில் எழுதிக் காட்டவும் வழியின்றி இடர்ப்படுவது எத்துணைப் பண்பாடற்ற செயலாம்.

(5) மலைவாணர் முந்தியல் மாந்தர் என்பது.

தமிழரின் முந்தியல் (primitive) நிலைமை குமரிநாட்டிலேயே கழிந்து விட்டமையாலும். போருக்குங் கொள்ளைக்குந் தப்பிக் கீழிருந்தே சில வகுப்பார் மலையேறி வாழ்வதாலும், மலைவாணர் மொழிகளெல்லாம் மொழியின் முந்துநிலையைக் காட்டாது திரிபு நிலையையே காட்டுவதாலும், மலைவாணர் முந்தியல் மாந்தரல்லர் என்பது தெள்ளத் தெளிவாம்.

எ-டு: தமிழ் பிராகுவீ (பெலுச்சித்தான மலையடி வாணர் மொழி.

செவி கவ்

வா-கள் பாக்

வழி-வயி-வா--பா--பா

கள் (பன்மையீறு)-க-க

தமிழ் துடவம் (நீலமலைவாணர் மொழி)

மகன் மக்

மண்டை மட்

முள்-மள்-மழ-மக-மகன்-மக்.

மொள்-மொண்டை(மொந்தை)-மண்டை-மண்ட்-மட்.

(6) வா-ப்பயிற்சியால் எல்லா மொழியொலிகளையும் ஒருவர் பயின்று கொள்ளலாம் என்பது.

சில மொழியொலிகள் அயல்நாட்டு மக்களால் ஒலிக்க இயலாமையால், அவற்றை அவை வழங்கு நாடுகளிற் பல்லாண்டோ சில தலைமுறையோ குடியிருந்துதான் பயிலமுடியும்.

ஓர் அமெரிக்கர் சென்னையில் அண்ணாமலைநகருக்குப் புகை வண்டிச் சீட்டு வாங்க வேண்டியவர் தவறாக ஒலித்ததனால், ஆனைமலக்கு வாங்கிச் சென்றுவிட்டார்.

7. அயன்மொழிச் சொற்களுள் சிலவற்றின் வடிவுகொண்டு, பிறவற்றின் வடிவையும் ஒத்தமைவு (Analogy) முறையில் அமைத்துக் கொள்ளலாம் என்பது.

இலக்கண வகையில் ஒத்தசொற்கள் பொதுவாக ஓரொழுங்கு பட்டிருப் பினும், சிறுபான்மை நெறிக்கு விலக்காகவு மிருப்பதால், ஒத்தமைவுமுறை எல்லாவிடத்துஞ் செல்லாததாகும்.

## *சொற்புணர்ச்சி*

*எ-டு:*

| | |
|---|---|
| வலிமிகல் | மெலிமிகல் |
| வாழைப்பூ | தாழம்பூ (தாழை+பூ) |
| அவரைக்கா- | துவரங்கா- (துவரை+கா-) |
| புன்னைத்தோப்பு | தென்னந்தோப்பு (தென்னை+தோப்பு) |
| இறந்தகால வினையெச்சம் | |
| சொல் - சொல்லி | தெள் - தெள்ளி |
| நில் - நின்று | கொள் - கொண்டு |
| வில் - விற்று | கள் - கட்டு |

8. ஒரு குடும்ப மொழிகளின் பொதுவியல்பைக் கொண்டு அவற்றின் தா-மொழியை மீள அமைக்கலாம் என்பது.

இது, இறந்துபோன ஒரு தாயின் உருவப்படத்தை அவள் புதல்வி யரின் உருவப்படங்களை ஒப்புநோக்கி அமைக்கலாம் என்பது போன்றதே.

இனி, வண்ணனை மொழிநூலார் வரலாற்றரா-ச்சியை அடியோடு விட்டுவிட்டமையால். ஒரு குடும்ப மொழிகளின் மூலமொழி யிருக்கும் போதே அதையறியாது வேறொரு புதுமொழியை ஆக்கித் தாயாகக் காட்டு கின்றனர்.

9. ஒரு சொல்லின் வடிவும் பொருளும், ஓரிலக்கியத்தில் முந்திவரின் முந்தியவையென்றும், பிந்திவரின் பிந்தியவையென்றும் கொள்வது.

ஒரு புதுமொழியில் புதிது புதிதாகச் சொல்லும் பொருளும் தோன்று வதால், அதற்குத்தான் இந் நெறிமுறை பெரும்பாலும் ஏற்கும். முழுவளர்ச்சி யடைந்த ஒரு முதுமொழியில், ஒரு சொல்லின் பொருள்கள் அவை தோன்றிய வரிசையிலன்றி இடத்தின் தேவைக்கேற்ப ஆளப்பெறுவதால், அவற்றினின்று அவற்றின் முன்மை பின்மையை அறிய முடியாது.

பள்ளி என்னும் சொல்லின் இருபது பொருள்கள் இடைப்பட்டதான இடம் என்பது, இன்றுள்ள முதல் தொன்னூலாகிய தொல்காப்பியத்தில்,

**“சொல்லிய பள்ளி எழுதரு வளியின்” (102)**

என்று வந்திருத்தல் காண்க.

(10) ஓரெழுத்து இன்னோரெழுத்தாகத் திரியும் திரிபில் ஒருவழிப் போக்கையே கொள்வது.

மேலையாரிய மொழிகளிற் பொதுவாகக் ககரம் சகரமாகத் திரிந்துள்ளது. ஆயின், இந்திய மொழிகளில், சிறப்பாகத் தென்மொழியில் அவை இருவழிப் போக்காகவுந் திரியும்.

ச - க  க - ச

செம்பு - கெம்பு  கீரை - சீரை (ம.)

செ- - கை கெடு - செடு (தெ.)

(11) சொன்மாற்றக் காலக்கணிப்பால் (Glottochronology) இன மொழிகள் ஒன்றினின்றொன்று பிரிந்துபோன காலத்தைக் கணித்தறியலாம்

என்பது.

### இதன் விளக்கம் வருமாறு:

ஒரு மொழியின் முதற்றகை அடிப்படைச் சொற்கள் ஆயிரவாண்டிற் கொருமுறை நூற்றிற்கு 19 விழுக்காடு இறந்தபடுகின்றன. இரு மொழிகள் பிரிந்துபோ- ஆயிரவாண்டிற்குப்பின் பழம்பொதுச் சொற்றொகுதியில் நூற்றுமேனி 19 இழந்து, 81 தனித்தனி போற்றிக்கொண்டிருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். மூலப் பொதுத் தொகுதி 200 சொற்கொண்டதென் றால், முதலாம் மொழி இரண்டாம் மொழியைப் போன்றே 162 சொற்களை வைத்துக்கொண்டிருக்கும் ஆயின் இருமொழிகளும் ஒரே தொகுதியான சொற்களை இழக்கு மென்று எண்ண இடமில்லை. பெரும்பாலும் நேரக் கூடியபடி, இரண்டாம் மொழி முதலாம் மொழி வைத்துக்கொண்டிருக்கும் 162 சொற்களிலும் இழந்து போன 38 சொற்களிலும் நூற்றுமேனி 81ஐத் தாங்கி நிற்கும். அங்ஙனமாயின், இரு மொழிகளும் ஏறத்தாழ மூலத் தொகு தியில் நூற்றுமேனி 132ஐ அல் லது 66ஐப் பொதுவாகக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

இக் கணிப்பைத் தலைகீழாக மாற்றி, மூலச் சொற்றொகுதியில் நூற்று மேனி 66 இரு மொழிகட்கு இனச் சொற்களாயிருந்தால், அவை பிரிந்துபோ- ஆயிரம் ஆண்டாயிற்றென்றும்; நூற்றுமேனி 44 இனச் சொற்களாயிருந்தால், அவை ஈராயிரம் ஆண்டிற்குமுன் பிரிந்தனவென்றும், அறிந்துகொள்ளலாம்.

இது எத்துணை உன்னிப்பைத் (guess) தழுவியதென்பதையும் எங் ஙனம் உண்மைக்கு மாறாக இருக்கக்கூடும் என்பதையும், பகுத்தறிவாளர் கண்டுகொள்க.

(12) மொழித் தோற்றம் மொழிநூற்கு அப்பாற்பட்டு உடலியல் மாந்த னூலைத் தழுவியதென்பது.

மாந்தன் கீழினத்தினின்று தோன்றாது இறைவனாற் படைக்கப் பெற்றா னென்று கொள்ளின் இக் கொள்கை முற்றும் வழுவாதல் காண்க.

தமிழ்போலும் இயன்மொழியை அடிப்படையாகக் கொள்ளாது, ஆரியம் அல்லது சமற்கிருதம் போலும் திரிபில் திரிபான மொழியை அடிப் படையாகக் கொண்டு ஆ-ந்ததின் விளைவே, இம் மம்மருக்கும் மயலுக்கும் கரணியம் என அறிக.

# 3. வண்ணனை மொழிநூலின் விளைவு

## (1) பிராமணர் மகிழ்ச்சி

உலக மூலமொழி அல்லது முதற்றா- மொழி ஒரு காலத்திற் கண்டறி யப்படும் என, சென்ற நூற்றாண்டிடையிலேயே கால்டுவெலார் நம்பி எதிர் பார்த்தார். ஆயின், அதற்கு முற்றும் முரணாக இந் நூற்றாண்டில் வண்ணனை மொழிநூல் வளர்ச்சியுற்றுவருகின்றது. இதைக் கண்டு கழிபெரு மகிழ்ச்சி கொள்பவர் ஆரிய வெறியரே.

வரலாற்று மொழிநூல் வளரின், வடமொழி தேவமொழி என்பதும் ஆரியமொழிகட்கெல்லாம் மூலமென்பதும், தமிழை வளம்படுத்திற்றென் பதும், வடஇந்திய மொழிகளையெல்லாம் தோற்றுவித்ததென்பதும், ஒப்பு யர்வற்ற உலகப் புரட்டென்பது வெட்ட வெளிச்சமாகி விடும். இதை மறைத்து வருவதனாலேயே, வண்ணனை மொழிநூல் பூனாவிலுள்ள தெக்காணக் கல்லூரியிலும் ஏனையிந்திய ஆரிய நிலையங்களிலும் அது பெரிதும் போற்றப்படுகின்றது.

## (2) ஆரிய அடியார் பிதற்று

மேனாட்டார் சிறந்த அறிவியல் கருவிகளைக் கொண்டு மொழிநூலாரா-ச்சி செ-வதால் அவர் கண்டறிந்த வுண்மைகளெல்லாம் அறிவியன் முற்பட்டவை யென்றும், என்போன்றார் கூறுவதெல்லாம் உன்னிப்பு வேலை (guess work) என்றும், கற்ற பேதையரான சில ஆரிய அடியார் கூறிவருகின்றனர்.

முதற்கண் தமிழ்நாடு தென்னிந்தியாவிலன்றி ஐரோப்பாவிலேனும் அமெரிக்காவிலேனும் இல்லையென்றும், தமிழர் அறிவிக்கவே அயல்நாட் டார் தமிழை அறிதல் கூடுமென்றும், அறிதல் வேண்டும்.

இரண்டாவது ஆரா-வார் எத்துணைப் பேரறிஞரேனும் தவறான அடிப்படையில் ஆரா-ந்தால் தவறான முடிபிற்கே வரநேரும் என்பதை அறிதல்வேண்டும். காலஞ்சென்ற (L.D) சாமிக்கண்ணுப்பிள்ளை வான நூலில் மிகத் தேர்ச்சிபெற்றவரேனும் தவறான கருத்தை அடிப்படையாகக் கொண்டதினால், கி.பி. 165 போல் மதுரைக்குச் சென்ற கோவலனைக் கி.பி. 756-ல் சென்றவனாக முடிபு செ-துவிட்டார்.

மூன்றாவது, வயிரக் கற்களின் உயர்வுதாழ்வை மணிநோட்டகன் கண்ணே காண்பதுபோல், சொற்களின் வேரையும் பொருட் கரணியத்தை யும் மொழிநூல் வல்லான் அகக்கண்ணே காணுமென்றும், அறிவொடு உயிரு மற்ற அஃறிணைக் கருவிகள் காணாவென்றும், அறிதல் வேண்டும்.

தோகை என்னும் சொற்குத் தொகு (தொங்கு) என்பதும், விரல் என்னும் சொற்கு விரி என்பதும் வேரன்று, கால்டுவெலார் கண்டுபிடித்ததும் borough என்னுஞ் சொற்கு bergan (to protect) என்பதும், snake என்னுஞ் சொற்கு snican (to creep) என்பதும் மூலமென்று ஆங்கில அறிஞர் கண்டறிந்ததும்; உயர்திணை மதியினாலா அஃறிணைக் கருவியி னாலா?

புல்-புள்-புழு-புழல்-புடல்-புடலை. மே-மே--வே--வே-ந்தான்-வேந்தன்-வேந்து, என்னும் சொல் வரலாறுகளை எவர் மறுக்கவியலும்? இவை உண்மை நவிற்சியா, உன்னிப்பு நவிற்சியா?

பர். பரோவும் பர். எமெனோவும் மொழிநூல் வல்லாரும் தென் மொழியாரா-ச்சித் திறவோருமேனும், தமிழ்ப் பற்றற்ற பிராமணத் தமிழ்ப் பண்டிதர் தொகுத்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகர முதலியையும் பர். சுப்பிரமணிய சாத்திரியாரின் தொல்காப்பியக் குறிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டமையாலன்றோ, அவர்தம் திரவிட ஒப்பியல் அகரமுதலியில் மோள் (சிறுநீர்விடு) என்னும் தமிழ்ச்சொல்லைக் குறியாது விட்டதும், தகப்பன் (தம் + அப்பன் - தமப்பன் - தகப்பன்) என்னுஞ் சொல்லைத் தகு+அப்பன் என்று தவறாகப் பிரித்ததும், ஆயிரம் என்னும் தூய தென்சொல்லை ஸகஸ்ர என்னும் வடசொல்லினின்று திரித்ததும்

இனி ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப என்னும் தமிழ் மெல்லிசை மெ-யிணைகளை முறையே nka, nca, nta, ntha, mpa என்று அவர் ஆங் கிலத்தில் வல்லிசை மெ-யிணைகளாக வரிபெயர்த்தது (Transliteration) அறிவியன் முறைப்பட்டதாகுமோ?

### *(3). இளைஞர் மயக்கம்*

இற்றை யறிவியல்களெல்லாம் மேனாடுகளிலேயே தோன்றிவளர் வ தனாலும், சில போலித் தமிழறிஞரான ஆரிய அடிமையர் அதிகாரப் பதவி களிலிருந்து கொண்டு தமிழைக் காட்டிக்கொடுப்பதினாலும், ஆரா-ச்சி யில்லா ஆசிரியரும் மாணவருமான இளைஞர் உண்மையறிய வியலாது மயங்கித் தியங்குகின்றனர்.

வண்ணனை மொழிநூல் புதிதாக வந்ததென்று அதைப் போற்றுவது, திரைப்பட நடிகையர் மேற்கொள்ளும் மானக்கேடான புதிய உடைமுறை களையெல்லாம் புது நாகரிகக் கோலமென்று புகழ்வதையே ஒக்கும்.

கருவிகள் இயக்கப்படின் நிறுத்தும்வரை அல்லது தாமாகக் கெட்டு நிற்கும்வரை ஒரே வகையாக இயங்குமேயன்றி, சூழ்நிலைக்கேற்ப நிற் பதும் இடம்பெயர்வதுஞ் செ-யா. தாமாக இயங்கா ஒலிமானிகள் கையா ளப்பெறின் ஒருசில திரிபுகளைக் காட்டுமேயன்றி, எல்லாத் திரிபுகளையும் ஏறுமாறான திரிபுகளையும் காட்டா. எழுத்துகளின் பல்வேறு திரிபுகளை என் 'தமிழ் வரலாறு' என்னும் நூலிற் காண்க. ஏறுமாறான திரிபுகட்கு எடுத்துக்காட்டு வருமாறு;

| வழுநிலை | வழாநிலை |
|---|---|
| உ - இ: புல்-பில் | உ - இ: புரண்டை - பிரண்டை |
| இ - உ: பிள்ளை - புள்ளை | இ - உ: பிறகு -புறகு |
| உ - ஒ: குடை - கொடை | உ - ஒ: துளை-தொளை |
| ஒ - உ: கொடு-குடு | ஒ - உ: பொட்டு - புட்டா (புள்ளி) |

### (4) வண்ணனை மொழிநூலார் கண்டவை

வண்ணனை மொழிநூலைச் சிறப்பாக வளர்த்துவரும் அமெரிக்கர் கண்டவையெல்லாம் எழுத்திற்கு ஒலியும் வரியும் என இருவடி வுண்டென் பதும், ஒவ்வோர் ஒலிக்கும் வேறுபட்ட வரிவடிவிருத்தல் வேண்டுமென் பதும், ஆங்கில நெடுங்கணக்குத் தவறானதென்பதும், எழுத்தொலிகளை யும் வா-மண்டலத்தையும் நுண்பாகுபாடு செ-ததுமே.

இவற்றுட் பெரும்பாலானவும் பிறவற்றிற்கு அடிப்படையானவும் கி.மு.10,000 ஆண்டுகட்கு முன் தமிழர்கண்டவையே. ஆயின், வண்ணனை மொழிநூலார் இவற்றிற்கு இட்டுள்ள புதிய ஆரவாரப் பெயர்களைக் கண்டே இந்திய இளைஞர் மருண்டு வியக்கின்றனர்.

எழுத்தின் ஒலிவடிவிற்குப் போனீம் (phoneme) என்றும் வரிவடி விற்குக் கிராப்பீம் (grapheme) என்றும், கிளவியின் சொல்வடிவிற்கு மார் பீம் (morpheme) என்றும், பொருள் வடிவிற்குச் செமன்றீம் (semanteme) என் றும், பெயரிட்டிக்கின்றனர்.

எழுத்து என்பது பொதுவாகத் தமிழில் ஒலியைத்தான் குறிக்கும். வேண்டுமாயின், ஒலிவடிவை ஒலியன் என்றும் வரிவடிவை வரியன் என் றும் குறிக்கலாம். இதனால் தமிழ் பெற்ற சிறப்பும் வளர்ச்சியும் ஒன்று மில்லை.

சார்பெழுத்துகள் மூன்றனுள் உயிர்வழிப்பட்ட இரண்டையும் (குற் றியலுகரம், குற்றியலிகரம்) அல்லொலியன்கள் (allophones) என்னலாம்.

தமிழ்நெடுங்கணக்கும் அதைத் தழுவிய (சமற்கிருதம் உட்பட்ட) ஏனையிந்திய மொழி வண்ணமாலைகளும் ஒலியன் முறைப்படி அமைந் தனவே. அமெரிக்கர் இதையறியாது, வண்ணனை மொழிநூற் பள்ளிகளில் இந்தியமொழிகட்கும் ஒலியன் கண்டுபிடிக்கப் பயிற்சி கொடுக்கின்றனர். சமற்கிருத எழுத்துகளுள் சில உயிர்களும் சில மெ-களும் புணரொலி யன்களாகும் (compound phonemes). இது சமற்கிருத நெடுங்கணக்கைத் தழுவிய ஏனை யிந்திய மொழிகட்கும் ஒக்கும்.

எழுத்துகளின், பிறப்புப்பற்றி வா-மண்டலத்தைத் தமிழிலக்கண நூலார், குமரிநாட்டிலேயே, அடியண்ணம் (dorsal), இடையண்ணம் (fron tal), நுனியண்ணம் (apical), பல் (dental), இதழ் (labial) என ஐங் களமாக வகுத்திருந்தனர். மேலையர் இன்று கூட்டியிருப்பது தொண்டை (faucal) என்னும் ஒன்றே. எழுத்தொலிகளின் பிறப்பு முயற்சியையும் பண்டைத் தமிழர் செவ்வையாக அறிந்திருந்தனர்.

சென்ற நூற்றாண்டில் நெசுபீல்டு (Nesfield) ஆங்கில உயிரொலிகள் 20 என்றும் மெ-யொலிகள் 25 என்றும் வரையிட்டார். இது கிளீசன், ஆங்கில மெ-கள் 24 என்றும் ஆங்கில வுயிர்வகைகள் 36 என்றும் காட்டுவர். நெடில்களை அவர் சேர்க்காமையால் உயிர்கள் 45 ஆயினும் ஆகலாம்.

இங்ஙனம் ஆங்கில மக்களின் பல்வேறு ஒலிப்பு வேறுபாட்டையும் கணக்கிற் சேர்த்திருப்பதால், ஆங்கில வுயிர்கள் நுண்வகைகளை நாவின் உச்சிநிலையைக் கொண்டு, வாயின் மேல்கீழாக மேல் (high), இடை (mid), கீழ் (low), என்றும், முன் பின்னாக முன் (front), நடு (central), பின் (back) என்றும், வகுத்துக் காட்டுகின்றனர்.

இனி, பேசுவதும் கேட்பதும்பற்றி எழுத்தொலியத்தைப் (phonetics) பலுக்கொலியம் (articulatory phonetics) என்றும், கதுவொலியும் (acoustic phonetics) என்றும், இருபிரிவாகப் பிரித்திருக்கின்றனர். இவற் றுள் முன்னது மொழிநூலையும் பின்னது பூதநூலையும் (physics) சாரும்.

இனி, எழுத்துகளை இடம் அல்லது உறுப்புப்பற்றியும் முயற்சி பற்றியும் தன்மைபற்றியும் வெவ்வேறு சிறு வகுப்பாக வகுத்து, அதற்கேற்பப் பெயரும் இட்டிருக்கின்றனர்.

எ-டு அள்ளையன் (lateral) - இடம்

மெல்லுரசி (affricate) - முயற்சி

சிலம்பு (resonant) - தன்மை

இங்ஙனமே பிறவும்.

இவையெல்லாம் இலக்கணத்தின்பாற் பட்டனவேயன்றி, முத்திற வியல் கொண்ட மொழிநூலாகா.

குமரிநாட்டுத் தமிழரின் வரலாற்றிற் கெட்டாத் தொன்மையையும், அக்கால மக்களின் எஃகுச் செவியையும் நுண்ணுணர்வையும் நோக்கின், எழுத்துகளின் தன்மையையும் வகைகளையும் மாத்திரையளவையும் அவை தோன்றுமிடங்களையும் அவற்றின் பிறப்போடு தொடர்புள்ள உறுப்புகளையும்பற்றி, தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ள அளவே பண்டையர்க்குப் போதுமென்றும் அதிலிருந்து வண்ணனை மொழிநூலார் இக்காலத்திற் கூறும் நுட்பங்களையும் அவர்கள் அறிந்துகொள்ளக் கூடுமென்றும் உ-த்துணரலாம்.

3

# உலகத்தமிழ்ப் பேரவைகள்

## *1. அனைத்துலகத் தமிழ்ப்பேரவை*

தகடூர்ச் (தருமபுரி) சித்தமருத்துவர் செல்லையா, அவர்கள், 1961ஆம் ஆண்டிலேயே ‘அனைத்துலகப் பேரவை’ என்னும் பெயர்கொண்ட உலகத் தமிழ்ப் பேரவையைத் தோற்றுவித்தார். ஆயின், பொருட்டுணை இன்மையால் அவர் தமிழ்ப்பற்றும் ஊக்கமும் அதற்குமேல் வினையாற்ற வியலாதுபோயின.

## 2. உலகத் தமிழ்ப்பேரவை

உண்மையான தமிழ்ப்பற்றின்றி உலகப் புகழ்பெற வேண்டுமென் பதையே குறிக்கோளாகக் கொண்ட அப்பர் (Father) தனிநாயகம், தமிழறி யாத வரும் வடமொழி யார்வலருமான திரு. பில்லியோசா (J. Filliozat) என்னும் பிரெஞ்சுப் பேராசிரியரைத் தேடிப் பிடித்து, அவரைத் தலைவ ராகக்கொண்ட ‘உலகத் தமிழ்ப் பேரவை’ என்னும் அமைப்பகத்தை 1965-ல் நிறுவினார்.

அர். தனிநாயகம் தமிழ்ப்பற்றற்றவர் என்பதற்குச் சான்றுகள்:

(1) சென்னைப் ப. க. க. த. அகரமுதலியின் குற்றங்குறைகளை நான் நேரில் எடுத்துக் கூறியும் பொருட்படுத்தவில்லை; அவற்றைத் திருத்த எம் முயற்சியுஞ் செ-யவில்லை.

(2) முதலுலகப் தமிழ்மாநாட்டுக் கருத்தரங்கிற்கு என்னை அழைக் கவே யில்லை.

(3) இரண்டாம் உலகத் தமிழ்மாநாட்டுக் கருத்தரங்கிலும், பலர் வேண்டுகோட்கிணங்கி என் பெயரைச் சேர்த்தும், எனக்குரிய இடந்தரவில்லை.

(4) தமிழ்ப்பற்றற்ற பிராமணத் தமிழ்ப் புலவரையும் பண்டாரகரையும் ஈருலகத் தமிழ் மாநாட்டிலும் சேர்த்துக்கொண்டார்.

(5) எனக்குத் தெரிந்தவரை, என்றேனும் இந்தியை எதிர்க்கவுமில்லை; மறைமலையடிகளைப் பாராட்டவுமில்லை.

பர். தெ. பொ. மீ. யைமட்டும் அறுபான் ஆண்டு நிறைவு விழாவிற் பாராட்டினார்; அவரைத் தம் ஆசிரியராகவும் ஒரு நூலிற் குறித்திருக்கின்றார்.

இவர் தமிழிற் பெரும்புலவரு மல்லர்.

இவரது 'உலகத் தமிழ்ப் பேரவை'ச் சார்பில் ஈருலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றன.

## முதலாம் உலகத் தமிழ் மாநாடு (கருத்தரங்கு) கோலாம்பூர், 1966

### இதன் குறைபாடுகள்

1. முதல் மாநாடாயிருந்தும் தமிழ்நாட்டில் நடைபெறாமல் அயல் நாட்டில் நடைபெற்றமை.

2. அரசியல் தொடர்பு கொண்டமை.

உலகத் தமிழ் மாநாடு தமிழ்மொழி யிலக்கிய கலை நாகரிகம் பற்றிய தாதலின் தமிழறிஞரையே முற்றும் சார்ந்ததேனும், அரசியல் தொடர்பு கொண்டது பெயர் விளம்பரத்தைப் பெருக்கற்கேயென அறிக.

3. மறைமலையடிகள் கொள்கையர் விலக்கப்பட்டமை.
4. தமிழ்ப் பகைவரும் அரசியற் கட்சித் தலைவரும் அழைக்கப் பெற்றமை.
5. ஆங்கிலத்தில் நடைபெற்றமை.

## (2) இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு (கருத்தரங்கு) - சென்னை 1968

### இதன் குறைபாடுகள்:

1. அரசியற் சார்பில் நடைபெற்றமை,

தமிழ் மாநாடுகளைத் தமிழ்ப்பற்றுள்ள தமிழ்ப்புலவரே நடத்தத் தக்கார். அரசினர் உதவுநரும் ஊக்குநரும் அழைக்கப் பெறுநருமாகவே யிருத்தல் வேண்டும்.

## செயற்குழு

தலைவர்: மாண்புமிகு திரு.சி. என். அண்ணாதுரையார், முதலமைச்சர், தமிழக அரசு.

துணைத்தலைவர்கள்: பேரா. சே. பில்லியோசா, தலைவர் உலகத் தமிழாரா-ச்சி மன்றம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியனார், கல்வி அமைச்சர், தமிழக அரசு.

திரு. மீ. பக்தவச்சலனார், முன்னாள் தமிழக முதலமைச்சர்.

அழைக்குநர்: திரு. ஆ. சுப்பையா, செயலாளர். உலகத் தமிழரா-ச்சி மன் றம், இந்தியக் கிளை.

உறுப்பினர்கள்: பேரா. சந்திரன் தேவநேசனார், முதல்வர்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரி.

திரு. கி. வா. சகந்நாதனார், ஆசிரியர், கலைமகள்.

பர். (Dr.). ஆல்பர்ட்டு பீ. பிராங்கிலின்.

திரு. அ. இராதாகிருட்டிணனார், ஆள்வினைஞர்,

இந்து அறநிலையத் துறை.

பொதுச் செயலாளர்: திரு. வே. கார்த்திகேயனார்,. சென்னைத் துறை முகத் தலைவர்.

பொதுச்செயலாளர் - பொருளாளர்: திரு. வி. எசு. தியாகராசனார், தொழில் அதிபர்.

தனி அலுவலர்: திரு. கி. வேங்கடசுப்பிரமணியனார், துணை இயக்குநர் (கல்வி), சிற்றூர் வளர்ச்சித்துறை.

உதவித்தனி அலுவலர்: திரு. கே.வி. சீனிவாசராகவனார்.

இப் பதின்மூவருள் எனக்குத் தெரிந்தவரை இருவரே தமிழ்ப் புலவர். அவருள் ஒருவர் தமிழர்; இன்னொருவர் தமிழ்நாட்டுப் பிராமணர்.

மீகான்மைக் குழுவில் (Steering Committee) பேச்சாளர் (Speaker) உட்பட அமைச்சரெல்லாரும் சேர்க்கப்பட்டதும், கடற்கரை வரவேற் புக்

கூட்டத்திற் புலவர்க்கு நிகழ்ச்சியில்லாது போனதும், மாநாட்டின் அரசியற் சார்பை விளக்கிக் காட்டும்.

2. வடிப்புக் குழுத் (Screening Committee) தலைவர் பெரும் பாலும் தமிழ்ப் புலமையும் தமிழ்ப் பற்றும் இல்லாதவரா யிருந்தமை.

| குழு | தலைவர் |
|---|---|
| மொழிநூல் | பர். சுநீதிகுமார் சட்டர்சி |
| இலக்கியம் | பேரா. கோ. சுப்பிரமணியப் பிள்ளை |
| குமுகாயவியல் | பர். கே. கே. பிள்ளை |
| கலையும் தொல்பொருள் நூலும் | பேரா. பி. சாம்பமூர்த்தி |
| அறிவியலுங் கம்மியமும் | பர். என். நடராசன் |
| வெளிநாட்டு வணிகமும் கலை நாகரிகத் தொடர்பும் | பேரா. சேவியர் எசு. தனிநாயகம் |
| ஒப்பியற்கல்வி | பர். எசு. என். கத்திரே |
| தமிழ்க்கட்டுரைகள் | பேரா. லெ. பெ. கரு. இராமநாதன் செட்டியார் |

இவ் வெண்மருள் மூவரே தமிழ்ப் புலவர், ஏனையருள் ஒருவர் தமிழ் நாட்டுப் பிராமணர்; ஒருவர் கொங்குணிப் பிராமணர்; ஒருவர் வங்கப் பிராமணர். இம் மூவருள் சமற்கிருத வெறியரான தமிழ்ப் பகைவார் கிரேக்கத்தி லிருந்து இயற்றமிழும் வேதத்தினின்று இசைத்தமிழும் தோன்றின என்பவர்.

3. மாநாட்டுக் கட்டுரையொழுங்குபற்றிய அறிவிப்பிதழில் தமிழின் தொன்மையை மறைக்கவேண்டு மென்னுங்கருத்து வெளியிடப்பட்டமை.

"உலக அறிஞர்கள், குறிப்பாக மேலைநாட்டு அறிஞர்கள், எதையும் அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. கண்டிப்பான நெறிமுறையின்படியும், விருப்பு வெறுப்பற்ற நடுநிலையில் நின்றும், அறிவியல் முறையில் ஆரா-ந்து பார்த்துந்தான் எதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர்கள் வலியுறுத்துகின்றனர். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய பழங்குடி என்பது போன்ற தக்க ஆதாரமில்லாத தற்பெருமையான கூற்றுகள், எதையும் அறிவியல் அடிப்படையில் ஆரா-ந்து பார்க்கும் நம்முடைய தகுதியிலும் திறமையிலும் அவநம்பிக்கைதான் ஏற்படச் செ-யும்."

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்கிற தமிழ் மூதுரையில் பொருத்தமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒன்றே உலகம் என்னும் நம்வாழ்வு முறையின் உயர்வுநவிற்சியற்ற காட்சியை வழங்குவதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்."

இவ் விரு குறிப்புகளுள் முந்தினதொன்றே, இம்மாநாடு வையாபுரி கூட்டத்தால் நடத்தப்பட்ட தென்பதற்குப் போதிய சான்றாகும்.

மேனாட்டறிஞர் எல்லாரும் அறிவியல் முறைப்பட்ட நடுநிலை மொழி யாரா-ச்சியாளர் அல்லர். இஞ்சிவேர், சுவணம், வடவை முதலிய சொற் கட்கு மானியர் வில்லியம்சு சமற்கிருத -ஆங்கில அகரமுதலி காட்டியிருக்கும் மூலங்களும், இவற்றுள் முதற்சொல்லிற்கு ஆக்கசுபோர்டு சிற்றகர முதலியும் சேம்பெர்சு இருபதாம் நூற்றாண்டு அகரமுதலியும் காட்டியிருக்கும் மூலங்களும், பொதுவாக மேனாட்டார் மொழித்துறையிற் பிராமணர் கூறியிருப்பதைக் குருட்டுத்தனமாக நம்புபவர் என்பதையே புலப்படுத்தும்.

## இஞ்சிவேர்

இஞ்சுதல் = நீரை உள்ளிழுத்தல். நீரை உட்கொண்டிருந்தலாலும் வேரானதாலும் இஞ்சிவேர் எனப்பட்டது.

இஞ்சிவேர் -L. zingiber, Gk. zingiberis, LL. and OE. gingiber, Skt. srngavera.

"sringa,.... the horn of an animal .....vera,....ginger (undried or dry). -S.E. D:

"ginger,...... OE and LL. gingiber f. L. zingiber f. G.k. ziggiberis f. Skt. srngavera (srnga = horn, vera= body) -C.O. D.

"Ginger,...... M. E. gingivere - O. Fr. gengibre -LL. gingiber -L. zingiber -Gk. zingiber, perh. Skts. sringa, horn, vera, = shape -Malay inchiver."

சமற்கிருதத்தில் ச்ருங்க என்பது கொம்பையும் வேர என்பது உடம்பையும் குறிக்கும். இதனால், இஞ்சிவேர் என்பதை ச்ருங்க வேர என்று திரித்து, மான்கொம்பு போன்றது என்று பொருட்கரணியங் கூறியிருக்கின்றனர் வடவர். பரவெளிச் செலவு நிகழும் இவ் விருபதாம் நூற்றாண்டிலும் இப் பொருந்தாப் பொ-த்தலை நம்பும் மேலையர் எங்ஙனம் அறிவியற்பட்ட நடுநிலையாரா-ச்சியாளர் ஆவர்?

இஞ்சி கா-ந்தாற் சுக்கு. தமிழில் இஞ்சி என்பது சுக்கை ஒரு போதுங் குறியாது.

சேம்பெர்சு அகரமுதலி இஞ்சிவேர் என்னுஞ் சொல்லை மலையாச் சொல்லாகக் குறித்திருப்பது மேனாட்டாரின் தமிழறியாமையை எத்துணைத் தெளிவாகக் காட்டுகின்றது! இஞ்சி தொன்றுதொட்டுத் தென்னாட்டில் விளைந்து வருவதையும் அவர் இன்னும் அறிந்திலர்.

உயர்வுநவிற்சி (Hyperbole) என்பது உயர்ந்தோரும் கொள்ளத்தக்க அணியே.

**“அனிச்சப்பூக் கால்களையாள் பெ–தாள் நுசுப்பிற்கு**
**நல்ல படாஅ பறை.”** **(குறள். 1115)**

**“அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்”** **(குறள். 1120)**

என்று பொ-யாமொழிப் பொதுமறை யாசிரியரான திருவள்ளுவர் என்னும் தெ-வப்புலவரும், உயர்வுநவிற்சியை ஆண்டிருத்தல் காண்க.

தமிழ் முதற்றா- மொழி என்பதற்கும் உலகமுதல் உயர்தனிச் செம் மொழி யென்பதற்கும் எல்லாவகைச் சான்றுகளும் உள்ளன. தமிழ்ப் பகை வரின் பொறாமைக்கண் அவற்றைக் காணமுடியாது இருண்டு போயிருக் கலாம்.

குமரிநாடே தமிழன் அல்லது அறிவுடை மாந்தன் பிறந்தகம். குறிஞ்சி யும் முல்லையுமான பாலைநில மறவர். தமிழருள்ளும் முதியவராதலால், அவர் குடி தொன்றுதொட்டு முதுகுடி எனப்பெற்று வருகின்றது.

**“முதுகுடி மகட்பா டஞ்சிய மகட்பா லானும்”** **(பொருள். 79)**

என்பது தொல்காப்பியம் ஆதலால்,

**“கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு**
**முற்றோன்றி மூத்த குடி”**

என்னும் ஐயனாரிதனார் கூற்றில் யாதொன்றும் இழுக்கில்லை என்க.

### சுவணம்

உவண் = மேலிடம். உவணம் = மிக வுயரப் பறக்கும் பருந்து, கழலுன், கழுகு. உவணம் - சுவணம். ஒ. நோ: உருள் - சுருள், உழல் -சுழல், உதை- சுதை. சுவணம் - ஸுபர்ண (வ.).

வடவர் சுவணம் என்பதை ஸுபர்ண என்று திரித்தும், ஸு + பர்ண என்று பிரித்தும், அழகிய இலை, அழகிய இலை போன்ற சிறகுகளை யுடையது, பெரும் பறவை, கலுழன் (கருடன்) என்று பொருள் விரித்தும், தம் ஏமாற்றுத்திறத்தின் எல்லையைக் காட்டியுள்ளனர். ஸு = நல்ல, பர்ண = இலை.

மானியர் வில்லியம்சு சமற்கிருத ஆங்கில அகரமுதலியும் இவ் வாறே மூலங் கூறுகின்றது.

**வடவை**

வடம்-வடவை = வடக்கில் தோன்றும் நெருப்பு அல்லது ஒளி (Aurora Borealis). இது வடந்தை எனவும் படும். வடம்- வடந்தை. தாயுமானவரும் இதை வடவனல் என்பர். உத்தர மடங்கல் (திவா). உத்தரம் (பிங்.) என்றும் இதற் குப் பெயருண்டு. உத்தரம் = வடக்கு. ஆராரோ போரியாலிசு என்னும் இலத்தீன ஆங்கிலச் சொல்லும் வடவொளி (northern lights) என்னும் பொருளதே. (Ch. T.C. D.).

16ஆம் நூற்றாண்டு ஆங்கிலக் கலவர் போன்றே, வரலாற்றிற் கெட்டாத பண்டைத் தமிழக் கலவரும் (sailors) சுற்றுக் கடலோடிகளா- (circumnavigators) இருந்தமையால், வடமுனையில் தோன்றும் பல்வண்ண மின்னொளியைக் கண்டு அதற்கு வடவை எனப் பெயரிட்டிருக்கலாம்.

வடவர், வடவை என்னுஞ் சொல்லை வடசொல்லாகக் காட்டல் வேண்டி, வடபா என்னும் அதன் வடமொழி வடிவிற்குப் பெண்குதிரை என்று பொருளிருத்தலால், அதற்கேற்ப ஒரு கதையைக் கட்டி, வடபாக்னி என்றும் வடபா முகாக்னியென்றும் பெயர்விரித்து, பெண்குதிரை முகத்தில் தோன்றிய நெருப் பென்று பொருளுங் கூறிவிட்டனர்.

மா. வி. யின் ச - ஆ. அகரமுதலி அக் கதையையும் வரைந்து, வடபாக்னி என்னுஞ் சொற்கு "mare's fire sumbarine fire or the fire of the lower. regions (fabled to emerge from a cavity called the 'mare's mouth' under the sea at the South Pole" என்று விளக்கமுங் கூறியுள்ளமை காண்க.

இன்னும் இவற்றின் விரிவை என் 'வடமொழி வரலாறு' என்னும் நூலுட் கண்டுகொள்க.

4. தமிழுக்கென்று தண்டப்பெற்ற பணம் முழுதும் தமிழுக்காகச் செல விடப் பெறாமை.

5. தமிழ்ப்பற்றாளரும் தமிழைச் செவ்வையா- அறிந்தவருமான மறை மலையடிகள் வழியினர்க்குத் தகுந்த இடம் தரப்பெறாமை.

6. தமிழ்ப் பகைவர் கட்டுரையாளராக இடம்பெற்றமை.

கட்டுரைகள் அறிவியன் முறைப்பட்டனவும் புத்தம் புதிய ஆரா-ச்சி யனவுமாக இருத்தல் வேண்டுமென்னும் வரம்பீடெல்லாம், தமிழின் பெருமைபற்றிய கட்டுரைகளைத் தடுத்தற்கும் தமிழைப் பழிக்கும் கட்டுரை கட்கு இடந்தரற்குமே யன்றி வேறன்று.

தமிழ்நெடுங்கணக்கு கி.மு. 10, 000 ஆண்டுகட்கு முற்பட்டதாகவும் தொல்காப்பியம் கி.மு. 7ஆம் நூற்றாண்டினதாவும் இருக்கவும், அவை யிரண்டும் கி.மு. 2ஆம் நூற்றாண்டினவாக ஒரு தமிழ்ப் பகைவரால் அச் சிட்டுப் படிக்கப்பட்டது.

தமிழறியாதவரும் தமிழை அரைகுறையாகவும் தவறாகவும் கற்ற வருமான அயலார் தமிழறிஞர்க்குத் தமிழைப்பற்றி அறிவிக்க வந்தமை.

பேரா. பில்லியோசா பண்டை நாளில் சமற்கிருதமே இந்தியப் பொது மொழியாயிருந்த தென்றார்.

ஆரியர் வந்தபின் சமற்கிருதம் தேவமொழியென்னும் ஏமாற்றினால் இன்றுபோல வழிபாட்டு மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் முன் பிருந்ததேயன்றி, பொது வழக்கு மொழியாகவோ அரசியன் மொழி யாகவோ ஒருபோதும் இருந்ததில்லை. பேரா. பில்லியோசா கூறும் கவரிய மானியும் (Magneto - meter) மின்னிய லெதிர்ப்பும் (Electric resistance) சவப்புதை யலைக் கண்டுபிடிக்க உதவுமேயன்றி, தமிழன் பிறந்தகத்தையும் உலக முதன் மொழி தோன்றிய வகைகையும் சொற்களின் வேர்களையும் கண்டுபிடிக்க உதவா.

பேரா. பாசானி தமிழ் இருநூறு பாரசீகப் சொற்களைக் கடன் கொண் டுள்ள தென்றார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியைத் தொகுத்த பிராமணத் தமிழ்ப் பண்டிதர் தமிழுக்கு வேண்டாத ஆயிரக்கணக்கான அயற் சொற்களை அதிற் புகுத்தினதினாலேயே, பேரா. பசானி அங்ஙனங் கூற நேர்ந்தது. அவர் எடுத்துக்காட்டிய சொற்களுட் சில தமிழினின்று பாரசீகஞ் சென்றவை; பல தமிழுக்குத் தேவையல்லாதவை. தமிழ்ச்சொற்கள் பார சீகத்தில் மட்டுமன்றி அதற்கு மூலமான செந்து (அவெத்த) விலுமுண்டு.

எ -டு:

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | செந்து (Zend) | தமிழ் | பாரசீகம் |
| அதர் | அத்வன் | ஆயிரம் | ஹஸார்(Z) |
| இதா (இங்கே) | இத | கவுதாரி | கௌதார் |
| | கரடி | சர்ஸ்(chars) | |
| தூணி | த்ரவோண | | |
| பற | பத் | கழுகு | கொர்கி |
| பரி(வட்ட) | பைரி | குருடு | கூர் |
| புரை (உயர்வு) | பெரெஸ்(Z) | சுவர் | தீவார் |
| மிகு | மிஹ் | சுடு | ஸூஸன் |
| பூ (தோன்று) | பூ (b) | பல் -பல | பரு |
| நமத்த | நப்த | முகர் | முஹர் |

பொருளிலக்கணத்தையும் புலனெறிவழக்கத்தையும் கழகச்செ-யுட்கும் உலக வழக்கு மொழிக்குமுள்ள வேறுபாட்டையும் தக்க தமிழ்ப்புலவர் வா-க்கலலாத பர். காமில் சுவெலபில், ஏற்கெனவே தமிழைப்பற்றித் தமக்குள்ள திரிபுணர்ச்சியை, தம் சொந்த ஆரா-ச்சி வெளியீடுகளிலும் பர்.சேதுப்பிள்ளை நினைவு மலரிலும், ‘தமிழின் வரலாற்றிலக்கணக் கட்டுரைகள் (Lectures on Historical Grammar of Tamil) என்னும் தம் சுவடியிலும், பரக்கக்காட்டி, அதற்கு முடிமணியாக இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரை யொன்றில்,

“ஒருவரின் தா-மொழிப் பற்றும் சொந்தக் கலைநாகரிகப் பற்றும் மிக ஏதப்பாடுள்ளதும் வழிவிலகியதுமான ஒரு திருப்பத்தை அடையக் கூடும். மறைமலையடிகளும் ச. சோ. பாரதியும் பாரதிதாசனும் தொடங்கிய போக்குகள், அஞ்சத்தக்க அளவு விரிந்து பரவி உண்மையான தாராளப் படைப்புத் திறனைக் கொன்றிருக்கின்றன. அரசியல் மொழியியல் பண்பாட்டி யல் அல்லது கலையியல் தொடர்புறவுத் தடைகள் என்றேனும் நாளடைவில் வெற்றி பெற்றதில்லை. அவை அணித்தாகவோ பிந்தியோ வீழ்ந்து விடுவது திண்ணம்” என்று சிறிதும் அடக்கவொடுக்கமின்றிச் சிறுபட்டித் தனமாகக் கூறியுள்ளார். ‘நூறாண்டு திரவிட மொழியாரா-ச்சி’ என்னும் சுவடி யிலும், மனை, mansion என்னும் சொற்கட்குள்ள தொடர்பைக் கண்டு பிடித்த பர்.சி. யூ. போப்பைக் கண்டித்திருக்கின்றார்.

இதுவரை, அறிவியலாரென்றும் நடுநிலையாளரென்றும் உண்மை யறிந்து நமக்கு உதவுவாரென்றும் நாம் நம்பியிகுந்த மேலையர், இங்ஙனம் ஏமாற்றத்தை விளைவித்து “இனம் இனத்தோடு சேரும்” என்பதற்கேற்ப ஆரியரொடு கூடிக் கொண்டு, தமிழுக்கு மாபெரு மலைபோலுள்ள மறை மலையடிகளையும் கண்ணுங் கருத்துமின்றிக் கண்டிக்குமளவு கெட்டு விட்டாரெனின், இனிமேல் மிக விழிப்பா- இருந்து ‘தன் கையே தனக்கு தவி” என்னும் நெறிமுறையையே இறுகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

நற்றிணையென்னும் கடைக்கழகச் செ-யுட் டொகையையும், ‘நாலு வேலி நிலம்’ என்னும் கொச்சைத் தமிழ் நாடகக் கதையையும், கருவியாகக் கொண்டு, உலக உரைநடை யமைப்பை வகுத்த கோமாளிக் கூத்தர் பர். காமில் சுவெலபில் என அறிக.

தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் துணைத்தலைவர் தக்கவராயிருந்தால் இந் நிலைமை நேர்ந்திராது. சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் பர். காமில் சுவெலபிலைத் தப்புந்தவறுமாகச் சொற்பொழி வாற்ற விட்டதும், அச் சொற்பொழிவுகளைப் பல்கலைக்கழக முத்திரையிட்டு வெளி யிட்டதும், அவருக்கு மிகுந்த துணிச்சலை உண்டுபண்ணிவிட்டன. இதனாலேயே அவருக்கு இசைந்த மூவரை இக்கால முப்பெருந் தமிழ்ப்புலவராகப் புகழ்ந்துள்ளார்.

அம் மூவருள், ஒருவர் இலக்கணமும் மொழிநூலுங் கல்லாதவர்; ஒருவர் ஆரிய அடிப்படையில் தமிழ் கற்றவர்; ஒருவர் சொந்த மொழி யாரா-ச்சி யில்லாதவர். இந் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்ப்பெரும் புலவர் மறைமலையடிகளும் உ.வே. சாமிநாதையருமான இருவரே.

தமிழின் சொல்வளத்தையும் தனிப்பெருந் தூ-மையையும் ஆரியச் சொற்கலப்பால் அதற்கு நேர்ந்துள்ள அழிவுநிலையையும் அறியாத மேலை யர், தம் மொழிபோல் தமிழையும் கருதிக்கொண்டு அதன் தூ-மையைத் தாக்குவது, பொதுமகள் குலமகளின் கற்பைப் பழிப்பது போன்றதே.

8. மாநாட்டு ஊர்வலக் காட்சியில் பிற்கால ஐம்பெரு வனப்புகளைத் தமிழ்த்தாயின் மக்களாகக் காட்டியமை.

தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ள எழுவகை நிலத்திற்கு எண் வகை வனப்பிற்கும் இலக்கியமாயிருந்து இறந்துபட்ட ஏராளமான இரு வகைத் தொடர்நிலைச் செ-யுள்களே ஆரிய வருகைக்கு முற்பட்டுச் சொல் லிலும் யாப்பிலும் பொருளிலும் கருத்திலும் முழுத் தூ-மையான மணிச் சே- களாகும்.

ஐம்பெருங்காப்பியம் என்னும் ஐம்பெரு வனப்புகளும் கி.பி. 2ஆம் நூற்றாண்டிற்கும் 10ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவை; வடசொற்களும் ஆரியக் கருத்துகளும் கலந்தவை அவற்றுள், சிலப்பதிகாரம் ஒன்றே, சிவனியமும் மாலியமும் சமணமும் பற்றிய குறிப்புகளைக் கொண் டிருப்பினும்,பெரும்பாலும் எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவான அறநெறி பற்றியதாகும். ஏனைய நான்கனுள், இரண்டு புத்தமும் இரண்டு சமணமும் பற்றியனவே. மேலும், கதையிற் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே தமிழகத்தைத் தழு வியவை; ஏனை மூன்றும் தமிழகத்திற்குப் புறம்பானவே. இங்ஙனமிருக்க, இவற்றைத் தமிழின் ஐம்மக்களாகக் காட்டுவது தமிழுக்கு இழுக்கேயென அறிக.

9. ‘பூம்புகார்’ நிகழ்ச்சிகட்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்கும் தொடர் பின்மை.

10. மாநாடு ஆங்கிலத்தில் நடைபெற்றமை.

தமிழ், இலத்தீன் போன்ற இறந்துபட்ட மொழியும் சமற்கிருதம் போன்ற இலக்கிய நடைமொழியுமல்லாது, தொன்றுதொட்டு, வழங்கிவரும் இளநல மென்மொழியாதலின், எத் தமிழ் மாநாட்டையும், இனிய தமிழில் நடத்துவதே ஏற்றதாம்.

தமிழிற் பேச இயலாதவரெல்லாரும் எழுதிப்படித்தல் வேண்டும். அது வும் இயலாதவர் சும்மாவிருந்து பிறர் சொல்வதையும் படிப்பதையும் கேட்டல் வேண்டும்.

11. மாநாட்டிற்குப் பொதுக்கரணிகர் இன்மை.

மாநாடு முழுவதையும் ஆண்டு நடத்தற்கேற்ற பொதுத் தலைவர் ஒருவர் இன்மையால், ஒவ்வொரு நாளும் அவரவர் மனத்திற்குத் தோன்றி யவாறும் வா-க்குவந்தவாறும் பொறுப்பற்றுப் பேசியும் படித்தும் முடித்து விட்டுச் சென்றிருக்கின்றனர்.

12. கொடைமடம்

தமிழ்நாட்டு முப்பல்கலைக்கழகங்கட்கும் திருக்குறட் பேராசிரியப் பதவி ஏற்படுத்துமாறு மும்மூன்றிலக்கம் உருபா கொடுக்கப்பட்டுளது. திருக்குறள் எத்துணை ஒப்புயர்வற்ற உலகப் பெருநூலாயினும், முப்பல்கலைக் கழகத்திலும் அதை ஆராயத் தேவையில்லை.

தமிழகம் முழுவதும் ஏற்கெனவே மாவட்டந்தொறும் மாநகர்தொறும் திருக்குறட்கழகமோ திருவள்ளுவர் கழகமோ ஏற்பட்டு, ஆண்டுதோறும் அறிஞர் பலரால் ஆரா-ச்சிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்று வருகின் றன. இலக்கிய வகையில் திருக்குறள் சிறந்தது போன்றே, இலக்கண வகை யில் தொல்காப்பியம் சிறந்ததாகும். தமிழ் பிற மொழிகட்கில்லாத பொரு ளிலக்கணங் கொண்டிருப்பதால், தொல்காப்பியம் மொழியிலக்கணம் மட்டு மன்றி மக்கள் வாழ்க்கை இலக்கணமும் வகுத்துக் கூறுவதாகும்.

இனி, சென்னைப் பல்கலைக்கழகக் தமிழ் அகரமுதலி, தமிழுக்கு அளவற்ற கேடு செ-வதும் அயலாரையெல்லாம் கெடுப்பதுமாயிருத் தலால், அதை உடனே திருத்துதல் வேண்டும். தமிழுக்குச் சொற்பிறப்பியல் அகரமுதலி ஒன்றுமின்மையால், தமிழ் வளர்ச்சியின் பொருட்டும் மாணவர் கல்வியின் பொருட்டும் அதனையும் தொகுத்தல் வேண்டும். இவற்றுள் பின்னது முன்னதை ஓரளவு தன்னுள் அடக்குவதால், அதனையே முதற் கண் முடித்தல் வேண்டும்.

ஆகவே, முப்பல்கலைக்கழகங்களுள்ளும், ஒன்றில் தொல்காப்பிய ஆரா-ச்சிக்கும் ஒன்றில் திருக்குறள் ஆரா-ச்சிக்கும் ஒன்றில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பிற்கும், திட்டம் வகுப்பதே அறிவு டைமைச் செயலாகும். இவற்றுள் கடைப்பட்டதே தலையாயதாம், தமிழின் தோற்ற வளர்ச்சிகளையும், சொல்வளத்தையும் தூ-மையையும் காட்டுதலின்.

இனி, உண்மையானஆரா-ச்சிக்கு, மதிக்கூர்மை, பரந்த கல்வி, நடு நிலைமை அஞ்சாமை, தன்னலமின்மை, மெ-யறியவா என்னும் ஆறும் இன்றியமையாத திறங்களாதலால், அவற்றை ஒருங்கேயுடையாரையே ஆரா-ச்சிப் பதவிக்கு அமர்த்துவதும், முதன்மையாகக் கவனிக்க வேண்டு வதொன்றாகும்.

கோடிக்கணக்காகப் பணந்தொகுத்தும், வெளிநாட்டு விடை முகவர் (Delegates) நானூற்றுவர் வந்தும், 2ஆம் உலகத் தமிழ் மாநாடு தமிழகத்தில் மறைமலையடிகள் வாழ்ந்த சென்னையில் நடந்தும், குளிக்கப் போ-ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல் தமிழுக்குக் கேடாகவே முடிந்தது. இதற் குக் கரணியம் மறைமலையடிகள் கூட்டத்தால் நடத்தப்பெறாமல் வையாபுரி கூட்டத்தால் நடத்தப்பட்டதே.

## 3. முடிபு

உலகில் முதன்முதல் மொழியமைத்தவனும் மொழிநூல் கண்டவனும் தமிழனே. இதற்குச் சான்றாக, உலகிற்கு மொழிநூல் கற்பிக்கும் பணி மீண்டும் தமிழன் கைக்கு வந்துள்ளது.

தமிழ் குமரிநாட்டில் தோன்றிய உலக முதன்மொழிமட்டுமன்று முதற்றா- மொழியும் உயர்தனிச் செம்மொழியுமாகும்.

"தமிழுக்குப் புறம்பான மொழிகளை ஆரா-ந்து சொல்கிறேன். தமிழுக் குள்ள சிறப்பு வேறு எந்த மொழிக்கும் இல்லை" என்று மறைமலை யடிகள் கூறியது முற்றும் உண்மையே,

கி.மு. 1000 ஆண்டுகட்கு முன் தென்னாட்டிற்குக் குடிவந்த ஆரிய வகுப்பினரான பிராமணர், தமிழரின் வேளாண்மை மடத்தையும் தமிழவேந் தரின் முந்தியற் பேதைமையையும் கண்டு, தம் வெண்ணிறத் தையும் தம் முன்னோர் மொழியின் மூச்சியல் முழங்கொலிச் சிறப்பையும் துணைக்கொண்டு, தாமும் தம் வழியினரும் என்றும் தலைமையாயிருந்து இன்புறற்பொருட்டு, தம்மை நிலத்தேவரென்றும் தம் முன்னோர் மொழியைத் தேவமொழியென் றும் கூறி யேமாற்றித் தமிழரைத் தமக்கு அடிமைப்படுத்தி, அதற்கு அரணாகத் தமிழையும் வழிபாட்டிற்குத் தகாத மொழியென்று தள்ளிச் சமற்கிருதத்திற்கு அடிப்படுத்திவிட்டனர்.

அறிவாரா-ச்சியும் உரிமையுணர்ச்சியும் விடுதலை வேட்கையும் மிக்க இக்காலத்தில் தன்மானத் தமிழர் தலைதூக்கும்போது, ஆரியப் பகைவர் குல வகையில் முன்போல் ஏமாற்ற எள்ளளவும் இடமின்மையால் தம் அடிவருடி யாரைத் துணைக்கொண்டு, தமிழரை முன்னேற்றவடிப்படை யான மொழித் துறையில் மட்டந்தட்டப் பார்க்கின்றனர். அதற்காகவே குமரிநாட்டுத் தமிழ்த் தோற்றத்தை மறைத்து, தமிழரைக் கிரேக்க நாட்டி னின்று வந்தவராகவும் கலவையினத்தாராகவும் ஆரிய ரால் நாகரிகப் பட்டவராகவும் காட்டி, வரலாற்றைத் தலைகீழாகவும் தவறாகவும் வரைந்து வருகின்றனர்.

மேலையர் இற்றை அறிவியல்களில் மேலோராயினும் தமிழைத் தமிழர் வாயிலாகக் கல்லாமையானும், பிராமணர் தமிழையும் தமிழரையும் பற்றித் தாழ்த்தி யெழுதியிருப்பதை முற்றும் நம்புவதானும், இற்றை நேற்பரப்பான சூழ்நிலைகள் உண்மைக்கு மாறாயிருப்பதை ஆ-ந்தறி யாமையானும், குமரி நாட்டுத் தமிழனை நண்ணிலக் கடற்கரையானென்று வரலாற்றைத் தலை கீழாக வைத்து நோக்குதலானும், தமிழரின் பெருமையைச் சரிவர உணரா திருக்கின்றனர்.

தமிழன் பிறப்பில் தாழ்ந்தவன் என்றும், கைத்தொழிற்கும் பிராமணனுக் கும் தொண்டு செ-வதற்குமே கடவுளாற் படைக்கப்பட்டவன் என்றும், கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகக் கற்பிக்கப்பட்டு வந்ததன் விளைவாக, பழந்தலை முறையிற் பெரும்பான்மையரும் புதுத்தலைமுறையிற் சிறு பான்மையரும், பகுத்தறிவு தன்மானம் நெஞ்சுரம் ஆகிய மூவகக் கரண வியல்புகளையும் அறவே இழந்துள்ளனர். அதனால், தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களும் அரசும் தமிழை வடமொழியினின்று மீட்டு வளர்க்கவும் வளம்படுத்தவும் முற்றும் ஆற்றலில்லாதனவா யிருக்கின்றன.

இந் நிலையில், தமிழை மீட்டற்கும் மீண்டும் அரியணையில் அமர்த் தற்கும், புலமக்களும் பொதுமக்களும் சேர்ந்த மாநிலத் தமிழ்க்கழக அமைப்பு இன்றியமையாததாகின்றது. இக் கழகம், நாளடைவில் வெளி நாட்டுத் தமிழ் மன்றங்களும் இணைக்கப்பட்டு உலகத் தமிழ்ப் பெருங் கழகமாக மாறல் வேண்டும்.

“தூங்கினவன் கன்று சேங்கன்று” என்பதற்கேற்ப, மறைமலையடிகள் கூட்டத்தார் உலகத் தமிழ்மாநாடு நடத்தாதிருந்தமையால் வையாபுரி கூட்டம் அவ் வுரிமையைக் கவர்ந்து ஈருலகத் தமிழ் மாநாடுகளையும் நடத்தித் தமிழைத் தன் விருப்பம்போற் கெடுத்துவிட்டது.

ஆதலால் இனி ஏற்படவிருக்கும் மறைமலையடிகள் கூட்டத்தின் உலகத் தமிழ்ப் பெருங்கழமே, எதிர்கால உலகத் தமிழ் மாநாடுகளையும் கருத் தரங்குகளையும் கூட்டி நடத்துதல் வேண்டும். அதற்கு முன்பே, தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டத்தினின்று வண்ணனை மொழிநூலும் ஆட்சித் திட்டத்தினின்று வையாபுரிகளும் வரையறவாக விலக்கப்படல் வேண்டும். இதற்கு மொழிப்புரட்சி இன்றியமையாதது.

இற்றை மாணவரே எதிர்காலக் குடிவாணரும் அரசினருமாதலால், தமிழ மாணவரே உலகத் தமிழ்ப் பெருங்கழக அமைப்பிலும் பணியிலும் பேரளவாக ஈடுபடல் வேண்டும்.

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்பதே தமிழரின் வாழ்க்கை அடிப்படை நெறிமுறையாதலால், தமிழ்நாட்டுப் பிராமணர் தம் முன்னோ ரின் தவற்றை யுணர்ந்து மனமாறித் தமிழ்நாடு வாழத் தமிழரொடு கூடி வாழ்ந்து (“When you are at Rome, do as Rome does.”) நக்கீரரும் பரிதிமாற் கலைஞனாரும்போல் தூய தமிழராகித் தமிழை வளர்த்து, உடன் பிறப்புப்போல் உளமொத்து என்றென்றும் இன்புறுவாராக.

ஆரிய வேடரின் அயர்ந்தனை மறந்தெனச்
சீரிய மறைமலை செந்தமிழ் உணர்த்தவிட்
டோரின மாயர சுறுந்தமி ழினமே.

குமரி நிலமொழியைக் கூறுந் தமிழன்
குமரி வரலாறு கொண்டே – குமரித்
தமிழையுந் தன்னையுந் தாங்கித்தற் காக்கும்
அமரிலும் வெல்லும் அறி.

பண்பட்ட செந்தமிழாற் பைந்தமிழா முன்னேறக்
கண்கொட்டுங் காலுங் கவலையுறேல் – புண்பட்டும்
மாறா யிருப்பவெலாம் மாற்றிப் புரட்சிசெயச்
சூறா வளிபோற் சுழன்று.

வண்ணனைக் கூற்று வழூஉ மொழியியலை
விண்ணவர் போற்றினும் வேண்டற்க – எண்ணிப்
பகுத்தறிவா லந்நூல்செ– பைந்தமிழ்க் கேட்டை
வகுத்தவர லாற்று வழி.

முப்பல் கலைக்கழக முட்டாத் தமிழ்த்துறையும்
செப்புத் தனித்தமிழர் சேர்ந்திடுக – தப்பின்
அடியோடு முக்கழகும் ஆரியம் நீங்கி
முடிசூட முத்தமிழ் முந்து.

**(முற்றும்)**

குறிப்புகள்